
# ஈழமுரசு®

15 ஒக்டோபர் 2023 | 14 நவம்பர் 2023 | முரசு 30






தரம், சுவை, இவை
அனைத்தும் ஒழுங்கு சேரப்பெற்றதே
நந்தி **Mark** தயாரிப்புகள்...

Nandhi™

VS·CO Cash & Carry




**France இல்அதிக**
**காய்கறி வகைகளை**
**இறக்குமதிசெய்து விற்பனை**
**செய்பவர்கள்**

197, Rue du Faubourg Saint - Denis 75010 Paris France

Tél: (+33) 0140347165 / Email: vsco@vsco.fr

# உள்ளே...

- காலத்திற்கு ஏற்ப, வரலாற்றுக் கட்டாயத்திற்கு அமைய, எமது போராட்ட வழிமுறைகள் மாறலாம். எமது போராட்ட இலட்சியம் மாறப் போவதில்லை
- எங்கே செல்கின்றோம்..?
- வீரம் படைத்த வரலாறு
- போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்பட வேண்டும்?
- ஈழத் தமிழ்மக்கள் மத்தியில் அதிகரித்தளவில் நிகழும் புலப்பெயர்ச்சி அலை!
- தமிழர் தாயகத்தை தொடர்ந்தும் ஆக்கிரமிக்கும் பௌத்த விகாரைகளும் புத்தர்சிலைகளும்
- உளவாளிகளின் கதை
- மாறாத வடுவை ஏற்படுத்திய இந்திய இராணுவத்தின் மிகக் கொடூரமான முதலிரண்டு படுகொலைகள்
- இஸ்ரேல் – ஹமாஸ் யுத்தத்திற்கு எப்போது முடிவு?
- புலிகளின் தங்கம்.... இதனால் தமிழர்களின் நிலங்கள் பாதிக்கப்படாதா...?
- தாயகத்திலும் புலத்திலும் சிதைக்கப்படும் தமிழ்த்தேசிய தலைமுறைகள்!
- இஸ்ரேலின் புதிய வழி ஊடுருவல்

இன்னும் இன்னும்...











# தலைவரும் தமிழீழமும்
# வரலாற்றில் ஓர் அற்புதமான தருணம்



# எமது நிலம் எமது வாழ்க்கை





**ஈழமுரசு**

"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

**"Eelamurazu"**
**JOURNAL TAMOUL**
Mensuelle Gratuit

**EELAMURAZU**
**BP 48**
**93151 Le Blanc Mesnil PDC, France**
**Port: 00 33 781 808 116**

இணையத்தளம்
**www.eelamurazu.com**
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

Redacteur: K.Jeisanthar
பொறுப்பாசிரியர்: கி.ஜெய்சந்தர்

**ஆசிரியர் பீடம்**
காந்தரூபன் (வடதமிழீழம்)
எழுவான் (தென் தமிழீழம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
அகரன் (பிரான்ஸ்)

**வடிவமைப்பு**
கோபி (பிரான்ஸ்)
சுஜி (பிரான்ஸ்)
சுதன் (பிரான்ஸ்)

**அட்டைப்படம்**
சுஜி (பிரான்ஸ்)
கோபி (பிரான்ஸ்)

**விளம்பரம் / விநியோகம்**
அருளப்பு (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

**பிரித்தானியா**
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

**வருட சந்தா விபரம்**
பிரான்ஸ் 66€
ஐரோப்பா மற்றும் ஏனைய நாடுகள் 79€

இணையத்தளம்
www.eelamurazu.com


**குறிப்பு:**

இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.



## காலத்திற்கு ஏற்ப, வரலாற்றுக் கட்டாயத்திற்கு அமைய

## எமது போராட்ட வழிமுறைகள் மாறலாம்

# எமது போராட்ட இலட்சியம் மாறப் போவதில்லை

*நோர்வே அனுசரணையுடன் சிறீலங்காவுடன் செய்துகொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையின் பின்னர் 2002 ஆம் ஆண்டு மாவீரர் நாளன்று தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரை. சிறீலங்காவின் இன அழிப்புப் போருக்கு உலக நாடுகள் முண்டுகொடுத்து நின்றதை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்திய தலைவர், அதே சர்வதேச நாடுகள் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வுகாண முன்னெடுத்துள்ள சமாதான முயற்சிகளை வரவேற்கவும் தவறவில்லை. எனினும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை மறுக்கப்படும்போது, சமாதானப் பேச்சுக்களை, தமது சுயநல அரசியல் நோக்கங்களுக்காகச் சிங்களப் பேரினவாத சக்திகள் குழப்பிவிட்டால், அது தமிழ் மக்களைத் தனியரசுப் பாதையில் இட்டுச் செல்லும் என்பதையும் தலைவர் அவர்கள் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.*

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே,

இன்றைய நாள் ஒரு புனித நாள். எமது மாவீரர்களின் நினைவு நாள். எமது இனத்தின் இருப்பிற்காக, தமது இன்னுயிரை ஈகம் செய்த உன்னதமானவர்களை, எமது நெஞ்சத்தின் நினைவாலயத்தில் நாம் நினைவு கூரும் நன்நாள்.

விடுதலை என்பது வாழ்வின் அதி



யுயர்ந்த விழுமியம். அந்த விழுமியத்தை இலட்சியமாக வரித்து, அதற்காக வாழ்ந்து, அதற்காகப் போராடி, அதற் காக மடிந்த எமது மாவீரர்கள் மகத் தான மனிதப் பிறவிகள். அவர்களது வாழ்வும் வரலாறும் எமது வீர விடு தலைக் காவியத்தின் உயிர் வரிகள்.

மாவீரர்களே, தமிழர் தேசம் உங்க ளுக்குத் தலைவணங்குகிறது. உங்களது தற்கொடையால் தமிழீழ மக்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றார்கள். உங்க ளது இரத்தத்தாலும், வியர்வையாலும், உங்களது இலட்சிய உறுதியாலும் கட்டியெழுப்பப்பட்ட எமது விடுதலை இயக்கம், இன்று யாராலும் வெற்றி கொள்ள முடியாத மாபெரும் போராட்ட சக்தியாக உலகப் புகழீட்டி நிற்கிறது. போர் அரங்கில் நீங்கள் படைத்துச் சென்ற மகத்தான சாதனைகளையே இன்று உலகரங்கில், நாம் அரசியல் வெற்றிகளாக அறுவடை செய்து வரு கின்றோம்.

இன்று உலகம் மாறி வருகிறது. உலக ஒழுங்கும் மாறி வருகிறது. உலக நாடுக ளின் உறவுகளும் மாறி வருகின்றன. மனித சமுதாயம் முன்னென்றும் காணாத புதிய சவால்களுக்கு முகம் கொடுத்து நிற்கிறது. இன்றைய உலக நிதர்சனத்தை, அதன் யதார்த்தப் புறநிலைகளை நாம் உதாசீனம் செய்ய முடியாது. இன்றைய காலத்தையும், இக் காலத்தில் கட்ட விழும் சூழலையும் நாம் ஆழமாகப் புரிந்து, கால நிலை மாற்றங்களுக்கு ஏற்ப, எமது விடுதலைப் பாதையை செப்பனிடுவது அவசியம். இன்றைய காலத்தின் தேவை அது. உலகப் போக் குடன் முரண்படாது, உலக வரலாற் றின் ஓட்டத்திற்கு இசைவாக, நாமும் எமது போராட்ட வரலாற்றை முன் நகர்த்திச் செல்வதே விவேகமானது. இன்றைய வரலாற்றின் கட்டாயமும் அதுவே.

எமது விடுதலைப் போராட்டம் கால்நூற்றாண்டுகால வரலாறாக நீட்சி பெற்றுச் செல்கிறது. இருபது ஆண்டுக ளுக்கு முன் இன்றைய நாளில், எமது முதலாவது மாவீரன் களப் பலி ஆகிய தைத் தொடர்ந்து இன்று வரை பல்லா யிரக் கணக்கில் எமது போராளிகள் விடுதலைப் போரில் களமாடி வீழ்ந்திருக் கிறார்கள். எமது இனத்தைப் பேரழிவி லிருந்து பாதுகாத்து, எமது தாயக நிலத்தை அந்நியனிடமிருந்து மீட்டெ டுக்க எமது விடுதலை இயக்கம் அளப் பரிய அர்ப்பணிப்புகளைச் செய்துள் ளது. எமது மாவீரர்களின் இம் மகத் தான தியாகங்களால், எத்தனையோ தடவைகள் நாம் பேரழிவுகளின் விளிம் பிலிருந்து மீண்டிருக்கின்றோம். மரணத் தின் வாயிலுக்குச் சென்று மறுபிறவி எடுத்திருக்கின்றோம். வல்லாதிக்க சக்தி களின் தலையீடுகளைத் தனித்து நின்று தகர்த்திருக்கின்றோம். எமது விடுதலை இயக்கம் இன்று வானளாவ வளர்ந்து நிற்கிறது. நிமிர்ந்து நிற்கிறது. எமது இயக்க விருட்சத்தின் வேர்களும் விழுது களுமாக நிற்பவர்கள் எமது மாவீரர் களே.



எனது அன்பார்ந்த மக்களே,

இன்று எமது விடுதலைப் போராட்டம் ஒரு புதிய வளர்ச்சிப் பாதையில், ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தில் காலடி வைத்திருக்கிறது. என்றுமில்லாதவாறு இன்று ஒரு புதிய சவாலை நாம் சந்தித்து நிற்கின்றோம். போருக்கு ஓய்வு கொடுத்து, சமாதான வழியில், சமரசப் பேச்சுக்கள் வாயிலாக எமது மக்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். நாம் வன்முறையில் பற்றுக் கொண்ட போர் வெறியர் என்றும் சமாதானத்தின் விரோதிகள் என்றும், காலம் காலமாக சிங்களப் பேரினவாதிகள் மேற்கொண்டு வந்த பரப்புரையைப் பொய்யாக்கும் வகையில் நாம் நேர்மையுடனும் உறுதியுடனும் சமாதான வழிமுறையைத் தழுவி நிற்கின்றோம்.



ஆயுத வன்முறையில் ஆசைகொண்டு நாம் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. இன அழிவை இலக்காகக் கொண்ட இனவாத ஒடுக்குமுறையின் உச்சத்தில், அந்நிய இராணுவ அடக்குமுறை சகிக்க முடியாத அளவிற்குத் தீவிரமடைந்த கட்டத்திலேயே நாம் ஆயுதம் ஏந்தினோம். எமது மக்களின் உயிரைக் காக்கவும், எமது மக்களின் உரிமையை நிலை நாட்டவும், எமது இயக்கம் மேற்கொண்ட ஆயுதம் தரித்த விடுதலைப் போரை பயங்கரவாதமாகச் சிங்கள அரசுகள் சித்தரித்தன. தமிழரின் உரிமைப் போரைத் திரிபுபடுத்தி, இழிவுபடுத்தி உலகெங்கிலும் விசமப் பிரச்சாரங்கள் முடுக்கிவிடப்பட்டன. இப்பொய்யான பரப்புரையை நம்பி, பல உலக நாடுகள் எமது அமைப்பிற்குத் தடை விதித்தன.



பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு உலக அரங்கிலிருந்து நாம் ஓரம் கட்டப்பட்டோம். உலக நாடுகள் ஒன்று திரண்டு எதிரியின் போர்த் திட்டத்திற்கு முண்டு கொடுத்தன. அனைத்து உலகத்தினதும் ஆதரவும், ஆயுத உதவியும் கிட்டியதால் மூர்க்கம் கொண்ட எதிரி போரைத் தீவிரப்படுத்தினான். நாம் தனித்து நின்று போருக்கு முகம் கொடுத்தோம். மக்களின் ஆதரவு மட்டும் எமக்கு மலையாக நின்றது. நாம் அலையலையாகத் திரண்டெழுந்து ஆக்கிரமிப்புப் படைகளுடன் மோதினோம். போர்க் கலையில் எமது வீரர்கள் படைத்த அபாரமான சாதனைகள் உலக இராணுவ நிபுணர்களையே திகைப்பில் ஆழ்த்தின.

போரிற்புலிகளை வெற்றி கொள்ள முடியாது என்பதனைச் சிங்களத் தேசமும் உலகமும் உணர்ந்து கொண்டன. இந்தச் சூழ்நிலையில்தான், அதாவது எமது போராட்ட வல்லமையை நிரூபித்துக் காட்டி, எமக்குச் சாதகமான இராணுவ சமநிலையில் நின்றபடியே நாம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்தோம். சமாதானத்தில் எமக்கு உண்மையான பற்றுண்டு என்பதை உலகத்திற்கு உணர்த்திக் காட்டவே நாம் இராணுவ மேலாதிக்க நிலையில் நின்றுகொண்டு அமைதி வழியைத் தழுவினோம்.




போருக்கு ஓய்வு கொடுக்கும் விடயத்திலும் நாமே முன்முயற்சிகளை எடுத்தோம். ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தப் பிரகடனம் செய்து, அரசாங்கத்தை அமைதி வழிக்கு அழைத்தோம். சமாதானத்திற்கான மனுவைப் பெற்று ஆட்சி பீடம் ஏறிய புதிய அரசு, எமது போர்நிறுத்த அறிவிப்பை ஏற்றுக் கொண்டது. இவ்வாண்டு பெப்ரவரி 23ம் திகதியிலிருந்து இரு தரப்பும் இணங்கிய போர் நிறுத்தம் சர்வதேச நாடுகளின் கண்காணிப்புடன் செயலுக்கு வந்தது.

இப் போர்நிறுத்தம் கடந்த ஒன்பது மாதங்களாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. சிங்கள ஆயுதப் படையினரிற் சில பிரிவினரும், இனவாத சக்திகளும், சமாதான விரோதிகளும் போர் நிறுத்தத்தைக் குழப்பி, மோதலை ஏற்படுத்த பல தடவைகள் முயன்றனர். எத்தனையோ ஆத்திரமூட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எமது மக்கள் பலர் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். ஆயினும், எமது இயக்கம், ஒழுக்கம் கட்டுப்பாட்டை இறுக்கமாகக் கடைப்பிடித்து, அமைதியை குலையவிடாது சமாதானத்தைப் பேணி வருகிறது. சமாதானப் பாதையில் எமக்குள்ள உண்மையான உறுதிப்பாட்டிற்கு இதுவொரு நல்ல எடுத்துக்காட்டு.


எமது மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காண்பது சாத்தியமாயின் அதனை முயன்று பார்ப்பதில் முழுமனதுடனும், நேர்மையுடனும் செயற்பட நாம் தயாராக இருக்கின்றோம். எமது மக்கள், தமது தாயக மண்ணில், தம்மைத் தாமே ஆட்சி புரியும் உரிமை உடையவர்களாக, சுதந்திரத்துடன் கௌரவமாக வாழவேண்டும் என்பதே எமது போராட்ட இலட்சியம். இந்த இலட்சியம் சமாதான வழியிற் கைகூடுமானால் அந்த வழியைத் தழுவ நாம் என்றுமே தயாராக இருக்கின்றோம்.

சமாதான வழிமுறை தழுவி, எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க நாம் என்றுமே தயங்கியதில்லை. திம்புவில், டில்லியில், கொழும்பில், யாழ்ப்பாணத்தில், இப்பொழுது தாய்லாந்திலாக நாம் பல தடவைகள், பல்வேறு வரலாற்றுச் சூழல்களிற் பேச்சுவார்த்தையிற் பங்குபற்றி வந்திருக்கின்றோம். முன்னைய பேச்சுக்கள் எல்லாமே தோல்வியிலேயே முடிந்தன. முன்னைய சிங்கள அரசுகளின் கடும்போக்கும் நேர்மையற்ற அரசியல் அணுகுமுறைகளுமே தோல்விக்கு காரணம். எனினும், திரு. ரணில் விக்கிரமசிங்காவின் இன்றைய அரசாங்கம் நேர்மையுடனும் துணிவுடனும் தமிழரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முனைகிறது.

உறுதியான அடித்தளத்திற் கட்டியெழுப்பப்பட்ட போர்நிறுத்தமும், அதனை மேலும் வலுப்படுத்தத் சர்வதேசக் கண்காணிப்புக் குழுவினரின் முயற்சிகளும் சமாதான அணுகுமுறைக்கு உரமேற்றி வருகின்றன. அத்தோடு, மிகவும் சாதுரியமாகவும், சாணக்கிய



மாகவும் நோர்வே அரசு கடைப்பிடிக்கும் அனுசரணை முறையானது இன்றைய பேச்சுக்கள் முன்னேறிச் செல்வதற்கு பேருதவியாக இருந்து வருகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக, என்றுமில்லாதவாறு சர்வதேச அரசுகள் இச் சமாதான முயற்சியில் காட்டிவரும் ஆர்வமும், அக்கறையும், ஊக்குவிப்பும் இரு தரப்பினருக்கும் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கொடுத்து வருகின்றன. ஒரு வலுவான சமாதான அடித்தளத்தில் நிலையூன்றி நின்றவாறு, படிப்படியாக, கட்டம் கட்டமாக, பரஸ்பர நம்பிக்கையை வளர்த்தபடி பேச்சுக்களை முன்நகர்த்திச் செல்வதே சாலச் சிறந்தது.




இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக முடிவில்லாது தொடர்ந்த கொடிய போரின் விளைவாக எமது மக்கள் பாரிய வாழ்நிலைப் பிரச்சினைகளை எதிர்கொண்டு நிற்கின்றார்கள். தமிழர் தேசத்தின் சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புகள் சிதைந்து கிடக்கின்றன. தமிழரின் நகரங்களும், பட்டினங்களும், கிராமங்களும் தரைமட்டமாகக் கிடக்கின்றன. வீடுகள், கோவில்கள், பாடசாலைகள் அழிந்து கிடக்கின்றன. காலம் காலமாக இந்த மண்ணில் நிலைத்து நின்ற ஒரு பண்டைய நாகரீகம் வேரோடு சாய்க்கப்பட்டிருக்கிறது.

இச் சிதைவுகள், அழிவுகள் மத்தியிலிருந்து எமது மக்கள் மீண்டும் தமது சமூகப் பொருளாதார வாழ்வை மீளக் கட்டி எழுப்புவது என்பது இலகுவான காரியமல்ல. இதுவொரு பிரமாண்டமான மனிதாபிமானப் பிரச்சினை. இப் பிரச்சினையைச் சர்வதேச சமூகம் அனுதாபத்துடன் அணுக வேண்டும். அழிந்து கிடக்கும் தமிழர் தேசத்தின் புனர்வாழ்வுக்கும் புனர்நிர்மாணத்திற்கும் உதவியளிக்க வெளிநாடுகள் பல முன்வந்துள்ளமை எமக்கு நிம்மதியைத் தருகிறது.



தமிழர் தாயகத்தில் அமைதி நிலை தோன்றியபோதும் இயல்பு நிலை தோன்றவில்லை. ‘உயர் பாதுகாப்பு வலையங்கள்’ என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்களை, சமூக, பொருளாதார, பண்பாட்டு மையங்களை சிங்கள ஆயுதப் படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன. சிறிய அளவிலான புவியியற் பரப்பும், குடிசன நெரிசலும் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாட்டை நாற்பதினாயிரம் படையினர் ஆக்கிரமித்து நிற்கின்றனர். எமது மக்கள் தமது இயல்பு வாழ்வை நடத்த முடியாதவாறு மூச்சுத்திணறும் ஆக்கிரமிப்பு. என்றுமே ஒரு பதட்ட நிலை.

தமிழர் பண்பாட்டின் இதய பூமியான யாழ்ப்பாணம் ஒரு திறந்த வெளிச் சிறையாக மாற்றப்பட்டிருக்கின்றது. இங்கு எமது மக்களைச் சிங்கள இராணுவம் தனது பாதுகாப்புக் கேடயங்களாகவே பாவித்து வருகிறது. வீடுகளும், வீதிகளும், கிராமங்களும் இராணுவ ஆக்கிரமிப்பில் விழுங்கப்பட்டிருப்பதால் இடம் பெயர்ந்த பல்லாயிரம் மக்கள் தமது சொந்த இருப்பிடங்

களுக்கு திரும்ப முடியாது அவதிப்படுகிறார்கள். இப் பிரச்சினைக்குத் தீர்வு காணாத வரை யாழ்ப்பாணத்தில் சமூக அமைதியும் இயல்பு நிலையும் தோன்றுவது சாத்தியமில்லை.

போரை முடிவுக்கு கொண்டு வந்து, போரினாற் பாதிக்கப்பட்ட எமது மக்களின் அவசர, அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை பேச்சுக்களின் ஆரம்ப கட்டத்தில் தீர்த்து வைக்க வேண்டும் என்பதே அன்றும் சரி இன்றும் சரி எமது நிலைப்பாடாக இருந்து வருகின்றது. எமது நிலைப்பாட்டை முன்னைய அரசு நிராகரித்ததன் காரணமாகவே அன்றைய சமாதான முயற்சி தோல்வி கண்டது.

ஏதோ நாம் தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தொடுவதற்குப் பயந்து, அன்றாடப் பிரச்சினைகளை வலியுறுத்துவதாக முன்னாள் அரசு தவறாகக் கருதியது. ஆயினும் இன்றைய அரசாங்கம், பேச்சுக்களின் ஆரம்பக் கட்டத்தில் எமது மக்களின் அவசரமான வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வந்து நடவடிக்கைகளை எடுத்து வருவது ஆக்கபூர்வமான அறிகுறியாகும்.

பேச்சுவார்த்தையின்போது, எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் வரை, சகல விடயங்களையும் பேசுவதற்கு நாம் தயார். ஆயினும் பேச்சுக்கள் எவ்வித நிபந்தனைகளும் நிர்ப்பந்தங்களும் இன்றி, வரம்புகள் வரையறைகள் இன்றி, காலக் கட்டாயமின்றி, சுதந்திரமாக நடைபெறுவதையே நாம் விரும்புகின்றோம். ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டு எல்லைக்குள் பேச்சுக்கள் நிகழ்த்தப்பட வேண்டுமென வற்புறுத்துவதோ, அன்றி நிர்ப்பந்திப்பதோ எமது மக்களின் அடிப்படை அரசியற் சுதந்திரத்தையும், தேர்வையும் மீறுவதாக அமையும். தமது அரசியல் தகைமையையும், தமது சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வையும் நிர்ணயிப்பது எமது மக்களின் அடிப்படையான அரசியல் உரிமையாகும். சுயநிர்ணய உரிமையின் சாராம்சமும் இதுதான்.

ஐ.நா. சாசனத்திலும், பிரகடனங்களிலும் குறிப்பிடப்படும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை மையப் பொருளாகக் கொண்டே எமது போராட்ட இலட்சியம் நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது. அன்றும் சரி, இன்றும் சரி, சுயநிர்ணய உரிமைக்கான எமது போராட்ட இலட்சியத்தில் நாம் உறுதி பூண்டு நிற்கின்றோம். தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழரின் சுயநிர்ணய உரிமை ஆகியனவையே எமது அரசியல் இலட்சியத்தின் அடிப்படைகள். திம்பு விலிருந்து தாய்லாந்து வரை இந்த அடிப்படைகளையே நாம் வலியுறுத்தி வருகின்றோம். இம் மூலக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடு.

தனித்துவமான ஒரு மொழி, பண்பாடு, வரலாறு, நன்கு வரையறுக்கப்பட்ட ஒரு தாயக நிலம், இன அடையாள உணர்வு போன்ற பண்புகளை உடையவர்கள் என்பதால், எமது மக்கள் ஒரு தேசிய இனமாக, ஒரு மக்கள் சமூகமாக அமைந்துள்ளனர். ஒரு தனித்துவமான மக்கள் சமூகம் என்ற ரீதியில் எமது மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்கள். சுயநிர்ணய உரிமை என்பது உள்ளான, புறமான இரு அம்சங்களைக் கொண்டது. உள்ளான சுயநிர்ணயம் என்பது ஒரு மக்கள் சமூகத்தின் பிரதேச சுயாட்சி உரிமையை வலியுறுத்துகின்றது.

தமிழ் மக்கள், தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த பாரம்பரிய மண்ணில், அந்நிய சக்திகளின் ஆதிக்கம், தலையீடு இன்றி, சுதந்திரமாக, கௌரவமாக வாழ விரும்புகின்றார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டைப் பேணி, தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது இன அடையாளத்தைப் பாதுகாத்து வாழ விரும்புகின்றார்கள். தமது தாயக மண்ணில், தம்மைத் தாமே ஆளும் சுயாட்சி உரிமையோடு வாழ விரும்புகின்றார்கள். இதுவே எமது மக்களின் அரசியல் அபிலாசை.

உள்ளான சுயநிர்ணயத்தின் அர்த்த பரிமாணம் இதில்தான் அடங்கியிருக்கிறது. உள்ளான சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில், எமது தாயக நிலத்தில், எமது மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய பூரண சுயாட்சி அதிகாரத்துடன் ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டால், நாம் அத்திட்டத்தை சாதகமாக பரிசீலனை செய்வோம். ஆனால், அதே வேளை, எமது மக்களுக்கு உரித்தான உள்ளான சுயநிர்ணயம் மறுக்கப்பட்டு, பிரதேச சுயாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால் நாம் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

இனவாதமும், இனவாத ஒடுக்குமுறையுமே பிரிவினைவாத அரசியலுக்கும் கிளர்ச்சிகளுக்கும் மூல காரணமாக அமைகின்றன. நிலையான சமாதானத்தையும், இன ஒருமைப்பாட்டையும், பொருளாதார மேம்பாட்டையும் சிங்கள மக்கள் விரும்புவார்களானால் இனவாத சக்திகளை இனம் கண்டு ஒதுக்க வேண்டும். தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண முழு மனதுடன் ஒத்துழைக்க வேண்டும். தமிழ் மக்கள் தமது தாயகத்தில் சுயாட்சி அதிகாரமுடைய ஆட்சியை நிறுவி, தம்மைத் தாமே ஆளுவதற்கு சிங்கள மக்கள் தடையாக இருக்கக் கூடாது. தமிழர்களுடன் சமாதான சகவாழ்வை நடத்துவதா அன்றி தமிழர்களை பிரிந்து செல்ல நிர்ப்பந்திப்பதா என்பது சிங்கள தேசத்தின் அரசியற் போக்கில்தான் தங்கியிருக்கிறது.

நம்பிக்கையூட்டும் நல்லெண்ண சூழ்நிலையில், அரசு-புலிகள் மத்தியிலான பேச்சுக்கள் முன்னேற்றமடைந்து செல்வது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த சமரசப் பேச்சுக்களில் உலக நாடுகள் காட்டும் ஆர்வமும், யுத்தத்தால் சிதைந்து கிடக்கும் தமிழர் தேசத்தை மீளக் கட்டியெழுப்பி, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு புனர்வாழ்வளிக்க முன்வந்திருப்பதும் எமக்கு உற்சாகத்தைத் தருகிறது. நோர்வே அரசின் அனுசரணையுடன் நடைபெறும் சமாதான முயற்சி வெற்றி பெற வேண்டும் என்பதும், இத் தீவில் வதியும் சகல சமூகத்தினரும் ஒற்றுமையாக, ஒத்திசைவாக ஒன்று கூடி வாழ வேண்டும் என்பதுமே எமது ஆழமான அவா. பெரும் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் உலகத்தின் நல்லாசியுடனும் நிகழ்ந்து வரும் சமாதானப் பேச்சுக்களை, தமது சுயநல அரசியல் நோக்கங்களுக்காகச் சிங்களப் பேரினவாத சக்திகள் குழப்பி விட்டால், அது தமிழ் மக்களைத் தனியரசுப் பாதையில் இட்டுச் செல்லும் என்பது திண்ணம்.

அமைதி வழியில், மென்முறை தழுவி, நேர்மையுடனும் நெஞ்சுறுதியுடனும் நாம் எமது போராட்ட இலட்சியத்தை அடைய முயன்று வருகின்றோம். காலத்திற்கு ஏற்ப, வரலாற்றுக் கட்டாயத்திற்கு அமைய, எமது போராட்ட வழிமுறைகள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப் போவதில்லை.

சத்தியத்தின் சாட்சியாக நின்று, எமது மாவீரர்களின் தியாக வரலாறு எமக்கு வழிகாட்டும். அந்த சத்தியத்தின் வழியில் சென்று, நாம் எமது இலட்சியத்தை அடைவோம் என்பது உறுதி.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.

“ஒடுக்கப்படும் சமுதாயங்களிலிருந்தே வரலாறு படைக்கும் சக்திபெற்ற அபூர்வமனிதர்கள் பிறக்கிறார்கள். எமது சமூகத்திற் பிறந்த அந்த அபூர்வ மனிதர்கள்தான் எமது மாவீரர்கள்.”

– தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்



ஈழமுரசு

# எங்கே செல்கின்றோம்..?

இனத்தின் விடுதலைக்காக மிகப் பெரும் விலைகொடுத்த தமிழினம் இப்போது எதனை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது என்ற பேரச்சம் சூழ்ந்திருக்கின்றது. உலக விடுதலைப் போராட்டங்களுடன் ஒப்பிட்டு நோக்குவதற்கு கொஞ்சம் கூடக் குறைவின்றி மிகப்பெரும் அர்ப்பணிப்புக்களை செய்திருக்கின்றது தமிழினம். விடுதலைக்காக மிகப்பெரும் இழப்புக்களையும் பேரழிவுகளையும் எதிர்கொண்டிருக்கின்றது. சிங்களப் பேரினவாதத்தின் இனப்படுகொலைக் கரங்களை மட்டுமல்ல, உலக ஒட்டுமொத்தக் கொடூரக் கரங்களின் அழுத்தங்களையும் ஒரே நேரத்தில் சந்தித்திருக்கின்றது தமிழினம். எனினும், எத்தனை அழிவுகள், இழப்புக்கள், துயரங்கள் வந்தபோதும் இலட்சியத்தில் ஒரு துளி கூடப் பின்வாங்காமல் இறுதிவரை உறுதியுடன் நின்று போராடியது. தமிழர்கள் இத்தனை பெருமையாக இதனைச் சொல்லிக்கொள்வதற்கெல்லாம் காரணமானவர்கள் எங்கள் உன்னதமான மாவீரர்கள்.

மாவீரர்களே, உலகில் தமிழினம் தலை நிமிர்ந்து வாழ்வதற்கான வழியை ஏற்படுத்தித் தந்தவர்கள். தாங்கள் வீழும் போதெல்லாம் தமிழினம் எழும், விடுதலைக் கனவைச் சுமக்கும், விடுதலையை வென்றெடுக்கும் என்ற நம்பிக்கையோடுதான் அவர்கள் சாவை மகிழ்வோடு அணைத்துக்கொண்டார்கள். ஆனால் தமிழினம் அந்தக் கனவைச் சுமக்கின்றதா? விடுதலையை நோக்கி தொடர்ந்து பயணிக்கின்றதா? என்ற பெரும் கேள்வி நம் முன் இப்போது எழுந்து நிற்கின்றது.

இரத்தமும் வியர்வையும் சிந்தி பெரும் வலிகளைச் சுமந்தபடி இழுத்து வந்த தமிழீழ விடுதலைத் தேர் இப்போது நடுவீதியில் நிற்கின்றது. இதனை அப்படியே விட்டுவிடப்போகின்றோமா அல்லது அதன் இலக்குவரை நகர்த்துவதற்காக உழைக்கப்போகின்றோமா?

உலக வரலாறுகளை ஆழமாகப் படித்தவர் தமிழீழத் தேசியத் தலைவர். வரலாற்றைப் படிக்காமல் வரலாற்றைப் படைக்க முடியாது என்று ஆழமாக நம்பியவர். அதனால்தான், ‘வரலாறு எனது வழிகாட்டி’ என உறுதிபடக் கூறினார். ‘நீ என்ன ஆயுதத்தை ஏந்தவேண்டும் என்பதை எதிரியே தீர்மானிக்கின்றான்’ எனும் தத்துவத்தின் வழியில் தமிழினத்தின் விடுதலையை வென்றெடுக்க ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டப் பாதைதான் சரியானதாக இருக்கும் என்று



அந்த வழியைத் தேர்ந்தெடுத்தார். அவரது வழியில் ஆயிரமாயிரம் போராளிகளும் மக்களும் அணிவகுத்து நின்றனர். எதிரியின் படை பலத்தை தங்கள் ஆன்ம பலத்தால் தகர்த்தெறிந்தனர். வெற்றி நிச்சயம் என வந்த படைகள் எல்லாம் தோல்வி உறுதி எனப் பறந்தோடின. ஈழத் தமிழினத்தை விட பலமடங்கு பலமான எதிரியுடன், சரிசமமாக அமர்ந்து பேரம் பேசுகின்ற வலுவான சக்தியாக தமிழினத்தை மாற்றியமைத்தார்.

கருத்தால் வேறுபட்டு நின்றவர்கள் உட்பட அத்தனை தமிழர்களையும் இனத்தால் ஒன்றுபட வைத்து ஓரணிக்குள் கொண்டுவந்தார். தாயகத்தில் வாழ்ந்தவர்கள் மட்டுமல்ல புலம்பெயர்ந்து வாழ்ந்த விடுதலைப் போராட்டம் காணாத புதிய தலைமுறையும் ஈழ விடுதலையின் கனவைச் சுமந்தது. அடம்பன் கொடியும் திரண்டதால் மிடுக்கானது.

புலம்பெயர்ந்த புதிய தலைமுறையின் எழுச்சி தலைவரையே மகிழ்ச்சிப்படுத்தியது. அதனால்தான் தனது 2008 மாவீரர் தின உரையில், ‘தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன்னெடுத்துவருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்’ என்று வெளிப்படையாகப் பாராட்டி மகிழ்ந்தார்.

ஆனால், முள்ளிவாய்க்கால் பேரவலம் கட்டவிழ்ந்த மூட்டை நெல்லிக்கனிபோல் தமிழர்களின் சிந்தனையை திசைக்கொன்றாய் சிதறுண்டோட வைத்துவிட்டது. மேய்ப்பன் அற்ற ஆடுகளாக ஈழத் தமிழர்கள் இப்போது சிந்தனையில் திசைக்கொன்றாய் சிதறிக்கிடக்கின்றார்கள். எழுச்சிகொண்ட தமிழினம் இன்று சோர்வடைந்து முடங்கிக் கிடக்கின்றது. இவர்களை எழுச்சி கொள்ள வைத்து ஒற்றை மையப்புள்ளியில் மீண்டும் ஒன்றிணைப்பது யார் என்ற பெரும் கேள்வி எழுந்து நிற்கின்றது?

மாடு இளைத்தாலும் கொம்பு இளைக்காது என்பதைப் புரியவைக்கவேண்டிய நேற்றைய தலைமுறை இன்று ஆளுக்கொரு சங்கம், ஊருக்கொரு கட்சி என்று சுயநலத்தில் மிதக்கின்றது. சமூக ஊடகங்களில் கருத்துக்களைப் பதிவேற்றியும் காணொளிகளை மாறி மாறிப் பகிர்ந்துகொண்டும் விடுதலையை வென்றிடலாம் என நம்புகின்றது இன்னொரு கூட்டம். வழிகாட்ட வேண்டியவர்கள் தடம் மாறிப்போகும் போது அடுத்து வரும் தலைமுறை என்ன செய்யும்?

போதைக்கு அடிமையாகப் போய்க் கொண்டிருக்கின்றது ஒரு கூட்டம். உடலுக்கு தீங்கு விளைவுக்கும் என்று கசிப்பு உற்பத்திக்கும் பாவனைக்கும் தடை விதிக்கப்பட்ட மண்ணில் இப்போது உலகெங்கும் இருந்து வந்துகுவியும் போதைப் பொருட்களால் இளம் தலைமுறை சீரழிந்துகொண்டிருக்கின்றது. ‘போரில் சாவடைந்தார்கள்’ என்று செய்தி வந்த மண்ணில் இருந்து, இப்போது ‘போதையில் சாவடைகின்றார்கள்’ என்ற அவலச் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.

மறுபுறம் துப்பாக்கி தூக்கி எதிரியை பந்தாடிய மண்ணில், இப்போது வாளெடுத்து சொந்த உறவுகளையே துண்டாடுகின்றது ஒரு கூட்டம். இந்த அவலங்களில் இருந்து இந்தத் தலைமுறையை மீட்டெடுப்பதற்கு மீட்பர்கள் வரமாட்டோர்களா? என்று ஏங்கும் நிலையில் பெற்றவர்களும் உறவுகளும் ஏங்கியழுகின்ற அவலம் தமிழர் தாயகமெங்கும் புதிய பிரளயமாகி வருகின்றது.

இவர்கள் இப்படியென்றால், குத்துப் பாட்டிற்கும் கூத்தாடிகளுக்கும் பின்னால் அலைமோதுகின்றது இன்னொரு கூட்டம். மாவீரர்களுக்கு துயிலுமில்லம் கட்டி வழிபட்டு வழி வந்தவர்களை கூத்தாடிகளுக்கு இரசிகர் மன்றம் அமைக்கும் மூடர் கூட்டமாக மடைமாற்றும் வேலைகள் தாயகத்தில் மட்டுமல்ல புலம்பெயர்ந்த தேசத்திலும் மிகக் கச்சிதமாகவே நடக்கின்றன. எழுச்சி கொண்ட ஒரு தேசிய இனம் கண்முன்னே சிதைந்து சீரழிந்து கொண்டிருகின்றது. சிந்திக்கத் தெரியாத அல்லது சிந்திக்க முடியாத அடுத்த தலைமுறையை உருவாக்குவதில் எதிரி கங்கணம்கட்டிச் செயற்படுகின்றான்.

தமிழினத்தின் விடுதலையை அடுத்த கட்டம் நோக்கி நகர்த்துகின்ற பாரிய பொறுப்பு இன்றைய இளம் தலைமுறையின் கைகளில்தான் உள்ளது. அந்தப் பொறுப்பை இளம் தலைமுறை அத்தனை இலகுவில் ஊதாசீனம் செய்துவிட முடியாது.

முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்ந்த போது வாய் திறக்காத உலகமெல்லாம் இன்று பலஸ்தீனத்திற்காக கதறியழுகின்றது. தாய் நிலத்தில் தமிழ் மக்கள் சிதைத்தழிக்கப்பட்டபோது மௌனம் காத்த இலங்கைத் தீவெங்கும் கூட பலஸ்தீனர்களின் அழிவிற்காக அழு குரல்கள் கேட்கின்றன. இவர்களுடன் முள்ளிவாய்க்காலில் உயிர் தப்பிய தமிழனும் அங்கே சேர்ந்தேதான் அழுகின்றான். வலியைச் சுமந்தவனுக்கே இன்னொருவன் வலிகள் புரியும்.




ஆனால் தமிழனுக்கு ஒன்று புரிய வேண்டும், தனக்கான விடுதலைக்கு தானேதான் போராடவேண்டும் என்பது. இதுவே உலக நடப்புகள் சொல்லி நிற்கும் பாடம்.

விடுதலையை போராடித்தான் பெறவேண்டும். ஒருபோதும் இரந்து கேட்டுப் பெறமுடியாது. ஈழத்தமிழினம் மீண்டும் பலம் கொண்ட இனமாக மாற்றமடையவேண்டும். பலம் வாய்ந்த இனமாக எழுந்தால் மட்டுமே விடுதலையை வென்றெடுக்க முடியும். அதற்கு அடம்பன் கொடியாக மீண்டும் மிடுக்காகத் திரளவேண்டும்.

தமிழ் இனத்தின் விடுதலைக்காகவே மாவீரர்கள் விதையாக வீழ்ந்தார்கள். வெல்வோம் என்ற நம்பிக்கையிலேயே அவர்கள் ஒவ்வொரு களங்களையும் சந்தித்தார்கள். அவர்களது கனவை நாங்கள் சிதைப்பதென்பது அவர்களுக்கு நாங்கள் புரியம் துரோகம் மட்டுமல்ல, எங்களுக்கு நாங்களே தோண்டிக்கொள்ளும் புதைகுழியும் கூட.

# வீரம் படைத்த வரலாறு

வரலாற்றைப் படிக்கும் இனம், வரலாற்றைப் படைக்கும்



இந்திய இராணுவம் எம் மண்ணை ஆக்கிரமித்திருந்த காலப்பகுதியில், 17.08.1989 அன்று மன்னார்த் தீவில் அமைந்திருந்த இந்திய இராணுவ முகாம் மீதான தாக்குதலின் நினைவாக, 17.08.1991 இல் புலிகளின் குரல் வானொலியில் ஒலிபரப்பான சிறப்பு நிகழ்ச்சியின் வரி வடிவம் இந்த ஆக்கம்.

எம் போராட்ட வரலாற்றில் நிறைந்திருந்த வீரத்தை, விவேகத்தை, வேகத்தை, துணிச்சலை, போர்த் தந்திரத்தை, தெளிவான திட்டமிடலை, கடும் பயிற்சியை, விடாமுயற்சியை, காத்திருப்பை, உறுதியை, தலைமைத்துவச் சிறப்பை, கட்டளைக்குக் கீழ்ப்படியும் பண்பை அழகாக வெளிப்படுத்தும் வரிகள் இவை.

ஈழ விடுதலைப் போரில் இந்திய இராணுவ முகாமொன்றை முழுமையாகத் தாக்கியழித்த ஒரேயொரு தாக்குதல் இது என்ற வரலாற்றுப் பெருமையும் இச் சம்பவத்திற்குண்டு. இந்த ஆக்கத்தை எழுதியவர் இத்தாக்குதலில் பங்கெடுத்த போராளி நிக்சன். இத் தாக்குதலின் நாயகனான மேஜர் சூட்டி 02.08.1990 இல் வாகன விபத்தொன்றில் சாவெய்தி மாவீரனானார். இத்தாக்குதலில் பங்குபற்றிய போராளிகளில் பலர் பின்னாட்களில் வெவ்வேறு சம்பவங்களில் மாவீரராயினர்.

அச்சன்குளம் கிராமம்... 1989 காலப்பகுதியில் இந்திய இராணுவம் கைகோர்த்துக் கொண்டு வலை வீசி எங்களைத் தேடிக்கொண்டிருந்த போது, அயற்கிராமங்களில் எல்லாம் ஆக்கிரமிப்பின் அவலக்குரல் கேட்டுக் கொண்டிருந்த போதெல்லாம் எங்களுக்குச் சிறிதும் தயங்காது புகலிடம் தந்தது அச்சன்குளம் கிராமம். இப்போது நாங்கள் செல்லும் தாக்குதலுக்கு முன்பும் கூட எந்த இந்திய இராணுவச் சிப்பாய்களுக்கும் தெரியாது வாழ்த்துக்கள் கூறி, அந்த மறைவான கடற்கரையால் எங்களை மகிழ்வோடு அனுப்பியதும் அந்தக் கிராமம் தான். இந்தத் தாக்குதலின் பின் வெற்றியோடு திரும்பினால் அந்தக் கடற்கரை மணலில் தான் பாய்விரித்து எடுத்த ஆயுதங்களைக் கணக்குப் பார்ப்போம். சிலவேளை எமக்கு இழப்பு ஏற்பட்டால், எங்களின் உயிரில்லாத உடல்கள் அந்தக் கடற்கரை மணலில் வைத்துத்தான் சுத்தம் செய்யப்படும். அப்படி எம் விடுதலைப் போராட்டத்தோடு இணைந்துவிட்ட அக்கிராமத்திலிருந்து தான் நாங்கள் எங்கள் விசைப்படகுகளில் தூரத்தூர கடலிலே சென்று கொண்டிருக்கிறோம்.

குழுக்களாகப் பிரிக்கப்பட்ட நிலையில் நாங்கள் மூன்று விசைப்படகுகளில் மன்னார்த்தீவு நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம். விசைப்படகின் இரைச்சல்கள் எங்களின் செவிகளுக்கு ஏதோ செய்தி சொல்லிக்கொண்டிருந்தன. இருந்தாலும், அந்த இரைச்சலின் செய்திகளை நாம் பொருட்படுத்தாது எங்களின் தாக்குதலின் வெற்றியை நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். எமது காட்டுமுகாம் ஒன்றினுள், தாக்கவிருந்த இந்திய இராணுவ முகாமின் மாதிரி அமைப்பினுள் நாங்கள் எல்லோரும் போராளிகளாகவும் இராணுவமாகவும் பிரிந்து சண்டையிட்டுப் பயிற்சி பெற்றதுதான் திரும்பத் திரும்ப என் மனதினுள் ஒத்திகை பார்த்துக்கொண்டிருந்தது.

நாம் புதிய போராளிகளாக இயக்கத்தில் இணைந்தபோது பயிற்சிமுகாமில் அன்பாகப் பழகிவந்த மேஜர் சூட்டி அண்ணன், இந்த முகாம் தாக்குதல் பயிற்சியின் போது, தனது கட்டளைகளையும் மீறித் தனித்து முன்னேறிய ஒரு போராளியை இந்தத் தாக்குதல் குழுவிலிருந்து விடுவித்தார். அவர் எவ்

ளவோ கெஞ்சி அழுதும் அவரை அவர் இந்தத் தாக்குதலுக்கு அழைத்துவரவே யில்லை. ஏனென்றால், முகாம் முற்று கையின் போது உணர்ச்சிவசப்பட்டு முன்னேறும் ஒரு போராளியைக்கூட இழந்துவிடக்கூடாது என மேஜர் சூட்டி அண்ணன் எச்சரிக்கையாகவே இருந் தார்.

முன்னுக்குச் சென்றுகொண்டிருந்த எட்வின் விசைப்படகின் அணியத்தில் இருந்த மேஜர் சூட்டி அண்ணன் இடைக் கிடை தனது வோக்கியில் கதைத்துக் கொண்டிருந்தார். அச்சன்குளக் கடற் கரையில் இருந்து புறப்பட்ட நாங்கள் சற்று நேரத்தின் பின் அந்த அமைதி யான மாலைப் பொழுதில் மன்னார்த் தீவு ஐந்து தென்னம்பிள்ளையடிக் கடற் கரையைத் தொட்டுவிட்டோம்.

எமது திட்டத்தின்படி இன்றிரவே தாக்குதல் முடிந்துவிட்டால், விடியும் போதெல்லாம் நாம் எமது முகாமிற்குத் திரும்பிவிடலாம். ஆனால், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், சி.வி.எவ், சிறீலங்கா இராணுவம் என எங்களுக்கு எதிரா கவே நிற்கும் எல்லாக் கூலிப்படைகளை யும் தாண்டி எமது இலக்கான இந்திய இராணுவ முகாமை அன்று எம்மால் நெருங்கவே முடியாது போயிற்று. எமது தாக்குதல் திட்டத்தின் படி பதினைந்து நிமிடத்திற்குள் அந்த ஆஸ்பத்திரியடி இந்திய இராணுவ முகாமைக் கைப் பற்றி விடலாம். ஆனால், அந்தத் தாக் குதல் இலக்கைச் சென்றடைவதற்குத் தான் நாங்கள் நாட்கணக்கில் நேரத் தைச் செலவிடவேண்டியிருந்தது.

இந்திய இராணுவத்துடனான போர் தொடங்கிய பின்னர் அவனுடைய எஸ்.எல்.ஆர் ஆயுதத்தை, பிறன் எல்.எம்.ஜி யைக் கைப்பற்றுவதில் எங்களுக்கிடை யில் ஓர் போட்டியே இருந்தது. வவு னியாவில், கிளிநொச்சியில், முல்லைத் தீவில், அம்பாறையில் என்றெல்லாம் அந்த மாவட்டப் போராளிகள் இந்திய இராணுவத்தைத் தாக்கிப் பல ஆயுதங் களைக் கைப்பற்றியிருந்தனர். ஆனால், மன்னாரில் இந்திய இராணுவத்தை நாம் பலதடவைகள் தாக்கிய போதிலும் எம்மால் ஒரு எஸ்.எல்.ஆர் ஆயுதத்தைக் கூடக் கைப்பற்ற முடியவில்லை. கிளி நொச்சியில் கூட ஒரே தாக்குதலில் 2 பிறன் எல்.எம்.ஜி க்களை அந்த மாவட் டப் போராளிகள் கைப்பற்றியிருந்த னர். இந்தச் சம்பவங்கள் எல்லாம் எங்க ளின் மனதை உறுத்திக்கொண்டிருந் தன. ஏனெனில், நாம் தாக்குதலுக்காக வந்த பின்பும், தாக்குதலை நடாத்த முடியாமல் அந்தச் சிறிய கூக்காவலடிக் காட்டுக்குள்ளேயே தங்கியிருந்தோம். இவ்வளவு காலமும் நாம் இந்திய இரா ணுவத்திடமிருந்து ஓர் ஆயுதத்தைக் கூட எடுக்கவில்லையே என எம் உள் மனம் உணர்த்தினாலும், இன்று எப்படி யும் ஏராளமான ஆயுதங்களைக் கைப் பற்றுவோம் என்கிற நம்பிக்கை எங்க ளின் மீதும் எங்களின் துப்பாக்கிகள் மீதும் எங்களுக்கு நிறையவே இருந்தது.

இந்தத் தாக்குதலுக்கு மேஜர் சூட்டி அண்ணன் தான் தலைமைதாங்கவிருந் தார். இன்று இரவுகூட முகாமைத் தாக்கச் செல்ல முன் ‘நேற்று மாதிரி சி.வி.எவ் காரர்கள் இடையில் நின்றால் அவர்களைத் தாக்கிவிட்டுத் தான் இந் திய இராணுவ முகாமைத் தாக்க வேண் டும்’ என சூட்டி அண்ணா திட்டமாகக் கூறினார். முகாம் தாக்குதலுக்கு முன் சி.வி.எவ் காரர்களைத் தாக்கிவிட்டுப் பின்னர் முகாமைத் தாக்குவது என்பது உண்மையிலேயே எங்கள் மத்தியில் பலத்த இழப்பைத் தரும் என்று எங்க ளுக்கு வடிவாகத் தெரியும். இருந் தாலும் ‘நாங்கள் செத்தாலும் பரவா யில்லை, ஆனால், ஆயுதம் எடுக்காமல் எப்படி எங்கள் முகாமிற்குத் திரும்பு வது’ என்ற உணர்வு தான் எங்களிடத் தில் இருந்தது.

அன்றைய மாலைப் பொழுது நன் றாக இருட்டி விட்ட பின்பு இரவு *7.30* மணியளவில் நாங்கள் கூக்காவலடிக் காட்டைவிட்டு வெளியேறினோம். சிறிய முள்ளுப் பற்றைகளையும் முட் கம்பி வேலிகளையும் வெட்டிக்கொண்டு வரிசையாக ரோந்து சென்று கொண் டிருந்த நாங்கள் வெளிகளைக் கடக் கும்போது எதிரி எங்களை அவதானிக் கிறானா என எண்ணிய போது, எங்க ளது காலடிச் சத்தம் போன்றே அந்த வெளிக்குள் நின்ற கழுதைகளின் கால டிச் சத்தமும் அமைந்திருந்ததை அவ தானித்தோம். அதனால், நாங்கள் நடந்து செல்லும் காலடிச் சத்தம் எதிரிக்குச் சந்தேகத்தை உண்டுபண்ணாது என நினைத்து, நாம் அங்கு நின்ற கழுதைக



ளுக்கெல்லாம் மனமார நன்றிகூறிக் கொண்டு சென்றோம்.

தாழ்வுப்பாடுக் கிராமத்தை நாம் அடைந்தபோது எல்லா வீட்டு நாய்களும் எங்களைக் கண்டு ஒருமிக்கக் குரைக்கத் தொடங்கிற்று. இருந்தாலும், அந்த நேரம் அக்கிராம மக்கள் தொலைக்காட்சிப் பெட்டியில் அக்கறை செலுத்திக் கொண்டிருந்ததால், நாம் யாருடைய கண்ணிலும்படாமல் ஆஸ்பத்திரியடி இந்திய இராணுவ முகாமை நோக்கிக் கொண்டிருக்கிறோம்.

முகாம் மீதான தாக்குதல்நடக்கும் போது, அதற்கு அருகில் இருந்த பி.எம்.சி இராணுவ முகாமில் இருந்தோ, பஸ் நிலையப் பகுதிக்குள் இருந்தோ உதவிக்கு வரும் இந்திய இராணுவத்தைத் தடுத்துநிறுத்தும் முகமாக மேஜர் வசந்த் தலைமையிலான குழுவினரையும், மேஜர் குகன் தலைமையிலான குழுவினரையும் மேஜர் சூட்டி அண்ணன் வெவ்வேறாக அனுப்பினார்.

நாங்கள் நின்ற இடத்திற்கும் இராணுவ முகாமிற்கும் இடையில் 25 யார் தூரம்கூட இருக்கவில்லை. பின்பக்கக் காவலரண் பகுதிக்கு அர்ச்சுனன் தலைமையிலான குழுவும், முன்பக்கக் காவலரண் பகுதிக்கு டும்மா தலைமையிலான குழுவும், இடையில் இருந்த பகுதிக்கு சூட்டி அண்ணனின் நேரடிக் கண்காணிப்பில் இருந்த குழுவுமாக அந்த முகாமை ஒரு பக்கமாகச் சுற்றி நின்றோம். எங்கள் மூன்று குழுக்களையும் விட, ஆஸ்பத்திரியின் வெளிநோயா






1983 இல் விடுதலைப்புலிகளோடு இணைந்து, இரண்டாவது பயிற்சி முகாமில் பயிற்சி பெற்று, லெப்.கேணல் விக்ரருடன் மன்னாரில் கால்பதித்த விடுதலைப் புலிகளின் முதலாவது அணியில் ஒருவன். குறுகிய காலத்தில் மன்னாரில் இவனாற்றிய சாதனைகளால் 'மன்னார்ச் சூட்டி' என்ற சிறப்புப்பெயரைப் பெற்றவன். தளபதி விக்ரரின் வீரத்தையும், தளபதி ராதாவின் தந்திரப் போர் நுட்பங்களையும் உள்வாங்கி வளர்ந்த இவன் தன் வீரத்தாலும் தந்திரப் போர்முறைகளாலும் இயக்கத்தின் பல வெற்றிகளுக்கு வேரானவன். தேசியத் தலைவரின் நம்பிக்கைக்குரியவர்களில் ஒருவனானவன். இந்திய இராணுவத்தின் வருகை வரை வடதமிழீழத்தில் நடைபெற்ற பெரும்பாலான தாக்குதல்களில் பங்கெடுத்த பெருமைக்குரியவன். காங்கேசன்துறையில் இருந்து அநுராதபுரம் வரை தன் பாதங்களைப் பதிந்த சரித்திரநாயகன். இரண்டு தடவைகள் போரில் விழுப்புண்பட்டவன். சக போராளிகளுடன் அன்பாகப் பழகும் பண்பாலும், போர்க்களங்களில் நிதானமாகவும் உறுதியாகவும் போராளிகளை வழிநடாத்தும் சிறப்பாலும் அனைத்துப் போராளிகளினதும் மதிப்பிற்குரியவனாய் விளங்கியவன். மன்னார் மக்களின் பேரன்புக்குரியவனாய்த் திகழ்ந்தவன். இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் மன்னார் மண்ணின் 9வது பயிற்சி முகாமை பொறுப்பேற்றுத் திறம்பட நடாத்தி, ஆற்றல்மிகு போராளிகளை உருவாக்கியவன். இவனது சகோதரனான கப்டன் வரதப்பா 30.04.1989 இல் இந்திய இராணுவத்துடனான திடீர் மோதலொன்றின்போது வீரச்சாவடைந்தார். ஈழத்தில் இந்தியப்படை செய்த கொடுமைகளுக்கும், தன் சகோதரனின் இழப்பு ஏற்படுத்திய வெஞ்சினத்திற்கும் இவன் கொடுத்த பதிலடி ஈழவிடுதலைப் போரில் ஒரு வரலாற்றுப் பதிவானது.



**மேஜர் சூட்டி**
**(சீவரத்தினம் சிறீதரன்)**
**தையிட்டி யாழ்ப்பாணம்**
*தாயின் மடியில் : 06.06.1963*
*தாயகமண்ணில் : 02.08.1990*

விடுதலைப் புலிகளின் வீரமிகு தளபதிகளில் ஒருவனாகத் திகழ்ந்த இவனை, இறுதிவரை போர்க்களத்தில் வெல்லக் காலனாலும் முடியவில்லை. 02.08.1990 இல் எதிர்பாராத வாகன விபத்தொன்றின் மூலம் இவனுயிரைக் காலன் கவர்ந்தான். இவனது வீரம் ஈழவிடுதலைப் போரின் விழுதானது.

ளர் பகுதி அமைந்திருந்த மேல்மாடிக் கட்டடத்தில் அஸ்ரப் தலைமையிலான குழுவும் இராணுவ முகாமிற்கு மேலாக நிலைகொண்டிருந்தது.

இராணுவத்தின் அசைவுகள், அவர்களின் பேச்சுக் குரல்கள் எல்லாம் எங்களுக்குத் தெளிவாகக் கேட்டுக்கொண்டிருந்தது. எமக்கு மிக அண்மையில் எதிரியை வைத்துப் பார்த்துக்கொண்டிருக்க எங்களால் முடியவில்லை. எங்களை அறியாமல் எங்கள் விரல் துப்பாக்கியின் டிகரை அழுத்துமோ எனப்பயந்து, மிகவும் அவதானமாக நாம் இருந்தோம். காவலரணில் இருந்த இந்திய இராணுவச்சிப்பாய் வைத்திருந்த பிறன் எல்.எம்.ஜியைக் கண்ட கப்டன் காசிம் ‘மச்சான் பிறனடா’ என இரசியமாகப் பெருமூச்சு விட்டார்.

கொண்ட அந்த முகாமின் நான்கு காவலரணுக்கும் மிக அண்மையில் நாங்கள் தாக்குதலுக்கு ஆயத்தமாகிவிட்டோம்.

சரியாக இரவு 11.50 மணிக்கு ஜான் அண்ணனின் ஆர்.பி.ஜி தாக்குதலுடன் எமது தாக்குதல் ஒருமித்துத் தொடங்கியது. மேஜர் சூட்டி அண்ணன் ‘அட்வான்ஸ்’ என்று பலமாகக் கத்திக் கொண்டு தன் நிலையில் இருந்து இராணுவ முகாம் நோக்கி தன் ஏ.கே யால் சுட்டுக்கொண்டே முன்னேறி ஓடிக் கொண்டிருந்தார். எல்லாப் போராளிகளினதும் ஒருமித்த வலிந்த தாக்குதலினால் உள்ளிருந்த இராணுவம் திணறியது. எதிரி எங்களை நோக்கிச் சுட நாம் அவனுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கூடக் கொடுக்காது தாக்கிக் கொண்டிருந்தோம்.



‘சூட்டி அண்ணன் எப்படா கட்டளை தருவார்? ஜான் அண்ணனின் ஆர்.பி.ஜி எப்படா முழங்கும்’ என்று நாங்கள் பொறுமையிழந்து பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது தான் மேஜர் சூட்டி அண்ணன் தனது நிலையில் இருந்து கட்டவுட்டில் இருந்த வசந்தையும் குகனையும் அழைத்து ‘நாங்கள் சரி’ என நாம் தாக்குதலுக்குத் தயார் எனக்கூறினார். அதற்கு அவர்களும் ‘நாங்களும் சரி’ என வோக்கியில் பதிலுக்குத் தங்கள் இடத்திலிருந்து கூறினர். இரவு 11.30 மணிக்கு மேலாகி விட்டது. ஜான் அண்ணன் தனக்கு முன்னிருந்த காவலரணுக்க நேராகத் தனது ஆர்.பி.ஜி யைத் தூக்கிக் குறி பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு மிகநெருக்கமாக துரைமணி இன்னொரு ஆர்.பி.ஜி உடன் உதவிக்கு இருந்தார். எங்களது துப்பாக்கிகள்கூட எதிரியை நோக்கிமூச்சுவிட ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கின்றன. இருபத்தைந்துக்கும் அதிகமான இராணுவத்தைக்

எமது சற்று நேர ஒருமித்த தாக்குதலின் பின் சூட்டி அண்ணன் தனது விசிலை இரண்டு முறை அடித்து எமது சூட்டுக்களை நிறுத்தும்படி கூறினார். அதன்பின் மூன்று முறை விசிலடித்த போது, நாம் அனைவரும் முகாமை நோக்கி ஒருமித்து முன்னேறினோம். அப்போது முகாமின் பின்பக்கமாக முன்னேறிய குழுவில் இருந்த சின்னவனும் இன்னொரு போராளியும் இராணுவத்திற்கு மிகக்கிட்ட நெருங்கிவிட்டதால், அவனைச்சுட வசதியின்றி, எம்மை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்த இராணுவத்தின் பிறன் எல்.எம்.ஜி யின் பரலை சின்னவன் பிடிக்க, மற்றப் போராளி ரி.என்.ரி கிரனேட்டால் அந்த இராணுவத்தின் தலையில் பலமாக அடித்து அவனது உயிரைப் போக்கினான். எமது துப்பாக்கிகளின் ரவைகளுக்கும் கிரனேட்டுக்களுக்கும் பதில் சொல்ல ஆளில்லாது இறுதியில் எமது தாக்குதல் முடிந்தது.

உண்மையிலேயே இதுவொரு வித்தியாசமான முற்றுகையாகத்தான் இருந்தது. முகாம் மீதான தாக்குதல் தொடங்கிய பின் தாக்குதல் குழுக்களுக்கிடையே நாம் வோக்கியைத் தொட்டுக் கதைக்கவேயில்லை. அதற்குப் பதிலாகத்தான் சூட்டி அண்ணனின் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த கறுப்பு விசில் அந்தந்த நேரத்தில் ஏற்றபடி எமக்குக் கட்டளைகளைத் தந்துகொண்டிருந்தது. முகாமில் இருந்த இராணுவம் எந்தப் பக்கம் நோக்கிச் சுடுவது எந்தப்பக்கத்தால் தப்புவது என்று தெரியாமல் அந்த முகாமிலேயே சமாதியானது.

எமது திட்டப்படி பதினைந்து நிமிடத்தினுள் முகாமின் முற்றுகையை முடித்துக் கொண்டு வெற்றிகரமாகப் பின்வாங்க வேண்டிய நாங்கள், ஒன்பதாவது நிமிடத்திலேயே முகாம் முற்றுகையினை முடித்துக்கொண்டு, லக்ஸ்மன் அண்ணனும் சாசிம் அண்ணனும் கொண்டுவந்த பிக்கப் வாகனத்தினுள் ஆயுதங்களை வைத்தவிட்டு, வெற்றிகரமாகப் பின்வாங்கிக் கொண்டிருந்தோம்.

அந்த ஆஸ்பத்திரியடி இந்திய இராணுவ முகாமினுள் பாதுகாப்பாக இருந்த இருபத்திநான்கு இராணுவத்தினரும் கொல்லப்பட்டதுடன், நாம் பெரிதும் விரும்பிய நான்கு பிறன் எல்.எம்.ஜிக்களையும், எஸ்.எல்.ஆர் துப்பாக்கிகளையும், 60 மில்லிமீற்றர் மோட்டார் ஒன்றையும் மேலதிகமான இராணுவத் தளபாடங்களையும் கைப்பற்றினோம். எங்கள் தரப்பில் கப்டன் விஸ்ணு, கப்டன் காசிம், நிர்மல் எனும் மூன்று போராளிகள் மட்டும் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள். நாம் எதிர்பார்த்ததைவிட எந்த இழப்புமின்றி பெரு வெற்றியினை நாம் சூட்டி அண்ணன் தலைமையில் பெற்றிருந்தோம். எவ்வளவோ கூலிப்படையையும் தாண்டி இந்திய இராணுவ முகாமை வெற்றி கொண்ட மகிழ்ச்சியில் நாங்கள் ஓடிச் சென்று சூட்டி அண்ணனைத் தூக்கி மகிழ்ந்தோம். சொல்லமுடியாத மகிழ்ச்சி எங்களுக்கு.

அன்றிரவு எங்கள் காட்டு முகாம் ஒன்றினுள் இருந்து பி.பி.சி செய்தியைக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். ‘புலிகளின் விசேட அதிரடிப்படைப் பிரிவு ஒன்று இந்திய இராணுவமுகாமைத் தகர்த்ததில் இருபத்திநான்கு இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்’ என ஒப்புக்கொள்கின்றபோது நாங்கள் சூட்டி அண்ணனைப் பார்த்துச் சிரிக்கின்றோம்.


வீரவேங்கை
கனகசபாபதி





# உலகையே வியக்கவைத்த எங்கள் உன்னத வீரர்கள்!

சரித்திரங்கள் பலபடைத்த
சாதனைச் சிகரங்கள்...
மலைகளைப் பிழந்து
தமிழன் வீரம் சொன்னவர்கள்...
உலகையே எதிர்த்து நின்று
எங்கள் உரிமையைக்
கேட்டவர்கள்
உலகச் சதிகளினால்
மண்ணுக்கு இரத்தம் தந்த
வேங்கைகள்.
இறந்தும் நம் மானம் காக்கும்
தமிழினத்தின் வித்துக்கள்.
ஒன்றல்ல இரண்டல்ல
முப்பத்தையாயிரத்துக்கு மேல்
தங்கள் மூச்சுக்களைத் திறந்து
எங்களை மூச்சடைக்க
வைத்தவர்கள்.
வியூகம் உடைக்க
வாவென்று அழைக்கு
முன்னே..
வரிசையில் முதல் சென்ற
வரலாற்று நாயகர்கள்.
சுய நலம் நீங்கி
பொது நலம் தாங்கி
விடுதலையே மேலோங்கி
அதற்காய் மரணித்த வீரர்கள்.
தாய்ப்பாசத்தை
விலக்கி வைத்து,
விடுதலையை சிரசில் வைத்து,
அந்த ஒன்றையே சிந்தித்து,
எங்கள் மனங்களெல்லாம்
உரம் தூவிச் சென்றவர்கள்.
அவர் ஆசைப்பட்ட ஓர் உடை
போராளிக்கான சீருடை.
விரும்பிய ஆபரணம்
கழுத்தில் தொங்கிய ஓர்
மரணம்.
எங்கள் நிம்மதித்
தூக்கத்திற்காய்
தங்கள் நித்திரை
கலைத்தவர்கள்.
நிலம் காடு மேடெல்லாம்
படுக்கையாய் கொண்டவர்கள்.
மானிட உருவில் வந்த
தமிழின் மானம் நீங்கள்
விடுதலைக் கனவை மட்டுமல்ல
வேதனையின் சிலுவை பல
சுமந்தீர்கள்
மரித்தாலும் உயிர்த்து எழ
நீங்கள் பரமபிரான் ஜேசுவல்ல
மரணத்தை நிரந்தரமாக்கிக்
கொண்ட எங்கள்
தமிழீழத்தின் சிசுக்கள்
கார்த்திகை இருபத்தியேழு
உம் கல்லறையை
வணங்கிடும் நாள்
கார்த்திகை பூவினால்
உங்கள் கல்லறை
நிரப்பிடும் நாள்
மாவீரர் இல்லங்களில்
தீபங்கள் ஏற்றிடும் நாள்.
எம் மனமும் உன் ஆன்மாவும்
கண்ணீர் பூக்களால்
பேசிடும் நாள்
உம் இலட்சியம் வெல்வோம்
இதை இன்று சத்தியமாய்
கொள்வோம்.
உம் சாவின் கனவுகளை
நிறைவேற்ற சபதங்க்
கொள்வோம்.



கவிஞர்
புதுவை இரத்தினதுரை

# இலங்கை, இந்திய
# அறுசுவை உணவுகள்

**Spécialitées Indienne et Srilankaise**



BHARATH

51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20

உங்கள் கொண்டாட்டங்களுக்கு
சாப்பாடுகள் உங்கள் விருப்பத்திற்கேற்ப செய்து தரப்படும்!



# போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்பட வேண்டும்?

வீரமரணமடையும் புலி வீரர்களது உடல்கள் இனிமேல் தகனம் செய்யப்பட மாட்டாது. அவைகள் புதைக்கப்பட வேண்டும் என நாம் முடிவெடுத்துள்ளோம். இம்முடிவானது போராளிகளுக்குள் மிகப் பெரும்பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களை தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் இப்பொழுது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுகற்கள் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலைபெறும்.

மாவீரர்களின் உடல்கள் புதைக்கப்பட வேண்டும் என நாம் ஏன் முடிவெடுத்தோம் என்பதையும் அதற்குரிய காரணிகளையும் இங்கே பார்ப்போம்.

இதுவரை காலமும் வீரமரணமடைந்த எமது போராளிகளின் உடல்களை அவரவர் குடும்பங்கள் கைக்கொள்ளும் மத சம்பிரதாயங்களின் அடிப்படையில் உடல்கள் புதைக்கப்படுவதோ, தகனம் செய்யப்படுவதோ நடந்து வந்தது. ஆனால், இனிமேல் வீரமரணமடையும் அனைத்துப் புலிவீரர்களின் உடல்களையும் புதைப்பது என்ற முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம். புதைக்கப்பட்ட இடத்தில் அவ்வப் போராளியின் பெயர் கூறும் கல்லறைகள் எழுப்பப்பட்டு அவை தேசிய நினைவுச் சின்னங்களாகப் பாதுகாக்கப்படும். இவைகள் காலங்காலமாக எமது போராட்ட வரலாற்றைச் சொல்லிக் கொண்டே இருக்கும்.

தாங்கள் வீரமரணமடைந்தால் தங்களுடைய உடல்களை மாவீரர் துயிலும் இல்லங்களில் புதைத்து அங்கே நினைவுக்கற்கள் நாட்டப்பட வேண்டும் என்பதே போராளிகளின் விருப்பமாகும். இந்த விருப்பம் மிக அண்மையில் ஏற்பட்ட தொன்றல்ல. இந்திய - புலிகள் போர்க் காலத்தில் வன்னிக் காட்டுக்குள்ளேயே போராளிகளின் இவ் விருப்பங்கள் வெளிப்படத் தொடங்கி விட்டன. பிரதானமாகத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தங்கியிருந்த

மணலாற்று காட்டுக்குள்ளேயே இவ் விருப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டதுடன் செயல்வடிவங்களும் கொடுக்கப்பட்டது.

இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக கடும் சமர்கள் நடந்த இடம் மணலாறு என்பது தெரிந்ததே. இந்தியப் படைகளுடனான போரில் நாம் சந்தித்த வெற்றிக்கு அத்திவாரமாக இருந்தது மணலாற்றுக் காட்டில் நாம்கண்ட வெற்றிதான். இந்தச் சமர்களில் எமது போராளிகள் பெற்ற வெற்றிக்கு மணலாற்றுக்காடு உறுதுணையாக இருந்தது. இதனால் தங்களுடைய போராட்ட வாழ்வில் ஒன்றிக்கலந்து உறுதுணையாக இருந்த அந்த நிலத்திலேயே தங்களது உடல்களும் புதைக்கப்பட வேண்டும் எனப் போராளிகள் விரும்பினார்கள்.

மணலாற்றுக் காட்டுக்குள் தங்கியிருந்து போராடிய போராளிகள் பலர் தாங்கள் எங்கேசென்று போராடி வீரமரணமடைந்தாலும் தங்களது உடல்கள் மணலாற்றுக் காட்டுப்பகுதிக்குள் தான் புதைக்கப்படவேண்டும் என எழுத்து மூலம், வாய் மூலம் தலைவர் பிரபாகரனிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அதன்படியே அவர்களது விருப்பங்களும் நிறைவேற்றப்பட்டு வந்தன.

இதன் காரணமாக இன்று மணலாற்றுக் காட்டுக்குள் பெரியதொரு மாவீரர் துயிலும் இல்லம் போராட்டக் கதைகளைக் கூறிக்கொண்டே இருக்கின்றது.



இதேபோன்று மற்றைய மாவட்டங்களிலும் சிறிய சிறிய அளவுகளில் காடுகளுக்குள் போராளிகளின் கல்லறைகள் காணப்படுகின்றன. இவ்விதம் தங்களது உடல்கள் சொந்த மண்ணுடன் கலக்கப்பட வேண்டும் என்ற போராளிகளது மன விருப்பத்தையும் அதன் பின்னால் இருந்த ஆத்மதிருப்தியையும் பார்த்தோம்.

இனி போராளிகளது உடல்களை தகனம் செய்வதற்கும், புதைப்பதற்கும் இடையில் இருக்கும் மானிட உணர்வுகளையும், அதன் பிரதிபலிப்புக்களையும், மனோவியல் ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் பார்ப்போம். அப்போது பாரிய உண்மைகளை நாம் கண்டுகொள்ளலாம்.

மரபு வழியாக தமிழர்களிடம் இருந்து வரும் சம்பிரதாயங்களின்படி இறந்தவர்களை தகனம் செய்வதே வழமை என அறிந்து வைத்திருக்கின்றோம். இதற்கு விஞ்ஞான ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சாதகமான வாதங்கள் வைக்கப்படுவது நாம் அறிந்தது தான். ஆனால் அந்த வாதத்தை இம் மண்ணின் விடுதலைக்காகப் போராடி வீரமரணமடைந்த போராளிகள் விடயத்தில் ஒப்புநோக்க முடியாது. போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றைப் படைக்கும் சிருஸ்டிகர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரணநிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்றுச் சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்கவேண்டும். இந்தத் தியாகச் சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும்.

அதாவது, போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திரச் சுடரை ஏற்ற உதவும் நெருப்புக் கிடங்குகளாகவே பயன்படும். எனவேதான் போராளிகளது உடல்களைப் புதைத்து கல்லறைகளை எழுப்பி அதை என்றென்றும் உயிர்த்துடிப்புள்ள ஒரு நினைவுச் சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகின்றோம். இன்றுவரை 3750ற்கும் மேற்பட்ட புலிவீரர்கள் வீரமரணமடைந்துவிட்டனர். இவர்களது உயிர்த் தியாகத்தால் எமது விடுதலைப் போராட்டம் உயர்ந்தொரு கட்டத்திற்கு நகர்த்தப்பட்டு விட்டது. ஆனால் இவர்களது நினைவை உயிர்த்துடிப்புள்ளதாக்கும் சின்னங்கள் எம்மிடம் உண்டா? எனக் கேட்டால் 'இல்லை' என்றுதான் பதில் கிடைக்கும்.

இப் போராளிகள் அனைவருக்கும் அவர்கள் பெயர் கூறும் கல்லறைகள் கட்டடப்பட்டால் அவற்றைக் கண்ணுறும் அனைத்து மக்களும் சுதந்திரத்தின் பெறுமதியைப் புரிந்து கொள்வதுடன் அதை வென்றெடுக்க போராளிகள் கொடுத்த உயிர்விலையையும் உணர்வு பூர்வமாகப் புரிந்து கொள்வார்கள்.

அன்பிற்குரிய எமது பெற்றோர்களே, மக்களே!

எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றோம். இந்த முடிவு காலங் காலமாக இருந்து வந்த சம்பிரதாயம், சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கிறது என நீங்கள் கருதலாம். ஆனால், உங்களது பிள்ளைகளான புலிவீரர்கள் இந்தச் சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கடந்த நிலையில் இந்த நாட்டின் பொதுச் சொத்தாக, பொக்கிசமாக இருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான இப் பொக்கிசங்கள் வெறும் நினைவுகளாகவும், எண்ணிக்கைகளாகவும் மட்டும் இருக்கக்கூடாது. அவை பொருள்வடிவில் என்றென்றும் எம்மண்ணில் இருந்துகொண்டேயிருக்க வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, எமது சக தோழர்கள் சிலரது வீரமரணத்தின் பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதைப் பாதித்திருக்கின்றன. அதாவது, பெற்றோரோ, உடன் பிறந்தவர்களோ, உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போராளிகளின் இறுதிச் சடங்குகளை நாம் கண்டிருக்கின்றோம். என்னதான் எமது தோழர்கள் சூழ்ந்து நின்று தகன நிகழ்சியை நடத்தினாலும் கூட, அப் போராளியைப் பெற்றெடுத்து - சீராட்டி வளர்த்தெடுத்த தாய் - தந்தையரோ, அல்லது உடன் பிறந்தவர்களோ இல்லாதது எமது மனதை நெருடுகின்றது. போராட்ட சூழல் காரணமாக அவர்கள் வரமுடியாது விட்டாலும் நாளை இப் பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் எதைக் காட்டப் போகின்றோம்? ஒன்றன் பின் ஒன்றாய் நூற்றுக்கணக்கான போராளிகளைத் தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டப் போகின்றோம்? அப்படியான சூழலில் அவர்கள் படும் துயரையும், அங்கலாய்ப்பையும் அனுபவவாயிலாக நாம் அறிந்தே இருக்கின்றோம்.

எனவேதான் தனது பிள்ளையின் உடலைப் பார்க்காது விட்டாலும் கூட அவனது உடல் புதைக்கப்பட்ட கல்லறையைப் பார்த்து ஓரளவு ஆறுதல் அடையவாவது நாங்கள் உதவி செய்வோம். அத்துடன் அடிக்கடி அக்கல்லறைக்குச் சென்று அவனது நினைவுகளை மீட்டுப் பார்ப்பதுடன் ஓர் ஆத்ம திருப்தியையும் அவர்கள் அடைந்து கொள்வார்கள். கல்லறைகளை அமைத்து அடிக்கடி அங்கே செல்வது சோகத்தை தொடர்ந்தும் மனங்களில் வைத்திருப்பதற்காகவா? என ஒரு கேள்வி எழலாம்.

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோகமானது தான். ஆனால் அந்தச் சோகத்தை மறக்க வேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்க முயற்சிப்பதாக இருக்க முடியாது தானே! கல்லறைக்கு மீண்டும் மீண்டும் செல்வதால் சோகம் அதிகரிக்கும் என்றில்லை. உண்மையில் அப்படிச் செல்வதால் மனம் நிம்மதி அடையும்.

எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. தகனம் செய்வதற்குப் பதிலாக புதைப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்கு முரணான செயலல்லவா? என யாராவது வினா எழுப்பலாம்.

நீண்டகாலம் தொட்டு இருந்து வரும் தகனம் செய்வது தமிழரின் பண்பாடு என எண்ணுவது தவறானது. உண்மையில் பண்டைய தமிழர் பண்பாட்டில் இறந்தவர்களது உடல் புதைக்கப்பட்டு நடுகல் வைக்கப்பட்டதாக போதுமான வரலாறுகள் உண்டு. புறநானூற்று இலக்கியமும் ஈமத்தாழி வடிவிலான தொல்லியல் சான்றுகளும் இதை நிரூபிக்கப் போதுமானது.

ஆனாலும் இந்த ஆராய்ச்சிகள் ஒருபுறமிருக்கட்டும், உண்மையில் இந்த முறையை ஒரு சமூக சீர்திருத்தமாக நாங்கள் செய்யவில்லை. இது போராளிகளுக்கு மட்டும் பொருந்தும். இது பொதுமக்களிற்கல்ல. எனவே இங்கே பண்பாட்டுப் பிரச்சனை எழ நியாயமில்லை. அத்துடன் புதைப்பது என்ற முடிவானது வெறும் இறுதிக் கிரியை



நிகழ்ச்சி அல்ல, அது போராட்டத்தை உயிர்ப்புடன் என்றென்றும் வைத்திருக்கும் ஒரு சரித்திர தியாகத்தின் சின்னம்.

சரி அப்படி புதைத்து எழுப்பப்பட்ட கல்லறைகளை இராணுவம் அழிக்காதா? அப்படி நடந்தால் வீரமரணமடைந்த போராளிகள் அவமதிக்கப்பட்




டது போலாகாதா? எனவே இந்த அவமதிப்புக்கு புலிகளே சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கலாமா? எனவும் கேள்வி எழலாம். தியாகி சிவகுமாரனுக்கு உரும்பராயில் அமைக்கப்பட்ட சிலையையும் மன்னார் தளபதி லெப். கேணல் விக்டரது கல்லறையையும் சிங்களப் படைகள் சிதைத்ததையும் மனதில் வைத்து மேற்குறித்த கேள்விகள் எழுவது நியாயமானது.



**எமது மண்ணில் எமது போராளிகளுக்கு எமது மக்கள் அமைத்த நினைவுத் துண்களையும், கல்லறைகளையும் சிங்கள இராணுவம் உடைத்தெறிவதையிட்டு நாம் கவலைகொள்ளத் தேவையில்லை. வேண்டுமானால் அதையிட்டு சிங்கள இனம் வெட்கப்படட்டும்.**

போரில் கொல்லப்பட்ட எதிரி இராணுவ வீரனது கல்லறைக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்பது சாதாரண போர் தர்மம். ஆனால் அதை சிங்கள இராணுவம் கடைப்பிடிக்கும் என உறுதி கூறமுடியாதுதான். ஆக்கிரமிப்பு இராணுவமாக இங்கு செயற்பட்டு அதனால் இங்கு கொல்லப்பட்ட இந்திய ஜவான்களுக்காக இந்திய அரசு எமது மண்ணிலேயே அமைத்த நினைவுச் சின்னங்களை இந்தியப் படைகள் வெளியேற்றப்பட்ட பின்பும்கூட நாம் உடைத்தெறியவில்லை என்பதை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறோம்.

ஆனால், எமது மண்ணில் எமது போராளிகளுக்கு எமது மக்கள் அமைத்த நினைவுத் துண்களையும், கல்லறைகளையும் சிங்கள இராணுவம் உடைத்தெறிவதையிட்டு நாம் கவலைகொள்ளத் தேவையில்லை. வேண்டுமானால் அதையிட்டு சிங்கள இனம் வெட்கப்படட்டும். இறுதியாக ஒன்று சொல்கிறோம். முழுமையாகவே எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது தாய் மண்ணை விடுவிக்கும் போரில் வீர மரணமடையும் ஒரு வேங்கை கேட்பது ஆறு அடி நிலத்தை மட்டுமே.

*நன்றி : விடுதலைப் புலிகள்*
*(ஐப்பசி - கார்த்திகை 1991)*



தாயகத்தில் இருந்து
கௌசல்யன்

# மாறாத வடுவை ஏற்படுத்திய இந்திய இராணுவத்தின் மிகக் கொடூரமான முதலிரண்டு படுகொலைகள்

இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட ஈழத்தமிழ்மக்கள் மீதான படுகொலைகள் வரிசையில் முதல் கோரச் சம்பவமாகப் பதிவாகிய கொக்குவில் பிரம்படி கொடூரப் படுகொலையின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த ஒக்டோபர் 12 ஆம் திகதி காலை யாழ்.கொக்குவில் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கான நினைவுத் தூபியடியில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டு யூலை மாதம்-29 ஆம் திகதி இந்திய - சிறீலங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் தமிழர் தாயகமான வடக்கு- கிழக்கில் ‘அமைதிப்படை’ எனும் பெயரில் இந்திய இராணுவம் வந்திறங்கியது. தமிழ்மக்கள் இந்திய இராணுவத்தினரைத் தமது மீட்பர்களாக கருதிய போதிலும் அமைதிப் படையாக வந்திறங்கிய இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாறியது. தமிழர் தாயகத்தில் பல நூற்றுக்கணக்கான தமிழ்மக்களைக் கொன்று குவித்தது.

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி இரவு 7 மணிக்குப் பின்னர் கொக்குவில் பிரம்படி மற்றும் அயற்பகுதிகளுக்கு மேலாக விமானங்கள் மேலே சுற்றியபடியே இருந்துள்ளதுடன் சூட்டுச் சத்தங்களும் கேட்டபடியே இருந்துள்ளன. இதன் எதிரொலியாகச் சிலர் கிராமத்திலிருந்து வெளியேறி வேறிடங்களுக்குச் சென்றார்கள். எனினும், பலர் ‘இந்தியன் ஆமி தானே எங்களை ஒன்றும் செய்யாது’ என்ற நம்பிக்கையுடன் தத்தமது வீடுகளிலிருந்தார்கள்.

இந்நிலையில் மறுநாள் ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி காலை கொக்குவில் பிரம்படிப் பகுதி இந்திய இராணுவத்தினரால் ‘ஒப்பரேசன் பவான்’ நடவடிக்கை மூலம் சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது பிரம்படி வீதியில் ஒரு வீட்டில் பாதுகாப்புத் தேடி அடைக்கலம் புகுந்திருந்த நிறைமாதக் கர்ப்பிணியொருவரும், சிறார்கள், பெண்கள் உள்ளிட்ட பலரும் உணவு, நீர் எதுவுமின்றி எங்கும் செல்ல முடியாதவாறு மிகவும் அச்சமானதொரு சூழ்நிலையில் நீண்டநேரமாக இந்திய இராணுவத்தினரால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர். எனினும், அவர்கள் கண் முன்னே எதிர்வீட்டிலும், எதுவுமே அறியாத நிலையில் வீதியால் சென்ற பலரும் ரொக்கெட் லோஞ்



சர் மற்றும் துப்பாக்கிகளால் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

மறுநாள் 12 ஆம் திகதி டாங்கிகளில் வந்த இந்திய இராணுவத்தினர் மேற் படி வீட்டில் பாதுகாப்புத் தேடி அடைக் கலம் புகுந்திருந்தவர்களை வெளியே அழைத்துச் சுட ஆயத்தமான நிலையில் அங்கிருந்த சிலர் ஒருவாறு தப்பித்துக் கொண்டனர்.

குறித்த சம்பவத்தில் குழந்தைகள், பெண்கள், முதியோர்கள் எனப் பாகு பாடின்றிப் பொதுமக்கள் மீது மிகவும் மோசமான, கண்மூடித்தனமான துப் பாக்கிச் சூடு நடாத்தப்பட்டதுடன் உயிருடன் வீதியிலும், தொடருந்துத் தண்டவாளத்திலும் குப்புறப்படுக்க வைக்கப்பட்டுக் கவச வாகனங்களி னால் நசித்தும் ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பரிதாபகரமாகப் படு கொலை செய்யப்பட்டனர்.

சம்பவத்தில் பிரம்படிப் பகுதியில் வாடகைக்குத் தங்கியிருந்து யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற முஸ்லிம் மாணவர் ஒருவரும், யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுவந்த நயினாதீவைச் சேர்ந்த மேலும் இரண்டு மாணவர்களும், பாடசாலை களில் கற்று வந்த பல மாணவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களில் இரண்டு ஆண் குழந்தைகள் மற்றும் பெண்களும் உள்ளடங்கியுள்ளனர். சம்பவத்தில் பெறுமதியான பல உயி ரிழப்புக்களுடன், பல இலட்சக்கணக் கான சொத்தழிவுகளும் ஏற்பட்டன.

உயிருடனும், சுட்டுச் சடலங்களாக வும் கவச வாகனங்களால் நசிக்கப்பட்ட நிலையில் உடல்கள் பலவும் நசிந்து துகள்களாகின. சம்பவத்தின் பின்னர் கால்களே வைக்க முடியாதளவு பிரம் படி வீதி இரத்தமும், சதையுமாகமிருந்த தாக பிரம்படிப் படுகொலைச் சம்ப வத்தை நேரில் கண்டவர்கள் வலிகள் மாறாத கனத்த மனதுடன் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, இந்திய இராணுவத் தினரால் சுட்டுப் படுகொலை செய்யப் பட்ட யாழ்ப்பாணம் போதனா மருத் துவமனைப் பணியாளர்கள் மற்றும் நோயாளர்களின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த 21.10. 2023 காலை யாழ்ப்பாணம் போதனா



வைத்தியசாலைச் சமூகத்தின் ஏற்பாட் டில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப் பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைப் படுகொலையின் மற்றொரு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இதேநாளில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் முன்பாக அனுஷ்டிக் கப்பட்டது.

1987 ஆம் ஆண்டில் யாழ்.மாவட் டத்தில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்தினர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்து ஒக்டோபர்-21, 22 ஆம் திகதிகளில் அங்கு கடமைகளில் ஈடுபட்டிருந்த மூன்று மருத்துவர்கள், இரண்டு தாதி கள், மேற்பார்வையாளர் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட 21 பேர்கள், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 47 நோயாளர்கள் என 70 பேருக்கு மேற்பட்டவர்களைக் கொடூரமான முறையில் படுகொலை செய்திருந்தனர்.

கொக்குவில் பிரம்படிப் படுகொலை மற்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் படுகொலைகளின் நேரடிச் சாட்சியமான மூத்த எழுத்தாள ரும், தமிழ்த்தேசியப் பற்றாளருமான மு.ஈழத்தமிழ்மணி கருத்துத் தெரிவிக் கையில், அமைதிப்படை எனும் போர் வையில் இலங்கை வந்த இந்திய இரா ணுவத்தினர் கொக்குவில் பிரம்படிப் பகுதியில் 1987 ஆம் ஆண்டு ஒக்டோ பர்-11, 12 ஆம் திகதிகளில் மூர்க்கத் தனமாக 50 இற்கும் மேற்பட்ட மக்க ளைப் படுகொலை செய்தது. இதன் போது ஒரு வயதுக்கு உட்பட்ட ஒரு குழந்தையைக் கூட இந்திய இராணு வம் படுகொலை செய்த சம்பவம் மறக்க முடியாதது.

யாழ்.நகரில் அமைந்துள்ள யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனைக்குள் விடுதலைப் புலிகள் இருக்கின்றார்கள் என்கின்ற தப்பான கருத்தை அடிப் படையாக வைத்துக் கொண்டு நூற்றுக் கணக்கான இந்திய இராணுவம் யாழ்ப் பாணம் கோட்டை முகாமிலிருந்து செல்வா திரையரங்கு ஒழுங்கை வழி யாகவும், யாழ்.ஆஸ்பத்திரி வீதியூடாக வும் எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தி யவாறு இனப் படுகொலை நடத்துவதற் காக கங்கணம் கட்டிக் கொண்டு 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம்-21 ஆம் திகதி காலை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை நோக்கி வருகிறது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையை மையமாக வைத்துப் பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினர்

மூர்க்கத்தனமான முறையில் இராணுவ நடவடிக்கையை அரங்கேற்றுகின்றது. அச் சந்தர்ப்பத்தில் நாங்கள் இங்கு கடமையிலிருக்கின்றோம். முற்பகல்-11 மணியளவில் வெளிநோயாளர் பிரிவில் ஒரு ஷெல் விழுகிறது. முற்பகல்-11.30 மணியின் பின்னர் நோயாளர்களிருந்த இடத்தில் எறிகணைத் தாக்குதல் நடத் தப்படுகிறது. சம்பவத்தில் ஏழு பேர் பலியாகிறார்கள். நேரம் நகர நகர யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் ஒருவித அச்சநிலை உருவா கிறது.

இந்திய இராணுவம் முன் பகுதியால் துப்பாக்கியால் சுட்டவாறு வந்து மருத் துவமனையின் ஒன்பதாம் விடுதியில் நிலை கொண்டிருக்கிறார்கள். அப்போது நாங்கள் குப்புறப்படுத்த நிலையில் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் முத லாவதாக கிளிநொச்சியைச் சேர்ந்த வேதராணியம் என்ற மருத்துவ ஊழியர் பலியாகிறார். இதன்பின்னர் மருத்துவ மனையின் பல பக்கங்களிலும் துப்பாக் கிச் சூடும், எறிகணைக் குண்டுத் தாக்கு தல்களும் நடாத்தப்படுகிறது.

இதன்போது ஐயோ...ஐயோ...என மக்கள் கதறிக் கொண்டு வேதனையின் உச்சநிலையில் மக்கள் எங்கே பாது காப்புத் தேடுவது? எனத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். மருத்துவமனை யின் ஊழியர்களும், நோயாளர்களும் தங்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற் காக இரத்த வெள்ளத்தின் மத்தியிலும் ஒருவருக்கு மேல் ஒருவர் சாய்ந்து கொள்கிறார்கள். இந்திய இராணுவம் சுமார் ஒரு மணித்தியாலம் வரை யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனைக்குள் ஒரு ஊழிக் கூத்து ஆடி முடிக்கிறது.

அன்றையதினம் மாலை 4 மணிக்குப் பின்னர் மருத்துவமனைக்குள் ஒருவித நிசப்த நிலை நீடித்த நிலையில் எவரும் எழும்ப முடியாத நிலை, எவரும்



கழிப்பறைக்குச் செல்ல முடியாத நிலை தொடர்கிறது. இரத்த வெள்ளத்தில், இரத்த வாடைக்கு மத்தியில் பலரும் 18 மணித்தியாலங்களுக்கும் மேலாக அல்லலுற்றுக் கொண்டிருந்த போது அடுத்தநாள் 22 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் எல்லோராலும் நன்கு அறியப்பட்ட குழந்தைப் பேறு வைத் திய நிபுணர் சிவபாதசுந்தரத்துடன் மூன்று தாதிய உத்தியோகத்தர்களும் வெள்ளைக் கொடியைப் பிடித்தவாறு இரண்டு கைகளையும் உயர்த்தியவாறு




தாம் யாரென்பதைக் கூறியவாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்குப் பின்புறம் தற்போது இரத்த வங்கியிருக்கின்ற இடம் வாயிலாக என்ன நடந்தது? என்பதை அறிவதற் காகச் சென்று கொண்டிருக்கின்றார்கள். எனினும், அவர்கள் அவர்களுக்கு இந் திய இராணுவத்தின் துப்பாக்கிச் சூடு பரிசாகக் கிடைத்த நிலத்தில் மூவரும் அப்படியே நிலத்தில் சரிந்து விழுந்து உயிரிழக்கிறார்கள்.

மொத்தமாக இந்திய இராணுவம் 20 மணி நேரமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் நடாத்திய வெறி யாட்டத்தில் 3 மருத்துவர்கள், 21 மருத்துவமனை உத்தியோகத்தர்கள், 20 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் உள் ளிட்ட 70 இற்கும் மேற்பட்டவர்கள் அநியாயமாகப் படுகொலை செய்யப் பட்டனர். இந்தச் சம்பவத்தில் எத்த னையோ பேர் உடல் சிதறிப் பலியாகியி ருந்தார்கள்.

22 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்குப் பின்னர் வைத்திய அதிகாரி ஒருவர் ஊடாக ஒரு இராணுவ அதிகாரி அங்கு வருகை தந்தார். வைத்திய அதிகாரி பொன்னம்பலம் மெல்ல மெல்லத் தள்ளாடிய நிலையில் ஒருவரையும் பயப்பட வேண்டாம் எனக் கூறியவாறு அங்கு வருகிறார். இரத்த வெள்ளத் துக்கு மத்தியிலும், புகை மண்டலத் திற்கு மத்தியிலும் மூச்சுக் காற்றுக் கூட வெளியே வர முடியாமலிருந்த பலரும் ஒருவித அச்சத்திற்கு மத்தியில் எழும்பு கிறார்கள். அதன்பின்னர் இங்கே சம்ப வங்கள் எதுவும் நடந்ததாக நீங்கள் காட்டிக் கொள்ளக் கூடாது என விடுக் கப்பட்ட எச்சரிக்கையின் அடிப்படை யில் தான் அங்கு உயிரிழந்த நிலையில் காணப்பட்ட வைத்திய அதிகாரிகள், ஊழியர்கள், நோயாளர்கள் என அனை வரும் அங்கிருந்த வண்டில்கள் மூலம் ஏற்றிச் செல்லப்பட்டு மருத்துவமனை யின் பின்பக்கமாகக் கொண்டு சென்று அங்கிருந்த தீராந்திகளை அடுக்கி அதன் மேல் போட்டு எரிக்க வேண்டிய துயர மான நிலையேற்பட்டது.

இந்திய இராணுவம் அரக்கத்தன மாக, மிகவும் மோசமான முறையில் இனப்படுகொலைச் சம்பவத்தை அரங் கேற்றித் தற்போது 36 வருடங்களைக் கடந்துள்ளது. எனினும், இந்தப் படு கொலையை இந்திய இராணுவம் செய் தது என்பதை மூடி மறைக்கும் வகை யில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனை நிர்வாகம் செயற்பட்டு வருகிறது என்றார்.



# சரணடைந்தோரின் பட்டியலை வெளியிடுங்கள்

## – சர்வதேச அமைப்பு சிறீலங்காவிடம் வலியுறுத்தல் –

ஆட்கொணர்வு மனு வழக்கில் சட்டத்தரணிகளால் வேண்டுகோள் விடுக்கப்பட்டதைப்போன்று 2009 மே மாதம் 18ம் திகதி சரணடைந்தவர்களின் பட்டியலை ஒப்படைக்குமாறு 58வது படைப்பிரிவுக்குக் கட்டளையிடல் உள்ளடங்கலாக வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் தாம் சிரத்தையுடன் செயற்படுவதை நிரூபிப்பதற்கான நடவடிக்கைகளை சிறீலங்கா அரசாங்கம் முன்னெடுக்கவேண்டுமென சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து யஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: காணாமல் போனோரின் குடும்பத்தினர் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்வதற்காக பல வருடகாலமாக காத்திருக்கின்றனர். எனவே, காணாமல்போனோர் தொடர்பில் உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் சிறீலங்கா அரசாங்கம் சிரத்தையுடன் செயற்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தவேண்டிய நேரம் வந்துவிட்டது.

இலங்கையில் காணாமல்போனோரின் குடும்பத்தினர், குறிப்பாக தென் பகுதியைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து 33 ஆவது ஆண்டாக இன்றையதினம் (ஒக்டேபார் 27) தமது உறவுகளை நினைவுகூரவிருப்பதுடன், அவர்களுக்கான நீதியை நிலைநாட்டுமாறும் வலியுறுத்தவுள்ளனர். உண்மைக்கான அவர்களது நீண்டகாலத் தேடல், பல வருடங்களாகத் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் மக்களின் நிலையையும் பிரதிபலிக்கின்றது.

அரசாங்கமானது சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்துவதற்காக வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தை உரியவாறு கையாள்வதாகப் பாசாங்கு செய்துகொண்டு, மறுபுறம் காணாமல் போனோரின் பெற்றோர் உயிரிழக்கும் வரை அவர்களை உண்மைக்காகக் காத்திருக்கச்செய்யக்கூடாது.

இதுவரையான காலப்பகுதியில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் பெற்றோர்கள் 125 பேர் அவர்களது பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறிந்துகொள்ளாமலே உயிரிழந்திருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. அதுமாத்திரமன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் போராட்டங்களில் பங்கேற்போர் மற்றும் நினைவேந்தல்களில் கலந்துகொள்வோரைக் கண்காணிக்கின்ற மற்றும் அவர்கள்மீது அடக்குமுறைகளைப் பிரயோகிக்கின்ற நடவடிக்கைகளும் தொடர்கின்றன.

இவ்விடயத்தைப் பொறுத்தமட்டில் சர்வதேச நியமங்கள் மற்றும் உள்நாட்டில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் பிரகாரம் உண்மையைத் தெரிந்துகொள்வதற்கான தார்மீக உரிமை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உண்டு. இருப்பினும் இதுகுறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கென சிறீலங்கா அரசாங்கத்தினால் புதிதாக நியமிக்கப்படும் பல்வேறு ஆணைக்குழுக்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதியையோ அல்லது ஆறுதலையோ தரமாட்டாது.

இவ்வாறானதொரு பின்னணியில் மாத்தளை மனிதப்புதைகுழி தொடர்பில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர்களால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்துக்கு சிறீலங்கா அரசாங்கம் உடனடியாகப் பதிலளிக்கவேண்டும். அதேபோன்று 1987 - 1990 வரையான காலப்பகுதியில் பணியாற்றிய சகல மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பாளர்களின் பெயர் விபரங்களை வெளியிடவேண்டும். அதேவேளை இக்காலப்பகுதியில் வலிந்து காணாமலாக்கல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள காவல்துறை மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் எதிராகப் பரிந்துரைக்கப்பட்ட நீதிமன்ற வழக்குகளின் முன்னேற்றம் குறித்து நாடாளுமன்றத்துக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

மேலும், ஆட்கொணர்வு மனு வழக்கில் சட்டத்தரணிகளால் வேண்டுகோள் விடுக்கப்பட்டதைப்போன்று 2009 மே மாதம் 18 ஆம் திகதி சரணடைந்தவர்களின் பட்டியலை ஒப்படைக்குமாறு 58வது படைப்பிரிவுக்குக் கட்டளையிடவேண்டும். இராணுவத்தின் 58ம், 59ம் மற்றும் 53ம் படைப்பிரிவுகளின் கட்டளைத்தளபதிகள் மற்றும் துணைத்தளபதிகள் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும்.

இவ்வாறு சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்திட்டம் வலியுறுத்தியுள்ளது.



தொகுப்பு
தாயகத்தில் இருந்து
**தமிழ்நெறி**

# ஈழத் தமிழ்மக்கள் மத்தியில் அதிகரித்தளவில் நிகழும் புலப்பெயர்ச்சி அலை!

**தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் உரையரங்கு நிகழ்வு கடந்த 15.10.2023 நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெற்றது.**

**மேற்படி நிகழ்வில் அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன் 'தமிழ்மக்களுக்கு யார் பொறுப்பு?' எனும் தலைப்பிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் பேராசிரியர். கே.ரி.கணேசலிங்கம் 'பிராந்திய அரசியலில் இஸ்ரேல்- ஹமாஸ் போர்: மாற்றங்களும் விளைவுகளும்' எனும் தலைப்பிலும் கருத்துரைகள் நிகழ்த்தினர்.**

**இந்த உரையரங்கு நிகழ்வில் அரசியல், சமூக ஆய்வாளர் ம.நிலாந்தன் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில்,** உள்ளூரில் தற்போது தமிழ்மக்கள் மத்தியில் ஒரு புலப்பெயர்ச்சி அலையொன்று தோன்றியிருக்கின்றது. எல்லாக் கிராமங்களிலும் குறைந்தது ஒன்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் கனடாவிற்கோ அல்லது லண்டனுக்கோ தினமும் போய்க் கொண்டிருக்கிறார்கள்.புலப்பெயர்ச்சி அலை பொருளாதார நெருக்கடியின் விளைவாக முதலில் சிங்கள மக்கள் மத்தியில் தோன்றியது. ஆனால், தற்போது அதிகரித்தளவில் ஈழத் தமிழ்மக்கள் மத்தியில் நிகழ்கிறது.

தற்போது இளைய தலைமுறை தங்களுக்குள் சந்திக்கும் போதெல்லாம் எப்படி விசிட் விசாவில் போறது? அல்லது எப்படி பெமிட்டை வைத்துக் கொண்டு போறது?, இதற்கு எந்த ஆங்கிலச் சோதனை எழுத வேண்டும்? என்பதைப் பற்றிய உரையாடல் தான் பெருமளவில் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது.

கனடாவில் தமிழ்மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் ஏறக்குறைய 30 நிலையங்கள் இயங்குகின்றன எனவும், அவற்றில் இந்த விசிட் விசாவிற்கு ஒரு போமை நிரப்புவதற்கு ஒருவரிடம் 1000 கனேடியன் டொலர்கள் அறவிடப்படுவதாகவும் தெரிய வருகிறது.

பிரித்தானியா, கனடா போன்ற நாடுகள் தங்கள் குடிவரவு விதிகளில் சில தளர்ச்சிகளை ஏற்படுத்தியுள்ளன. கனடாவைப் பொறுத்தவரை அந்நாட்டிற்குப் பொருளாதார நெருக்கடியுண்டு.

எனவே, கனடாவுக்கு மலிவான வேலையாட்கள் வேண்டும். இங்கிருந்து செல்பவர்களுக்கு மலிவான சம்பளம் கொடுக்கலாம். கனடாவில் பிறந்து அங்கேயே வாழ்பவர்கள் உயர்ந்த சம்பளம் கேட்பார்கள். உயர்ந்த சம்பளம் கொடுப்பதைத் தவிர்ப்பதற்கு இங்கிருந்து மலிவுக் கூலிகளை அவர்கள் அனுமதிக்கிறார்கள் என்கின்றதொரு விளக்கமும் உண்டு.

பிரித்தானியாவைப் பொறுத்தவரை அங்கு வாழும் தமிழர்கள் தங்கள் வியாபார நிலையங்களுக்கு இவ்வளவு பேர் தேவை என்று பெர்மிட் எடுத்து அதனடிப்படையில் ஒருதொகுதியினரை உள்ளீர்த்து வருகின்றனர். இந்த இரு நாடுகளும் ஓரளவுக்கு விசா விதிகளைத் தளர்த்தியிருந்தாலும் கூடப் புலம்பெயர் தமிழர்கள் தாயகத்தில் வாழும் உறவினர், நண்பர்கள், வேண்டியவர்களுக்குத் தொண்டு செய்யக் கூடிய தகைமையை அடைந்திருக்கின்றமையாலும் புலப்பெயர்ச்சி அலை அதிகளவில் நிகழ்கிறது. தமிழ்மக்கள் மத்தியிலிருந்து இளையவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

திருகோணமலையைச் சேர்ந்த அதிபரொருவர் பாலர் பாடசாலையில் கல்வி கற்கும் ஆசிரியர் ஒருவரின் வகுப்பிலிருந்து அண்மையில் ஆறு பிள்ளைகள் வெளிநாட்டிற்குப் போய்விட்டதாக என்னுடன் கதைக்கும் போது கூறியிருந்தார். திருகோணமலை ஏற்கனவே சிங்கள - பௌத்த மயமாக்களால் வெளுக்கப்பட்டதொரு இடம். இந்நிலையில் அங்கிருந்து தமிழ்மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்திலும் எல்லாக் கிராமங்களிலுமிருந்தும் இளையவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒருபுறம் ஒரு இளம் தலைமுறை தாகத்துடன் வெளியேறுகிறது. இன்னொரு புறம் தமிழ்மக்கள் மத்தியில் பிள்ளைப் பேறு வீதம் குறைந்து விட்டது. கடந்த ஆண்டு தொடக்கத்தில் யாழ்ப்பாணம் சர்வோதய நிறுவனத்தில் நடுத்தர வயதைக் கடந்த பெண்களுடன் ஒரு சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போது உங்களில் எத்தனை பேர் மூன்றுக்கும் மேற்பட்ட பிள்ளைகளுடன் கூடப் பிறந்தீர்கள்? எனக் கேட்டேன். அங்கிருந்த பெரும்பாலானவர்கள் கையை உயர்த்தினார்கள். அதன் பின்னர் உங்களில் எத்தனை பேருக்கு இரண்டுக்கு மேற்பட்ட பிள்ளைகளிருக்கின்றன எனக் கேட்டேன். அங்கிருந்த 60 பேர்களில் நான்கு பேர் மாத்திரமே கைகளை உயர்த்தினார்கள்.

புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ்மக்கள் மத்தியில் இதனை விட மோசமானதாக ஒன்று அல்லது இரண்டு பிள்ளை எனும் நிலையே காணப்படுகிறது. மொத்தத்தில் தமிழ்மக்களின் சனத்தொகை சிறுக்கிறது. இங்கிருந்து திருமணம் செய்து வம்சவிருத்தி செய்யும் பெண்கள் வெளியே போய்க் கொண்டிருக்கிறார்கள். அதுமாத்திரமன்றி தொழில், படிப்பு எனக் கூறிக் கொண்டு ஒரு பெரிய தொகையினர் வெளியேறி வருகிறார்கள். இவ்வாறு வெளியேறுபவர்கள் எத்தனை பேர் என்ற மையப்படுத்தப்பட்ட புள்ளிவிபரம் எங்களில் யாரிடம் இருக்கிறது? யார் தங்களைத் தமிழ்மக்களுக்குப் பொறுப்பு என்று கருதுகின்றார்களா? அவர்கள் தான் அந்தப் புள்ளிவிபரத்தைத் தேடிப் போவார்கள். தாயகத்திலிருந்து எத்தனை பேர் புலம்பெயர்ந்து விட்டார்கள் என்பது தொடர்பில் கூட எம்மத்தியில் சரியான தரவுகளில்லை. மூன்று தமிழர்களில் ஒருவர் அல்லது நான்கு தமிழர்களில் ஒருவரென்று சொல்வார்கள்.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் செல்வாக்கு மிக்க வாக்காளர்களாகத் தற்போது வளர்ந்து விட்டமையால் தான் அந்நாடு ஈழத் தமிழர்கள் விடயத்தில் அதிக அக்கறை காட்டுகின்றது. நாங்கள் மையமில்லாதவர்கள். எங்களுக்கு யாரும் பொறுப்புக் கூறுவதில்லை. வெளியே அரசாங்கத்தைப் பொறுப்புக் கூறுமாறு கேட்கின்ற எங்கள் கட்சித் தலைவர்கள் யாருமே தமிழ்மக்களுக்குப் பொறுப்புக் கூறுவதில்லை என்பதற்கு மிக எளிமையான உதாரணம் தமிழ்மக்களின் இந்தப் புலப்பெயர்ச்சி அலை.

வாக்காளர்கள் வெளியேறுகிறார்கள். எதிர்காலத்தில் ஆளற்ற வீடுகளைக் கொண்ட கிராமத்தில் விகாரைகளை எதிர்ப்பின்றிக் கட்டி விட்டுப் போகக் கூடியதொரு சூழல் உருவாகும் அபாயம் காணப்படுகின்றது. நயினாதீவு உற்சவ காலப் பகுதியில் மக்கள் 4000 இற்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்ட புங்குடுதீவு உள்ளிட்ட ஆட்களற்ற கிராமங்களைக் கடந்து லட்சக்கணக்கான மக்கள் நயினாதீவு செல்வார்கள். இலங்கையிலேயே ஆட்களற்ற பகுதிகளை அதிகம் கொண்ட பகுதி தீவுப் பகுதி. இந்த நிலைமை ஏனைய கிராமங்களுக்கும் விரைவில் வரக் கூடும்.

தொண்டைமானாறிலிருந்து வல்வெட்டித்துறை நோக்கிச் செல்லும் கடற்கரைச் சாலையில் புதிய பிரமாண்டமான மாடி வீடுகளைக் காணலாம். ஆனால், பெரும்பாலான வீடுகளில் வீட்டுக்கு காவலாக ஒரு காவலாளி நிற்பதையே காணலாம். வீட்டைக் கட்டிவிட்டு வெளிநாடு செல்பவர்கள் வீட்டுக்கு காவலாக ஒருவரைச் சம்பளம் கொடுத்து நியமித்துவிட்டுச் செல்கிறார்கள்.

ஒருபுறம் நிலத்தை அரசாங்கம் அபகரிக்கிறது. மறுபுறம் சனத்தொகை குறைகிறது. இன்னொரு புறம் புலப்பெயர்ச்சி நடந்து கொண்டேயிருக்கிறது. இதுவொரு அடிப்படையான, பாரதூரமான பிரச்சினை என்றார்.

**தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில்,**

தமிழ்த்தேசிய இனத்தின் அரசியலை மாத்திரம் அபிலாசையாகக் கொண்ட தேர்தல் அரசியலில் நாங்கள் ஈடுபட மாட்டோம், கட்சி அரசியலில் பாரபட்சம் காட்ட மாட்டோம் என்று சொல்லக் கூடிய எங்களுடைய பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை இணைத்துக் கொண்டு ஒரு வலுவான சிவில் சமூகக் கட்டமைப்பைத் தமிழ் சிவில்






செயற்பாட்டாளர்கள் இணைந்து உருவாக்க வேண்டும். இவ்வாறு உருவாக்கப்படும் சிவில் சமூகக் கட்டமைப்பு தமிழ்க் கட்சிகளின் மூக்கணாங் கயிறைத் தங்கள் வசம் வைத்திருந்தால் மாத்திரம் தான் இந்த மண்ணும் உருப்படும். மக்களும் உருப்படுவார்கள்.

தமிழ்மக்களின் கதி இதுதானா? மாற வேண்டும். மாற்ற வேண்டும். அந்த மாற்றம் யாரால் நிகழும்? தற்போது செயற்பட்டு வரும் எந்தவொரு அரசியல் கட்சியாலும், எந்தவொரு அரசியல் கட்சிகளின் தலைவர்களாலும் ஆக்கபூர்வமான மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

சிவில் சமூக அமைப்பில் பதவி வகிக்கும் ஒருவருக்கு அந்த அமைப்பின் மூலம் பிரபல்யம் கிடைத்து விட்டால் அவர் நேரடியாக அரசியலுக்கு வந்து விடுகிறார். அல்லது சிவில் அமைப்புக்கள் கட்சிகளின் பிணாமிகளாகச் செயற்படுகிறார்கள். அரசியல் பத்தி எழுத்தாளர்களில் கூட ஏதோவொரு அரசியல் கட்சியில் வேட்பாளர்களாகப் போட்டியிட்டவர்கள் இருக்கிறார்கள். இவர்களால் தாங்கள் சார்ந்த கட்சிகளுக்கு விரோதமாக ஒரு கருத்தைப் பத்திரிகையில் முன்வைக்க முடியுமா? நிச்சயமாக முடியாது.

தமிழ்த்தேசியத்தைப் பொறுத்தவரை ஆறுகள் ஒருபோதும் பின் நோக்கிப் பாய்வதில்லை என்பது போல வரலாறும் ஒருபோதும் பின் நோக்கித் திரும்பாது என்பதில் நான் ஆணித் தரமான கருத்தைக் கொண்டவனாக இருக்கின்றேன். தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டது. எங்களை எந்த இடத்தில் அந்த விடுதலைப் போராட்டம் கொண்டு வந்து நிறுத்தியதோ அந்த இடத்திலிருந்து பயணிப்பவர்களாகத் தான் நாங்கள் இருக்க முடியும்.

ஆயுதப் போராட்டம் சாத்தியமற்றதொரு நிலையில் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவது என்பது வரலாற்றைப் பின்னோக்கி நகர்த்தி 30, 40 வருடங்களுக்குப் பிந்திய ஒரு போராட்ட வழிமுறையிலிருந்து நாங்கள் மீண்டும் தொடர்வதா? என்கின்றதொரு கேள்வி எழுகிறது. அவ்வாறல்ல.

தமிழ்த்தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் போராட முன்வர வேண்டும். தாம் வீதிக்கு இறங்காமல் மக்களை வீதிக்கு இறங்குங்கள் என்று கோருவது எந்த வகையிலும் சாத்தியமில்லாத விடயம். நாங்கள் இதயசுத்தியாகப் போராடுகின்றோமா என்றால் நிச்சயமாக இல்லை.

இதயசுத்தியுடனும், ஆத்ம சுத்தியுடனும் இல்லாமல் நாங்கள் முன்னெடுக்கின்ற போராட்டம் எவ்வாறு வெற்றி பெறும்? அரசியல் தலைவர்கள் உண்மையாக, இதய சுத்தியாகப் போராட முன்வருவார்களாகவிருந்தால் நிச்சயமாக மக்கள் அவர்களுடன் கைகோர்த்துப் போராடுவதற்குத் தயாராகவிருக்கிறார்கள். அரசியல் கூட்டங்களில், பொதுமேடைகளில், புகைப்படங்களில் நாங்கள் முன்னுக்கு நிற்பதற்கு முண்டியடிக்கின்றோம். நாங்கள் முன்னுக்கு நிற்பதல்ல பிரச்சினை. நாங்கள் முன்மாதிரியாக நடந்து காட்டினால் மக்கள் எங்களை நம்புவார்கள்.



எங்கள் கையசைவிலும், கண்ணசைவிலும், துப்பாக்கி முனைகளிலும் இந்த உலகத்தைக் கட்டிப் போடுவதற்கு நாங்கள் பிரபாகரனல்ல. தேசியம் பேசுகின்ற போலிகள். இதனால் தான் மக்கள் எங்கள் பின்னால் வருவதற்குத் தயங்குகின்றார்கள்.

போராட்ட வடிவங்களை நாங்கள் மீளவும் செப்பனிடுவது எவ்வாறு? காலிமுகத்திடலில் சிங்கள மக்கள் ஒருங்கிணைத்த போராட்டத்தை மாதக் கணக்காக முன்னெடுக்க முடியுமாகவிருந்தால் அவ்வாறானதொரு போராட்ட வடிவத்தை எதற்காக எங்கள் தலைவர்களால் முன்னெடுக்க முடியாது. எங்கள் வேட்டிகளின் தலைப்புக் கூட கசங்கக் கூடாது என்று எண்ணிக் கொண்டு நாங்கள் போராட்டத்திற்கு அழைப்பு விடுவது சரியானதா?

நாங்கள் ஆயுதங்களைக் கைவிட்டோமென இன்று கவலைப்படுகின்றோமென தமிழ்த்தேசியக் கட்சியொன்றின் தலைவரொருவர் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். துண்டையும், துணியையும் காணோமென்று மக்களை விட்டுவிட்டு ஓடியவர்கள் தான் இன்று இவ்வாறு கூறுகின்றார்கள். இவர்கள் எங்களுக்கு மீட்பர்களா? இவர்கள் எங்களுக்கு ஏதாவது பெற்றுத் தருவார்கள் என்று நீங்கள் நம்புகின்றீர்களா? இது தமிழ்மக்களையும் ஏமாற்றி மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்களுக்குத் தங்களின் ஒவ்வொரு முகங்களையும் காட்டித் தங்களை வளர்த்துக் கொள்ளுகின்றதொரு யுக்தி **என்றார்**.

# இனப்படுகொலை இராணுவத் தளபதி இயற்கை மரணம்

சிறீலங்காவின் முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் லயனல் பலகல்ல மரணமடைந்துள்ளார். தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையில் பெரும் பங்கையாற்றிய சிறீலங்காவின் இராணுவத் தளபதிகளில் இவர் மிகவும் முக்கியமானவர்.

சிறீலங்காவின் 16வது இராணுவத் தளபதியான ஜெனரல் லயனல் பலகல்ல, அந்நாட்டு இராணுவத்தில் 1967 முதல் 2005 வரை பதவியில் இருந்தவர். ஆரம்பத்தில் இராணுவத்தின் ஆட்டிலெறிப் படைப்பிரிவிலும் பின்னர் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இயக்குராகவும் என பல்வேறு நிலைகளில் பணியாற்றி சிறீலங்கா இராணுவத்தின் தளபதியாகப் பதவி உயர்வு பெற்றவர்.



1993ம் ஆண்டு விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்ட 'தவளைப் பாய்ச்சல்' பூநகரி இராணுவ நடவடிக்கையில் சிறீலங்கா இராணுவம் பேரிழப்பைச் சந்தித்தற்காக இவர் இராணுவ நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்.

அதன் பின்னர் 1994ம் ஆண்டு வன்னிப் படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். பின்னர் 1996ம் ஆண்டு யாழ்குடா இராணுவத்தினரால் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டதன் பின்னர் யாழ் மாவட்டத்திற்கான சிறீலங்கா இராணுவத் தலைமையகத்தின் தளபதியாகவும் இவர் நியமிக்கப்பட்டார். இதன்போதே இவர் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவின் இயக்குநராகவும் செயற்பட்டார். ஏராளமானவர்கள் யாழ்குடா நாட்டில் தினத்தோறும் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட நிகழ்வுகள் இவரது காலத்திலேயே நடந்தேறின.

அதன் பின்னர் சிறீலங்கா இராணுவம் வன்னி நிலப்பரப்பில் முன்னெடுத்த மிகப்பெரும் இராணுவ நடவடிக்கைகளான ரிவிபல (1998), ரணகோசா 1, 2, 3, 4 (1999) ஆகிய நடவடிக்கையின் தளபதியாகவும் இவர் இருந்துள்ளார். ஜெயசிக்குறு நடவடிக்கையிலும் இவரது பங்கு காத்திரமாக இருந்துள்ளது.

2002ம் ஆண்டு சமாதனப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் சிறீலங்காவின் இராணுவத்தின் தளபதியாக நியமிக்கப்பட்டிருந்த இவர் 2005ம் ஆண்டு ஓய்வுபெற்றுச் சென்றார்.

இந்நிலையில், கொழும்பு நகரன்பிட்டியவிலுள்ள இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், தனது 75வது வயதில் கடந்த ஒக்டோபர் 26ம் திகதி அவர் இயற்கை மரணமடைந்தார்.

# லைகா நிறுவனங்கள் மீது பிரான்சில் பத்து மில்லியன் அபராதம்!




'லைகா' இது நாமறிந்த, நம்மவர்களின் ஒரு தொலைத்தொடர்பு நிறுவனம் என்பது யாவரும் அறிந்ததே. உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் இவர்களது தொலைத்தொடர்பு நிறுவனம் சேவைகளைக் கொண்டுள்ளது.

இந்நிறுவனமானது பல நாடுகளில் பண மோசடிகளில் ஈடுபட்டு தடைசெய்யப்பட்டுள்ளது என்பதவும் குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் கடந்த மாதம் பிரான்ஸ் இந்நிறுவனத்திற்கு மிகப்பாரிய தொகையிலான அபராதத்தினையும் சில பிரதான நிர்வாகிகளுக்கு நீண்டகாலத் தண்டனைகளையும் வழங்கியுள்ளது.

இந் நிறுவனம் 2014ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மேற்கொண்டதாகக் கூறப்படும் பலவித நிதி மோசடிகளை ஆராய்ந்த நீதிமன்றம் பத்து மில்லியன் ஈரோக்கள் தண்டனையை கடந்த வாரம் வழங்கியது.

பிரான்சில் இயங்கும் லைகாவின் இரண்டு நிறுவனங்கள் மேற்கொண்ட நிதி மோசடிகள் மற்றும் தண்டனைகள் குறித்து பிரான்சின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது பற்றி அறியப்படுவதாவது, மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் இந் நிறுவனங்களின் குறிபிட்ட சிலர் மற்றும் தமிழர்களின் ஏராளமான வர்த்தக நிறுவனங்கள் உள்ள பகுதியில் இயங்கும் இரண்டு வர்த்தகர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட முறையற்ற பணப் பரிமாற்றம், ஊழியர்களுக்கு முறையற்ற கொடுப்பனவுகள், அரசிற்கான வரி மோசடிகள் போன்றவை ஆராயப்பட்டு பல மாதங்கள் நடந்த விசாரணையின் இறுதியில் சில உயர் நிர்வாகிகளுக்கு இரண்டு வருடம் வரையிலான சிறைத்தண்டனையும் மிகப்பாரிய அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இந்த மோசடி வலையமைப்பில் இருந்ததாக அறியப்பட்ட சிலருக்கும் குறுகிய கால சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இந்த தீர்ப்பினையிட்டு கவலை தெரிவித்த லைகா நிறுவனம் இதனை எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளதாயும் தெரிவித்துள்ளது.




## தமிழர் தாயகத்தை தொடர்ந்தும் ஆக்கிரமிக்கும்

# பௌத்த விகாரைகளும் புத்தர் சிலைகளும்

சிங்களப் பேரினவாதிகளின் பௌத்த ஆக்கிரமிப்பு வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் முற்றுப் பெறவில்லை என்பதை தொடர்ந்து வரும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. சிறீலங்காவின் தொல்பொருள் திணைக்களமானது நாட்டின் வட, கிழக்கு மாகாணங்களில் அப்பிரதேசங்களிலுள்ள கட்டடமைப்புக்கள் மற்றும் பௌத்த பிக்குகளுடன் இணைந்து இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் வணக்கத்தலங்களைக் கைப்பற்றுவதற்கு வசதி ஏற்படுத்துகின்றது என சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளபோதும் சிறீலங்காவின் இந்த பௌத்த ஆக்கிரமிப்பு கொஞ்சம்கூடக் குறையவில்லை.

திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் தமிழர்களுடைய பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் கடந்த நவம்பர் 6ம் திகதி புத்தர்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. திருகோணமலை நிலாவெளி பிரதான வீதியின் இலுப்பைக்குளம் பகுதியில் தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் இடம்பெற்று வருகின்ற பொரலுகந்த ரஜமாகா விகாரைப் பகுதியில் பௌத்த பிக்குகள் மற்றும் சிங்கள மக்களினால் இரண்டு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் ஆரம்பத்தில் புத்த விகாரை கட்டுவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் அதற்கு அப்பகுதி மக்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது. அத்துடன் குறித்த விடயம் தொடர்பாக கிழக்கு ஆளுநரிடம் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் முறையிட்டதை யடுத்து கடந்த ஓகஸ்ட் மாதம் ஆளுநரினால் குறித்த கட்டுமானங்களுக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் தடையுத்தரவையும் மீறி குறித்த பகுதியில் கட்டுமானப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் அதற்கு எதிராக பொதுமக்கள் 03.09.2023 அன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இதன் போது விகாரையின் கட்டுமானங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்க முற்பட்ட மக்களுக்கு நீதிமன்ற தடை உத்தரவை வாசித்து காட்டிய சிறீலங்கா இனஅழிப்புக் காவல்துறையினர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்க மறுத்ததுடன் அங்கிருந்தவர்கள் துரத்தியடிக்கப்பட்டனர்.

இதன் பின்னர் 09.09.2023 அன்று குறித்த பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை நடப்பட்டு தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் எவ்வித அனுமதி இல்லாத நிலையிலும் கட்டுமானப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு நவம்பர் 6ம் திகதி குறித்த பகுதியில் இரண்டு புத்தர்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

பௌத்த மக்களே இல்லாத, தமிழ் மக்கள் காலாகாலமாக வாழ்ந்து வருகின்ற இப்பகுதியில் இன முறுகலை ஏற்படுத்தும் விதமாகவும், இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் முகமாகவும் சிலர் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாகவும், புத்த விகாரையின் கட்டுமானங்களைத் தொடர்ந்து இப்பகுதிகளைச்சூழ சிங்கள மக்களை குடியேற்றும் திட்டம் உள்ளதாகவும் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

இதேவேளை, முழுமையாக முஸ்

லிம்கள் வாழும் கிண்ணியா குரங்கு பாஞ்சான் கிராமத்துக்கு பௌத்த பிக்குகள் சென்று, அங்குள்ள பழைய இராணுவ முகாம் காணியை பார்வையிட்டுச் சென்றுள்ளமை பொதுமக்களிடையே பீதியை ஏற்படுத்தியுள்ளது. இன உறவை சீர்குலைக்க முயற்சிக்க வேண்டாம் என சம்பந்தப்பட்டோரை நான் கேட்டுக் கொள்கிறேன் என திருகோணமலை மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவின் மஜீத் நகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் குரங்குபாஞ்சான் கிராமம் உள்ளது. இது ஒரு விவசாயக் கிராமமாகும். விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை காலப்பகுதியில் சர்வதேசம் வரை இக்கிராமம் பற்றி பேசப்பட்டுள்ளது. இங்கு முழுமையாக முஸ்லிம்களே வாழ்ந்து வருகின்றனர். இங்கு இராணுவ முகாமொன்று இருந்து தற்போது இராணுவத்தினர் அகன்று சென்றுள்ளனர். இந்நிலையில், இராணுவ முகாம் அமைந்திருந்த இக்காணியை பௌத்த பிக்கு ஒருவர் தலைமையிலான குழுவினர் அண்மையில் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இது அங்கு வாழும் மக்களிடையே சந்தேகத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. பல்லாண்டு காலம் சமூகமாக மக்கள் வாழ்ந்து வரும் பகுதியில் இவ்வாறு செயற்படுவது இன உறவைச் சீர்குலைக்கும் முயற்சியாக அமைந்து விடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, வடக்கில் யாழ். காங்கேசன்துறை - மாங்கொல்லை பகுதியானது கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக சிறீலங்கா இனஅழிப்பு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. தற்பொழுது அந்த பகுதியானது இராணுவ கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்ட நிலையில், அப் பகுதியில் உள்ள ஞான வைரவர் ஆலயத்திற்கு முன்பாக ஒரு அரச மரம் உள்ளதுடன் அந்த அரச மரத்தின் கீழ், ஆலயத்தை பார்க்கின்ற வகையில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் இருந்து புலம்பெயர்ந்து சுவிஸில் வசிக்கும் குடும்பம் ஒன்று, தமது காணிகள் விடுவித்ததையடுத்து அதனை பார்வையிடுவதற்கு தமது சொந்த இடமான மாங்கொல்லை பகுதிக்கு சென்றிருந்தனர்.

இதன்போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில், இந்த ஞானவைரவர் ஆலயம் எங்களது குல தெய்வம். இந்த ஆலயத்திற்கு சற்று தள்ளி முன் பக்கமாக ஒரு ஆலமரம் மாத்திரமே நின்றது. ஆனால் தற்போது ஆலயத்தின் முன் பக்கமாக தற்போது அரச மரம் உள்ளதுடன், அதன் கீழ் புத்தர் சிலையும் உள்ளது. இது நாங்கள் புலம்பெயர்ந்து சென்ற பின்னர் நாட்டப்பட்ட மரமாகத்தான் இருக்க முடியும் என தெரிவித்தனர்.

அந்த பகுதியில் இருந்த இராணுவத்தினர் தமக்கு வழிபட வேண்டிய தேவை இருந்தால் புத்தர் சிலையை வேறு ஒரு இடத்தில் வைத்து வழிபட்டிருக்க முடியும். ஆனால் அவர்கள் குறித்த ஆலயத்திற்கு முன்பாக அரச மரத்தினை வைத்து வளர்த்து, அதன் கீழ் புத்தர் சிலையை வைத்துள்ளமை மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு அச்சத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

# பௌத்த விகாரைகளுக்கு இந்தியா பல கோடி நிதி வழங்கல்!

சிறீலங்கா இலங்கைத் தீவெங்கும் பௌத்த விகாரைகளை நிறுவி, புத்தர் சிலைகளை வைத்துவரும் நிலையில் அண்மையில் மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இலங்கை சென்றிருந்த இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பௌத்த உறவுகளை மேம்படுத்துவதற்காக பல கோடி ரூபாக்களை வழங்கியுள்ளார்.

இந்திய வம்சாவளி மலையக மக்கள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு 200 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளமையை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'நாம் 200' நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்துகொள்வதற்காக இவர் வந்திருந்தார்.



இந்நிலையில், கடந்த நவம்பர் முதலாம் திகதி நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கண்டியில் உள்ள அஸ்கிரிய பௌத்த மடாலயத்தின் பீடாதிபதி வரகாகொட சிறீ ஞானரதன தேரர் மற்றும் மல்வத்து மடாலயத்தின் பீடாதிபதி குரு திப்பட்டுவாவே சிறீ சித்தார்த்த சுமங்கல தேரர் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார். இவர் மகாநாயக்கருடனான தனது சந்திப்பின் போது, பௌத்த மதம் சார்ந்த உறவுகளை ஊக்குவிப்பதற்கான 107.47 கோடி ரூபா நிதியுதவியின்கீழ் மத வழிபாட்டுத் தலங்களில் சூரியமின் உற்பத்திக்கான திட்டத்துக்கு 82.40 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, சிறீலங்காவிற்கும் இந்தியாவுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான பௌத்த தொடர்புகளைப் பலப்படுத்துவதற்கான செயற்திட்டங்களுக்காக இந்திய அரசாங்கத்தினால் 15 மில்லியன் டொலர்களை அன்பளிப்புச் செய்வதற்கான இரு தரப்பு ஆவணங்கள் சிறீலங்கா ஜனாதிபதிக்கும் இந்திய மத்திய நிதியமைச்சருக்கும் இடையிலான சந்திப்பின் போது பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இந்தியாவின் டில்லியிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அவர், யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையம் ஊடாக இந்தியா திரும்பினார்.

இதேவேளை, இந்திய அரசாங்கத்தின் சார்பில் தலைவர்கள் எவரேனும் இலங்கைக்கு வருகைதந்தால், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துவிட்டுச் செல்லும் வழக்கமாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் எங்கும் பயணம் செய்திருந்தபோதும் வழக்கத்துக்கு மாறாக, இம்முறை நிர்மலா சீதாராமனுக்கும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு எவையும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



அநபாய சோழன்

# உளவாளிகளின் கதை

01

ஒவ்வொரு போர்கள், ஒவ்வொரு சண்டைகள், ஒவ்வொரு ஆட்சிக்கவிழ்ப்புகள் எலலாவற்றிற்குப் பின்னாலும் எதிரிக்குள் ஊடுருவி வேவு பார்த்தவர்களும், நிழல் மறைவில் வேவு பார்த்தவர்களும், பல காலமாகவே உறங்கு நிலையில் எதிரிக் கோட்டைக்குள்ளேயே பதுங்கிக் கிடந்தவர்களும் என வரலாறுகள் கொட்டிக் கிடக்கின்றன. இந்த உளவாளிகளின் வரலாறுகளை நாம் எம்மைச் சுற்றியுமே பார்த்துள்ளோம்.




ஒவ்வொரு யுத்தத்தின் போக்கை மாற்ற, யுத்தங்களின் முடிவை நிர்ணயிக்க உளவாளிகளானவர்கள், பணத்திற்காக, பதவிக்காக துரோக உளவு செய்தவர்கள் என வரலாறு எமக்குப் பலரை அடையாளம் காட்டியுள்ளது.

இந்தப் புலனாய்வுகளும் உளவுகளும் பல தடவைகள் தோல்வியிலும் முடிந்துள்ளது.

உலகின் முக்கிய, மிகவும் வலுவான உளவு அமைப்பான மொசாட் தன் புலனாய்வில் அடைந்த தோல்வி, அல்லது எதிரியை மதிப்பிடத் தவறியமை இஸ்ரேல் மீது எதிரிகள் தாக்குதல் நடாத்தக் காரணமாக அமைந்துள்ளது. எதிர்ப்புலனாய்வு மற்றும் எதிர் உளவு மொசாட்டின் புலனாய்வை முறியடித்துள்ளது. இது தற்காலப் புலனாய்வு மற்றும் உளவுப் போரின் யதார்த்தமாகும்.

ஆனால் பெரும் காரியங்களைச் சாதித்து எதிரி நாட்டிற்குள்ளேயே உளவு பார்த்து, தாய் நாட்டின் வெற்றியை ஈட்டிக் கொடுத்தாலும் எந்தவிதமான பெயரோ, விருதோ இன்றி நிழல் உலகத்தில் மட்டுமே இயங்கிய எத்தனையோ உளவாளிகள் வெறும் நிழலாக மட்டுமே சென்ற வரலாறுகள் எத்தனையோ உண்டு.

அமெரிக்காவின் வெளியகப் புலனாய்வு அமைப்பான CIA யின் லாங்லே தலைமையத்தின் முக்கிய சுவரில் வெறும் நட்சத்திரங்கள் பெருமளவில் பொறிக்கப்பட்டிருக்கும். பெயர் வெளியில் சொல்லப்படாத, அமெரிக்காவின் பாதுகாப்பிற்காக வீழ்ந்துபட்ட நிழல் உலக உளவாளிகளின் அடையாளங்கள் தான் இந்த நட்சத்திரங்கள்.

இப்படி நிழல்களாகவும், எதிரிக் குகைகளிற்குள் வாழ்ந்து கொடுத்த கடமையை முடித்த மாவீர உளவாளிகள் உலகின் வல்லரசுகளிற்குள் மட்டுமல்ல, அடக்குமுறைகளிற்குள் இருந்து சுதந்திரம் அடையத் துடிக்கும் தேசங்களிலும் இப்படியான உளவாளிகள் தங்களைத் தியாகம் செய்துள்ளனர்.

வேவு மற்றும் உளவிற்காக எதிரியின் பாசறையினுள் சென்றவர்கள் உளவுத் தகவல்களை அனுப்பி விட்டு வெளியேற முடியாத தருணங்களில் தங்களை மாய்த்து மாவீரர்களான வீர வரலாறுகள் எமதினத்தின் வீரவரலாற்றின் தடம்களாக உள்ளன. ஆனால் இவர்களின் தியாக வீரச்சாவை வெளியில் சொல்லி அழவோ அல்லது மாவீரர்களாக வெளிப்படையாக அறிவிக்கவோ முடியாது என்று தெரிந்தும் நிழல் வீரர்களாக இவர்கள் எதிரிக்குள்ளேயே வாழ்ந்து உள்ளார்கள்.

வேவு, புலனாய்வு மற்றும் உளவு ஒன்றுபடும் பொழுது ஒரு நாட்டின் இராணுவ பலம் உறுதி செய்யப்படுகின்றது. பல போர்கள், யுத்தங்கள் வெல்லப்படுகின்றன.

மனிதன் நாகரிகமடையாத காலத்திலேயே மிருகங்களை உணவிற்காக வேட்டையாட, காட்டுக்குள் ஊடுருவி, வேவு பார்த்துக் காத்திருந்து, எந்த மிருகங்கள் எந்த நேரம் வரும் என்று புலனறிந்து வேட்டையாடி உள்ளான். அங்கேயே வேவும் புலனாய்வும் ஊடுருவலும் மனித மூளையில் எழுந்துள்ளது.

பெரும் சர்வதேச உளவு அமைப்புக்களின் உளவாளிகளை முழுமையாகப் பார்ப்பதற்கு முன்னர், முதலில் உளவு வரலாற்றின் முக்கிய காலப் பதிவுகளையும் அதன் ஆரம்ப காலம் பற்றியும் முதலில் பார்ப்போம்.

## சன் சூவின் போர் கலையில் உளவின் ஆரம்பம்

கிமு 5 ஆம் நூற்றாண்டிலேயே சீனாவில் போர்க்கலைத் தத்துவத்தை எழுதிய தளபதி சன் சூ உளவு பார்ப்பது மலைகளைப் போல் பழமையானது என்பதைப் பதிவு செய்துள்ளார். போர்க் கலையை எழுதும்போதே உளவானது மிகவும் பழமையானது என்பதை இவரது தத்துவம் விளக்கி உள்ளது.

எதிரி நாட்டின் பொது மக்களிடமிருந்து உள்ளூர் உளவாளிகள் பணியமர்த்தப்படுவார்கள். அதிருப்தியில்



இருப்பவர்களை ஈரத்து அவர்களிற் கான இழப்புகளை வழங்குவதன் மூலம், உள்ளக உளவாளிகளாக அவர்களை மாற்ற முடியும். எதிரி அதிகாரிகள், எதிரி உளவாளிகளை பணம் மற்றும் பல ஆசைகளைக் காட்டி பயன்



படுத்தி எமக்கான உளவாளிகளாக மாற்ற முடியும்.

எதிரிகளிற்கு உளவு பார்ப்பவர்கள் வெளிப்படையாகக் கொல்லப்படல் வேண்டும். தவறான தகவல்களை வழங்கி அழிவுகளை ஏற்படுத்துபவர்கள் அடையாளம் காணப்பட்டு அழிக்கப்படல் வேண்டும். உளவு அமைப்பானது மாற்றீடு செய்யக்கூடிய அளவு பலம்பெறல் வேண்டும் என சன்-சூ எழுதிய போர்க் கலையின் 13ம் அத்தியாயம் சர்வதேச உளவு அமைப்புகளின் பாடங்களாக மாறி உள்ளது.

**சாணக்கியரின் அர்த்தசாஸ்த்திரம்**

உலக நாடுகளில் இராஜதந்திரம் என்றாலே அது கௌடில்யர் எனும் சாணக்கியரைத் தாண்டிச் செல்வதில்லை. நந்தர்களின் பேரரசை வீழ்த்தி சந்திர குப்த மௌரியனை அரியணை ஏற்றி குப்த சாம்ராஜ்யத்தை பேரரசாக்கியவர் சாணக்கியர்.

இவரின் இராஜதந்திரங்களை அர்த்த சாஸ்திரம் எனும் நூலாக, அவரே எழுதி உள்ளார்.

சன் சூவை விட ஒரு படி மேலே சென்று உளவின் அவசியத்தை இவர் வேறு விதமாக இன்னும் பலமாக நிறுவியுள்ளார். வேறு நாட்டுக்குள் ஊடுருவும் உளவு அமைப்பை இவரே முதலில் ஏற்படுத்தினார். அரசாங்கங்கள் இரகசிய உளவு சேவைக்கு நிதியுதவி செய்ய வேண்டும் என்றும் அவர்களை ஒருங்கிணைக்கும் சேவையும் உருவாக்க வேண்டும் என்றும் சட்டமியற்றினார்.

அரசு அதிகாரிகள், மற்றும் அனைத்து மட்டங்களிலும் உள்ள சதியை மோப்பம் பிடித்து அதனை முற்றாக அழிப்பதும், எதிரி நாட்டிற்குள் உளவு ஒற்றர்களை ஏவி, அங்கு உளவு பார்ப்பதுடன், எதிரி நாட்டிற்குள் கலவரங்களை உருவாக்கி அவற்றை சீர்குலைக்கவும், உளவு அமைப்பை சாணக்கியர் உபயோகித்தார்.



நந்தர்களின் மகத சாம்ராஜ்யத்தை முற்றாக அழிக்க சாணக்கியர் மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டார். மேற்கத்தேய நாடுகளின் அரசுகள் தங்களை உருவாக்குவதற்கு முன்னரே சாணக்கியர் உளவு மற்றும் ஒற்றுப் புலனாய்வின் உச்சத்தைத் தொட்டிருந்தார்.

உளவாளிகள் பயனடைய வேண்டிய வெகுமதிகள் மற்றும் ஊதியங்களை வழங்கி அவர்களை அவர்கள் இரட்டை உளவாளிகள் ஆகும் சாத்தியத்தை முற்றாக நீக்கினார். முதல் உளவு அமைப்பை உருவாக்கி அதனை ஊதியம் பெறும் அமைப்பாகவும் கிறிஸ்துவுக்கு முன் 350 முதல் 275 ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றியிருந்தார்.


**செங்கிஸ் கானின் உறைநிலை உளவாளிகள்**

சீனத்தையும் ஐரோப்பா ஆசியா இணைந்த கண்டமாக இருந்த யூரேசியாவையும் தனது பெரும் வன்முறை



மிகுந்த தாக்குதல்களினால் மண்டியிட வைத்தான் மங்கோலிய சக்கரவரத்தி








செங்கிஸ்கான். செங்கிஸ்கானும் அவரது மங்கோலியப் படைகளும் பெரும்பாலும் காட்டுமிராண்டித் தாக்குதல்களையே மேற்கொண்டு வந்தனர்.

ஆனால், இந்த தாக்குதல்கள் திடீரென காட்டுமிராண்டித் தாக்குதல் போல் இருந்தாலும் அவை வெகு நேர்த்தியாக ஒருங்கிணைக்கப்பட்டவையாகவே இருந்தன. இதற்கு செங்கிஸ் கானின் உளவுப் படைகளின் தரவுகளே பெரும் ஆயுதமாகவே இருந்துள்ளது.

எதிரி பிரதேசத்தில் வாழ்ந்து வந்த இரகசிய முகவர்கள் உளவாளிகளாக இருந்தனர். வணிகர்கள், தூதர்கள் மற்றும் பிற பிரதிநிதிகள் என்ற போர்வையில் இவர்கள் எதிரிகள் மத்தியில் பல மாதங்கள் தங்குவார்கள். தேவையேற்படும் வரை இவர்கள் உறைநிலை உளவாளிகளாகவே தொடர்வார்கள்.

எதிரி உள்கட்டமைப்பினை உளவறிதல், தாக்குதலின் போது நுழையவும், தாக்குதலின் பின்னர் வெளியேறவும் வழிகளைக் கண்டறிதல், மற்றும் சாத்தியமான பாதுகாப்புகளைச் சரிபார்த்தல் போன்ற உளவுத் தகவல்கள்ளை இவர்கள் மங்கோலியப் படைகளிற்கு வழங்கி வந்தனர். மங்கோலியப் படைகள் எதிர்கொள்ளும் அத்தனை தடைகளையும் இந்த உளவுப் படை முறியடித்தன.

இவர்களின் தாக்குதலினைச் சமாளிக்க முடியாமல் சீனா தன்னைச் சுற்றி பெரும் சுவர்களைக் கட்டியது.

செங்கிஸ்தான் படைகள் தங்களது உளவாளிகளை யூரேசியா முழுவதும் பரப்பினான், இரகசிய தகவல் தொடர்புகள் 300 மைல்கள் வரை பயணிக்கும் அளவுக்கு ஒழுங்கமைக்கப்பட்டன.

பல கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை மங்கோலியர்கள் கைப்பற்றியதில் உளவுத்துறை முக்கிய பங்கு வகித்தது.

ஐரோப்பா மீது படையெடுப்பதற்கு முன்பு போலந்து, ஹங்கேரி மற்றும் ஒஸ்திரியா வரை கூட செங்கிஸ்கானின் உளவுப் படைகள் வேவு பார்த்தன.

மிகவும் மூர்க்கமான தாக்குல்களை நடாத்தும் காட்டுமிராண்டிபோல் வரலாற்று ஆசிரியர்களினால் செங்கிஸ் கான் குறிப்படப்பட்டாலும், உளவுப் படைகளின் நேர்த்தியான கட்டமைப்பின் மூலம் மிகவும் திட்டமிடப்பட்ட தாக்குதல்களாகவே செங்கிஸ்கானின் வெற்றிமிக்க தாக்குதல்கள் அமைந்திருந்தன.

உலகின் முதற் பேரரசுகள் எல்லாமே முறையான உளவாளிகளின் பேராற்றல் களினாலேயே எழுந்தன, வீழ்ந்தன.

பிரான்சில் கூட மக்களை வேவு பார்க்க எப்படி உளவாளிகள் உருவாக்கப்பட்டனர் என்பதை அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

*அதுவரை*
*உறைநிலை உளவாளிகளாக...*




இலங்கையில் எவ்வாறானதொரு யுத்தம் இடம்பெற்றது என்பதை விளக்குவதற்காக தயாரிக்கப்பட்ட விசேட அறிக்கை எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படும் என்று தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

**சங்கரியார்:– இனஅழிப்பில் ஈடுபட்ட சரத் வீரசேகர கொடுக்கும் விளக்கம் எப்படி இருக்கும் என்று விளக்கம் தேவையா..?**

இலங்கையிலிருந்து மாலைத்தீவுக்கு மாதாந்தம் 1.5 மில்லியன் முட்டைகள் ஏற்றுமதி செய்யப்படுவதாக சிறீலங்கா விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

**சங்கரியார்:– முட்டை இல்லையென்று இந்தியாவில் இருந்து கடந்த மாதம் இறக்குமதி செய்கின்றார்கள், இந்த மாதம் மாலைதீவிற்கு ஏற்றுமதி செய்கின்றார்கள். இலங்கைக் கோழிகள் நாளொன்றுக்கு நூறு முட்டைகள் போடத் தொடங்கியிருக்குமோ?**

முன்னாள் நாடாளுமன்று உறுப்பினர் ரவிராஜைக் கொலை செய்தது யார் என்பதை விரைவில் அம்பலப்படுத்துவேன்? என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

**சங்கரியார்:– அதனை இப்போதே சொல்வதற்கு ஏன் தயக்கமாம்..?**

யாழ்ப்பாணத்தில் போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடும் குற்றச்சாட்டில் தினமும் சுமார் 200 பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதாக யாழ்ப்பாண மாவட்டத்திற்கான சிறீலங்காவின் பிரதி காவல் மா அதிபர் மஞ்சுள தெரிவித்துள்ளார்.

**சங்கரியார்:– போதையில் ஓடுகின்றார்களா... போட்டிக்கு ஓடுகின்றார்களா..?**

குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை கைது செய்யும் ஒவ்வொரு காவல்துறை அதிகாரிக்கும் 5,000 ரூபா வழங்கும் முன்னோடி திட்டத்தை செயல்படுத்த சிறீலங்கா போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவு முடிவு செய்துள்ளது.

**சங்கரியார்:– போதையில் வருபவர்கள் 5000ற்கு மேல் இலஞ்சம் கொடுத்தால் விட்டுவிடுவார்களோ..?**

இலங்கையை ஸ்மார்ட் நாடாக கட்டியெழுப்புவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதே தமது நோக்கம் என சிறீலங்கா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

**சங்கரியார்:– எழுந்து நிற்பதற்கே தெம்பில்லை இதில் பறப்பதற்கு கனவு காண்கின்றாரோ ரணில்...?**

நெல்சன் மண்டேலாவை போல் நான் சிறைக்கு செல்வேன் என்று அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.

**சங்கரியார்:– அமெரிக்காவை என்ன கறுப்பினத்தவர்களாக ஆளுகின்றார்கள்..?**

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஜப்பான் 200 மில்லியன் யென் உதவித்தொகை வழங்க தீர்மானித்துள்ளது.

**சங்கரியார்:– 200 மில்லியன் யென் றாலைப் போட்டு எத்தனை மில்லியன் யென் சுறாவைப் பிடிக்கப்போகின்றார்களோ..?**

இலங்கையில் உள்ள மேலும் 10 இடங்களை உலக பாரம்பரிய பட்டியலில் சேர்க்க சிறீலங்கா கலாசார அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது. யுனெஸ்கோவின் உலக பாரம்பரியக் குழுவிடம் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படும் என மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காமினி ரணசிங்க தெரிவித்துள்ளார்.

**சங்கரியார்:– குருந்தூர் மலையில் பழங்காலக் கற்களில் கட்டப்பட்டுள்ள பௌத்தவிகாரையும் பாரம்பரியப் பட்டியலில் வந்தாலும் வருமோ?**



இலங்கை தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும், திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அவருடைய முதுமை காரணமாக செயற்பாட்டு அரசியலில் பங்களிப்புச் செய்யமுடியாதிருப்பதன் காரணமாக அவர் தனது பதவியைத் துறக்க வேண்டுமென அக்கட்சியின் பேச்சாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் பகிரங்கமாக கோரியுள்ளார்.

**சங்கரியார்:– கட்டையிலை போகும் வரை அவருக்கு கதிரை ஆசை போகாது என்பது சுமந்திரனுக்கு தெரியாதாமா?**

தம் இனம் சார்ந்த தீர்ப்புக்களை வழங்கமுடியாமல் போய்விடும் என்பதற்காகவே சிறுபான்மையின நீதிபதியினை மத்திய பெரும்பான்மையினர் அடக்குகின்றனர் என தமிழ் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வடமாகாண முதலமைச்சரும் ஓய்வுபெற்ற நீதியரசருமான க.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

**சங்கரியார்:– தமிழர் சிறுபான்மை இனமல்ல தேசிய இனமென்பது கூடத் தெரியாத விக்கினேஸ்வரன்தான் தமிழர்களுக்கு தலைமை தாங்க வேணும் என்று அடம்பிடிக்கிறாரா?**

## விடுதலைப் பயணத்தில்

# சில வரலாற்றுப் பதிவுகள்




எழுத்துருவாக்கம்:
ச.குணா

# மாவீரர்களுக்கு தலைவர் கொடுத்த முக்கியத்துவம்!

1998ம் ஆண்டு நடுப்பகுதியில் ஜெயசிக்குறு எனும் பெயரில் சிறீலங்காவின் முப்படையினர் நில ஆக்கிரமிப்பை மேற்கொண்டமையால் வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் கடும் தாக்குதலுக்கு இலக்காகிக்கொண்டிருந்தது. இராணுவ நடவடிக்கையால் கடும் பொருளாதாரத் தட்டுப்பாட்டில் மக்கள் அல்லல்பட்டுக் கொண்டிருந்த நேரமும் அது.



ஜெயசிக்குறு ஆக்கிரமிப்பு படைகளுக்கெதிரான மறிப்புத் தாக்குதல்கள் மற்றும் வலிந்த தாக்குதல்களை விடுதலைப் புலிகள் தலைவர் அவர்களின் நேரடி வழிகாட்டலில் நடாத்திக்கொண்டிருந்தார்கள். அதே சமயம் இவ்றறிற்கு வலுச்சேர்க்குமுகமாக விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் ஒரு பகுதியினர் (அதாவது ஆண் பெண் கடற்புலிப் போராளிகள்) கடும் காலநிலைகளுக்கும் மத்தியிலும் ஆழ்கடல் விநியோக நடவடிக்கையில் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படியும் படையினருக்கெதிரான தாக்குதலுக்கு தேவையான பொருட்களை சர்வதேசக் கடற்பரப்பு வரைசென்று சாளைத் தளத்திற்கு கொண்டுவந்து சேர்ப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். அச்சமயத்தில் முக்கிய பொருட்களடங்கிய இரு கப்பல்களும் கடற்புலிகளுக்குத் தேவையான பொருட்களடங்கிய ஒரு கப்பலும் வந்து சர்வதேசக் கடற்பரப்பில் நின்றது. அதேசமயத்தில் சீமெந்துடன் ஒருகப்பலும் வந்து கொண்டிருந்தது.

அப்போது சர்வதேச கடற்பரப்பிலிருந்தவர்களுக்கு சிறப்புத் தளபதி சூசை ஊடாக ஒரு கட்டளை வழங்கப்பட்டது. தமிழீழத் தேசியத் தலைவர் வழங்கிய கட்டளை ஒன்றையே தளபதி சூசை அவர்களுக்கு வழங்கியிருந்தார்.

அனைத்துப் பொருட்களையும் இறக்குவதை நிறுத்திவிட்டு உடனடியாக சீமெந்தை இறக்குமாறு அக்கட்டளை வந்திருந்தது. சர்வதேச கடற்பரப்பிலுள்ளவர்களுக்கும் சாளைத் தளத்திலிருந்து சென்றிருந்தவர்களுக்கும் ஒரே குழப்பம்.

இந்த நிலைமையில் சீமெந்து இறக்கிக் கொண்டிருந்தால் இராணுவம் வன்னியை பிடித்துப் விடுவார்கள் என ஒரு பகுதியினரும், அதுவரை சந்தோசமாக விநியோக நடவடிக்கையில் ஈடுபட்ட போராளிகளுக்கு என்னடா இது சீமெந்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து இறக்கிக்கொண்டு வரவேண்டியுள்ளதே என்று சலிப்புடன் விநியோக நடவடிக்கையிலும் ஈடுபட்டார்கள்.

இவையனைத்தையும் அறிந்த சிறப்புத் தளபதி சூசை அவர்கள் தலைவரிடம் இந்நிலையைத் தெரிவித்தார். அதற்குத் தலைவர் அவர்கள் ‘நாங்கள் சண்டை பிடிப்பதற்க்கு தேவையான பொருட்களை இறக்கிக் கொண்டிருந்தால் மாவீரர்களின் கல்லறைகளை மணலிலா கட்டுவது? எங்களுக்கு மாவீரர்களின் கல்லறைகள் தான் முக்கியம். அவர்களின் கல்லறைகளுக்கு தேவையான சீமெந்துகளுக்கான தேவை முடிந்ததும் மற்றைய பொருட்களை இறக்கலாம்’ எனக் கூறினார். அப்போதுதான் தலைவர் சீமெந்திற்கு ஏன் அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து இறக்குமாறு கூறினார் என்பது தளபதி சூசை அவர்களுக்குப் புரிந்தது. இதனை விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போராளிகளுக்கும் சூசை அவர்கள் தெளிவுபடுத்தினார். அதனைத் தொடர்ந்து அனைத்துப் போராளிகளும் புதியதொரு உற்சாகத்தோடு தமது விநியோகப் பணிகளில் ஈடுபட்டிந்தார்கள்.



# சரணடைந்தோரின் பட்டியலை வெளியிடுங்கள்

## சர்வதேச அமைப்பு சிறீலங்காவிடம் வலியுறுத்தல்

ஆட்கொணர்வு மனு வழக்கில் சட்டத்தரணிகளால் வேண்டுகோள் விடுக்கப்பட்டதைப்போன்று 2009 மே மாதம் 18ம் திகதி சரணடைந்தவர்களின் பட்டியலை ஒப்படைக்குமாறு 58வது படைப்பிரிவுக்குக் கட்டளையிடல் உள்ளடங்கலாக வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் தாம் சிரத்தையுடன் செயற்படுவதை நிரூபிப்பதற்கான நடவடிக்கைகளை சிறீலங்கா அரசாங்கம் முன்னெடுக்கவேண்டுமென சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து யஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: காணாமல்போனோரின் குடும்பத்தினர் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்வதற்காக பல வருடகாலமாக காத்திருக்கின்றனர். எனவே, காணாமல்போனோர் தொடர்பில் உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் சிறீலங்கா அரசாங்கம் சிரத்தையுடன் செயற்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தவேண்டிய நேரம் வந்துவிட்டது.

இலங்கையில் காணாமல்போனோரின் குடும்பத்தினர், குறிப்பாக தென் பகுதியைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து 33 ஆவது ஆண்டாக இன்றையதினம் (ஒக்டோபர் 27) தமது உறவுகளை நினைவுகூரவிருப்பதுடன், அவர்களுக்கான நீதியை நிலைநாட்டுமாறும் வலியுறுத்தவுள்ளனர். உண்மைக்கான அவர்களது நீண்டகாலத் தேடல், பல வருடங்களாகத் தொடர் கவனயீர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் மக்களின் நிலையையும் பிரதிபலிக்கின்றது.

அரசாங்கமானது சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்துவதற்காக வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தை உரியவாறு கையாள்வதாகப் பாசாங்கு செய்துகொண்டு, மறுபுறம் காணாமல்போனோரின் பெற்றோர் உயிரிழக்கும்வரை அவர்களை உண்மைக்காகக் காத்திருக்கச் செய்யக்கூடாது.

இதுவரையான காலப்பகுதியில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் பெற்றோர்கள் 125 பேர் அவர்களது பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறிந்துகொள்ளாமலே உயிரிழந்திருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. அதுமாத்திரமன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் போராட்டங்களில் பங்கேற்போர் மற்றும் நினைவேந்தல்களில் கலந்துகொள்வோரைக் கண்காணிக்கின்ற மற்றும் அவர்கள்மீது அடக்குமுறைகளைப் பிரயோகிக்கின்ற நடவடிக்கைகளும் தொடர்கின்றன.

இவ்விடயத்தைப் பொறுத்தமட்டில் சர்வதேச நியமங்கள் மற்றும் உள்நாட்டில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் பிரகாரம் உண்மையைத் தெரிந்துகொள்வதற்கான தார்மீக உரிமை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உண்டு. இருப்பினும் இதுகுறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கென சிறீலங்கா அரசாங்கத்தினால் புதிதாக நியமிக்கப்படும் பல்வேறு ஆணைக்குழுக்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதியையோ அல்லது ஆறுதலையோ தரமாட்டாது.

இவ்வாறானதொரு பின்னணியில் மாத்தளை மனிதப்புதைகுழி தொடர்பில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர்களால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்துக்கு சிறீலங்கா அரசாங்கம் உடனடியாகப் பதிலளிக்கவேண்டும். அதேபோன்று 1987 - 1990 வரையான காலப்பகுதியில் பணியாற்றிய சகல மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பாளர்களின் பெயர் விபரங்களை வெளியிடவேண்டும். அதேவேளை இக்காலப்பகுதியில் வலிந்து காணாமலாக்கல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள காவல்துறை மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் எதிராகப் பரிந்துரைக்கப்பட்ட நீதிமன்ற வழக்குகளின் முன்னேற்றம் குறித்து நாடாளுமன்றத்துக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

மேலும், ஆட்கொணர்வு மனு வழக்கில் சட்டத்தரணிகளால் வேண்டுகோள் விடுக்கப்பட்டதைப்போன்று 2009 மே மாதம் 18 ஆம் திகதி சரணடைந்தவர்களின் பட்டியலை ஒப்படைக்குமாறு 58வது படைப்பிரிவுக்குக் கட்டளையிடவேண்டும். இராணுவத்தின் 58ம், 59ம் மற்றும் 53ம் படைப்பிரிவுகளின் கட்டளைத்தளபதிகள் மற்றும் துணைத் தளபதிகள் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும்.

இவ்வாறு சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்திட்டம் வலியுறுத்தியுள்ளது.



கந்தரதன்

# தாயகத்திலும் புலத்திலும் சிதைக்கப்படும்

# தமிழ்த் தேசிய தலைமுறைகள் !

புலம்பெயர் நாடு ஒன்றில் வாழும் இளைஞர் ஒருவர், தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர் ஒருவரைப் பார்த்துக் கேட்கிறார், 'இலங்கையில் தான் எல்லாம் முடிந்து விட்டதே, மக்கள் நல்ல மகிழ்ச்சியாகத்தானே இருக்கிறார்கள். இப்போது அங்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எங்கும் போகலாம். எங்கும் வரலாம். நீங்கள் இன்னும் ஏன் போராடுகிறீர்கள்... தமிழீழத்தை எடுத்து என்ன செய்யப் போகிறீர்கள்...?' என்று.

இவ்வளவிற்கும் கேள்வி கேட்ட குறித்த நபர், புலம்பெயர் வாழ் தமிழ் மக்களுக்கு வீடு எடுத்துக் கொடுத்து அந்தத் தரகுப்பணத்தில் வாழ்பவர் என்பது மட்டுமல்லாமல், ஆரம்ப காலத்தில் தென்னிந்தியப் பிரபலங்களை அழைத்து களியாட்ட நிகழ்வுகளை ஏற்பாடுசெய்து பெரும் பணத்தை ஈட்டிய பெரும் புள்ளியாக இருந்தவர் என்பது வேறுவிடயம்.

இவருடைய கேள்விக்கு அந்த செயற்பாட்டாளர் கூறிய ஒரே பதில், 'இளைய சமுதாயம், நாளைய தலைமுறை அங்கு எப்படி இருக்கிறார்கள் என்று மட்டும் சொல்லுங்கள்...என்று கேட்டவுடன் அவர், இளையோரின் நிலை மோசமாகத்தான் இருக்கிறது என்றாராம்.

இவ்வாறே, புலம்பெயர் நாடு ஒன்றில் வர்த்தக நிலையம் ஒன்றில் பணிபுரியும் தமிழ்த்தேசிய ஆர்வலர் ஒருவரிடம் வாடிக்கையாளரான தமிழர் ஒருவர் கேட்கிறார், அங்குதான் எல்லாம் முடிந்துவிட்டதே, இன்னும் ஏன் ஜெனிவாவில் தொடர்ச்சியாக போராட்டம் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.... என்று கேட்கிறார். அதற்கு குறித்த ஆர்வலர் தாயகத்தில் இன்று அத்துமீறிய பௌத்த விகாரைகள் அதிகளவில் உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இது பற்றிய புரிதல் இன்றி இளம் சமுதாயத்தினர் கண்டும் காணதவர்களாக அங்கு தமது தனிப்பட்ட சுயநலத்துடன் ஆடம்பரங்களுக்கு அடிமையாகிப் பயணித்துக்கொண்டிருக்கின்றனர். இதனை சாதகமாக்கியே சிங்கள இனவாதம் தமது அத்துமீறல்களை அரங்கேற்றிக்கொண்டிருக்கின்றது. இதற்கு பெரும்பாலான தமிழர்களே துணைபோகின்றமையும் வேதனையிலும் வேதனை. தமிழர் தாயகத்தில் இந்நிலை தொடர்ந்தால் தமிழ் மக்களின் இருப்புக்கே ஆபத்து விளையும். இதனைச் சர்வதேசத்திற்கு உணர்த்தவே ஜெனிவாவில் போராட்டம் தொடர்கின்றது' என்றார்.

ஆம் நாளைய தலைமுறை மோசமான நிலைமைக்குப் போன பின், நாடு எப்படி மகிழ்ச்சியாக இருக்கப் போகிறது. நாட்டின் கண்களாக இருக்க வேண்டிய இளைய சமுதாயம் மோசமான நிலைக்குப் போய்க்கொண்டிருக்கும் நிலையில் மக்கள் நிம்மதியாக வாழ்வது எப்படி, நாடு முன்னேற்றம் காண்பது என்பது வேடிக்கைப் பேச்சே. கண்கெட்ட பிறகு எதற்கு சூரிய நமஸ்காரம் என்ற நிலையே இன்று அங்கு உள்ளது.

இந்நிலையில் முகநூல் ஒன்றில் தாயகத்தில் தமிழ்த்தேசிய செயற்பாட்டாளர் ஒருவரின் உள்ளத்தில் இருந்து உதித்த உணர்வின் வரிகள் இவை...

**எங்கள் பயணங்கள் பலருக்குத் தெரிவதில்லை...**
**உனக்கு உதுகள் வேண்டாத வேலை என்பவர்கள்**
**அக்கறையில் சொல்கிறார்களா?**
**ஆதங்கத்தில் சொல்கிறார்களா?**
**கஷ்டம் அறிந்து சொல்கிறார்களா?**
**காழ்ப்புணர்வில் சொல்கிறார்களா?**
**சத்தியமாய் தரம்பிரிச்சறிய முடியவில்லை இதுவரை...**
**நேற்றைய மழையில் கிட்டத்தட்ட ஆறு மணித்தியாலயங்கள் நனைஞ்சு தோஞ்சு காஞ்சு மீள நனைஞ்சு என காலை எட்டு முப்பதுக்கு ஆரம்பித்த பயணம்**

**இரு நூறு கிலோ மீற்றர் பயணித்து**
**இரவு 8.30 உடல் விறைச்சு வீடு வர**
**இதற்குள்**
**♦200 உயர்தர மாணவர்கள் பயன் பெறும்**
**♦கருத்தரங்கு (நான்கு நிலையங்களில்-புளியங்குளம், ஓமந்தை, புதுக்களம்)**
**♦வாரம் ஒரு முறையோ இரு முறையோ எட்டிப்பார்க்கும் அம்மா வீடு**
**♦மதிய உணவிற்காக அழைத்த நண்பனின் வீடு (ராசேந்திர குளம்)**
**♦கார்த்திகை மாத துயிலுமில்லப் பணி - ஈச்சங்குளம்**
**♦கற்பித்த ஆசானின் மரணவீடு (பண்டாரிகுளம்)**
**♦நண்பன் ஒருவனின் ஆவணம் சேகரித்தல்-(வவுனியா நகர்)**
**அத்தனையும் அடக்கம்**
**நாளும் பொழுதும் நமது வாழ்க்கை**
**இப்பிடித்தான் கடக்கிறது.**
**எத்தனை தூரம் கடந்தும்**
**எத்தனை துயரம் சுமந்தும்**
**பணிகளைச்செய்தும்**
**நமக்கொன்று ஏதும் வரும்போது**
**திரும்பி பார்க்க ஒரு நாதியுமிருக்காது**
**என்று தெரிந்துதான்**
**நாளும் பொழுதும் அத்தனை**
**பணிகளையும் ஆற்றுகின்றோம்.**

இதுதான் அந்தத் தமிழ்த் தேசியப் பணியில் நீண்டகாலமாகப் பயணிக்கும் அந்தச் செயற்பாட்டாளரின் உணர்வின் வரிகள்.

இது இவ்வாறிருக்க தாயகத்தில் அதிகளவான பேர் போதைக்கு அடிமையாகியுள்ள நிலையில், நாட்டைப் பற்றிச் சிந்திக்கும்.. சிந்திக்கவேண்டிய இளையோர்களே இன்று மேலும் இலக்குவைக்கப் பட்டிருக்கிறார்கள்.

தமிழீழத்தில் இன்று முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தென்னிந்திய திரைப்பட மோகமும் அதிகரித்துள்ளமையைக் காணலாம்.

இதற்கு இளையோர்களைக் கவர்ந்த திரைப்படக் கலை நிகழ்வுகள் பெரும் எடுப்பில் ஒழுங்குசெய்யப்பட்டு இளையோர்கள் களியாட்டங்களில் தமது நேரத்தைச் செலவிடவைக்கப்படுகின்றனர். அங்கு நடைபெறும் சீரழிவுகள் வார்த்தைகளில் வர்ணிக்க முடியாத அளவிற்கு உள்ளன. இந்நிலையில், அண்மைக் காலமாக, தென் இந்தியாவில் பிரபலம் வாய்ந்த தொலைக்காட்சிகளில் உலகெங்கும் வாழ் தமிழர்களைக் கட்டிப்போட்டுள்ள நிகழ்ச்சிகளில் தமிழீழம், மலையகம் மற்றும் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் இளையோர்கள் உள்வாங்கப்பட்டு ஒட்டுமொத்த தமிழர்களையும் போராட்டத்தை மறந்து வேறு பாதைகளில் கொண்டு செல்வதே இவர்களின் நோக்கமாக உள்ளது. இவை எல்லாம் சிறிலங்கா அரசின் நிகழ்ச்சி நிரலாக்கு உட்பட்டதாகவே உள்ளன.

இவ்வாறான மனநிலை மாற்றத்திற்கு பல்வேறு வகையில் தாயகத்தில் களம் அமைக்கப்பட்டு வருகின்றது. பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளை கட்டுப்படுத்த முடியாமல் அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் புலம்புவதையும் அவதானிக்க முடிகிறது. பெரும்பாலான இளையோர்கள் போதைக்கு அடிமையாகி வருகின்றமையும் பல அகால மரணங்களுக்கு காரணமாகிவிட்டது. இவற்றில் இருந்து காப்பதற்காக பணத்தைக் கொட்டி தாயகத்தில் இருந்து புலத்திற்கு அனுப்பி வைத்தால், புலத்திலும் பல தமிழ் இளையோர்களின் நிலை மோசமாகவே உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் எமது ஈழத் தமிழ் இளையோர்கள் பிரபல தென்னிந்திய தமிழ் திரைப்படக் கதாநாயகர்களின் பெயர்களில் மன்றங்களை அமைத்து அதனூடாகத் தமது வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளனர். இதுவும் தேசிய செயற்பாடுகளில் ஈடுபடுவதை தடுத்து, வேறுதிசைகளில் கொண்டு சென்று சீரழிப்பதே இவர்களின் இலக்காக உள்ளது.

அண்மையில், யாழ். முற்றவெளிப் பகுதியில் இடம்பெற்ற தென்னிந்திய திரை இசை நிகழ்வின்போது, அலையெனத் திரண்ட மக்கள் கூட்டம் நல்லூரில் தியாக தீபத்தின் நிகழ்வில் ஏன் கலந்துகொள்ளவில்லை என்ற சர்ச்சையும் எழுந்து சமூக ஊடகங்களில் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தது.

இதுவே தமிழ்த் தேசிய உணர்வில் இருந்து விலகி தென்னிந்திய திரைப் படங்களுக்குள் இளம் சமூகத்தினர் மூழ்கி வருகின்றமைக்கு சான்று பகர்வதாக அமைந்துள்ளது.

இந்நிலையில் மாவீரர் மாதத்தில், கடந்த நவம்பர் 3 ஆம் திகதி முதல் நவம்பர் 12 ஆம் திகதி வரை யாழ். பண்ணை கடற்கரை பூங்காவில் களியாட்டமும் உணவுத்திருவிழாவும் இடம் பெற்றுள்ளது.



தட்டிக்கேட்க ஆளில்லாத நிலையில், இவ்வாறு பல வழமைக்கு மாறான நிகழ்வுகள், தமிழ்த்தேசிய நீரோட்டத்தை சிதைக்கும் நிகழ்வுகள் தாயகத்திலும் புலத்திலும் தொடர்ந்து இடம் பெறுகின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்த அனைவரும் ஒருமித்து விரைந்து முன்வரவேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.



**போதை, வல்லுறவு, படுகொலை, திருட்டு வன்முறை... !**

# தாயகம் எதை நோக்கிச் செல்கின்றது?

♦மன்னார் பகுதியில், 17 வயதுடைய சிறுமி ஒருவரை மூவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கியுள்ளார்கள். இந்நிலையில், பாதிக்கப்பட்ட சிறுமி மற்றும் அவரின் தாயார் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மன்னார் பெரிய கமம் பகுதியை சேர்ந்த 23, 18 மற்றும் 17 வயதுடையவர்களே மேற்படி சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த மூன்று நபர்களும் சிறுமியின் நிர்வாணப்படத்தை வைத்திருந்ததோடு அப்படத்தை நண்பர்களிடமும் பரிமாறி கொண்டுள்ளனர். அந்நிழற்படங்களை வைத்து சிறுமியை மிரட்டி துஷ்பிரயோக சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அதேநேரம், சம்பவத்தின் பிரதான குற்றவாளியாக சந்தேகிக்கப்படும் வாகன திருத்தகம் ஒன்றில் பணிபுரியும் 23 வயதுடைய நபர் சிறுமியை துஷ்பிரயோகம் செய்ததுடன் அவரிடம் இருந்து 2 ஆயிரம் ரூபாய் பணத்தையும் வலுக்ககட்டாயமாக அபகரித்துள்ளார்.

♦யாழ்ப்பாணம் - நாவற்குழி பகுதியில் மனைவியை கொலை செய்துவிட்டு தப்பிச் செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் கணவன் கைது செய்யப்பட்டுள்ளார். நாவற்குழி ஐயனார் கோயிலடியில் வசிக்கும் அஜந்தன் யமுனா (வயது 23) என்கிற இரண்டு பிள்ளைகளின் தாய் கொலை செய்யப்பட்ட நிலையில், ஒக்டோபர் 16ம் திகதி சடலமாக மீட்கப்பட்டார். சடலம் மீட்கப்பட்டபோது வீட்டில் கணவன் இல்லாத காரணத்தால் கணவரே கொலை செய்திருக்க வேண்டும் என்கிற சந்தேகம் வலுத்தது. அதனையடுத்து, கணவரை தேடிய நிலையில், யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு அண்மையில் முச்சக்கரவண்டியில் சந்தேக நபர் தப்பிக்க முற்பட்ட வேளை கைது செய்யப்பட்டார். விசாரணையின்போது, தான் மனைவியை தாக்கிய பின்னர், வீட்டை விட்டு வெளியேறிவிட்டதாகவும், மனைவி உயிரிழந்தது தனக்குத் தெரியாது என்றும் கணவன் தெரிவித்துள்ளார்.

♦தலைமன்னார் உருமலை பிரதேசத்தில் கடந்த ஒக்டோபர் 16ம் திகதி 4 கிலோ கிராமுக்கும் அதிக ஐஸ் போதைப் பொருள், 1 கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் 5 கிலோ கிராமுக்கும் அதிக ஹசீஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்துக் கொண்டிருந்த படகொன்று சோதனைக்குட்படுத்தப்பட்டபோது, குறித்த படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த போதைப்பொருட்களின் பெறுமதி 94 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும்.

♦எங்களது சாவுக்கு யாரும் காரணமல்ல, இது நாங்கள் எடுத்த முடிவு எங்களுக்கு வாழவே பிடிக்கவில்லை என கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டு இரண்டு மாணவிகள் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளனர். சுரேஸ்குமார் தனிகை (வயது 17), லோகேஸ்வரன் தமிழினி (வயது 17) ஆகிய இரு மாணவிகளுமே லோகேஸ்வரன் தமிழினியின் வீட்டுச் சமையலறையில் கடந்த ஒக்டோபர் 16ம் திகதி தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளனர். இவர்கள் இருவரும் இறுதியாக நடைப்பெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுக்காக காத்திருக்கும் மாணவிகள் ஆவர்.

♦யாழ். உடுவில் பகுதியில் அதிக போதை வஸ்து பாவனையால் ஒருவர் உயிரிழந்துள்ளார். உடுவில் பகுதியைச் சேர்ந்த விஜயராசா நிரஞ்சன் (வயது 34) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த நபரின் சகோதரர்கள் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் இவர் தனது தாயாருடன் உடுவில் பகுதியில் வசித்து வந்துள்ளார். இந்நிலையில் அவர் ஒக்டோபர் 26ம் திகதி கழிப்பறைக்கு சென்றுவிட்டு நீண்ட நேரம் திரும்பி வரவில்லை. இந்நிலையில் தாயார் கதவை திறக்க முற்பட்டபோது அது திறபடவில்லை. இந்நிலையில் தாயார் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்த வேளை அவர் இறந்த நிலையில் காணப்பட்டுள்ளார். அவரது சடலம் மீது மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளின்படி அதிக போதைப் பொருள் பாவனை காரணமாக குறித்த மரணம் சம்பவித்துள்ளதாக தெரிய வந்துள்ளது. அவரது வீட்டிலும் போதைப்பொருள் ஏற்றும் ஊசி உள்ளிட்ட பொருட்கள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

♦யாழ்ப்பாணம் - நெடுந்தீவு பகுதியில் வீடொன்றில் தனிமையில் இருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் ஐஸ் போதை பொருளை அளவுக்கு அதிகமாக நுகர்ந்தமையால் உயர் குருதி அழுத்தம் ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது. நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கடந்த ஒக்டோ

பர் 30ம் திகதி சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இளைஞனின் உறவினர்கள் வெளியூரில் வசிக்கும் நிலையில் அவர்களின் வீட்டினை இளைஞனே பராமரித்து வருவதுடன், வீட்டின் பாதுகாப்புக்காக அந்த வீட்டில் தங்கியும் இருந்துள்ளார். இளைஞனின் வீடு அருகில் உள்ளதால், தனது வீட்டிற்கு உணவுக்காக சென்று வரும் நிலையில், சம்பவத்தன்று உணவருந்த இளைஞன் வராததால், வீட்டார் இளைஞனை தேடி சென்றபோது, பூட்டிய வீட்டினுள் படுக்கையில் இளைஞன் சடலமாக காணப்பட்டுள்ளார்.

♦ கிளிநொச்சி கோணாவில் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஊற்றுப்புலம் கிராமத்தின் நாற்சந்தியில் இவரது சடலம் காணப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர் கிளிநொச்சி கோணாவில் கிராமத்தைச் சேர்ந்த புஸ்பராசா தினேஸ்கரன் (30 வயது) எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொலைக்கான காரணம் தெரியவரவில்லை.

♦ பிறந்து ஒரு நாளே ஆன சிசுவை கொடூரமான முறையில் கொலை செய்த முல்லைத்தீவு பெண்ணிற்கு ஐந்து வருட கடுழியச் சிறைத்தண்டனை முல்லைத்தீவு மேல் நீதிமன்றம் விதித்துள்ளது. இதற்கு மேலதிகமாக பத்தாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளதுடன், அபராதத்தை செலுத்த தவறினால் ஆறு மாத மேலதிக சிறைத்தண்டனையும் அனுபவிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. 2017ம் ஆண்டு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் குழந்தையைப் பெற்றெடுத்த பின்னர் கழுத்தை நெரித்துக்கொன்ற குற்றத்திற்காகவே இந்த தண்டனை விதிக்கப்பட்டது. தான் பெற்றெடுத்த ஒரு நாளே ஆன சிசுவை கொன்று, உடலை இரகசியமாக புதைத்ததாக, அவர் மீது தாக்கல் செய்த குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டது.

♦ கிளிநொச்சி இராமநாதபுரம் மாயவனூர் பகுதியில் 23 வயதுடைய குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த நவரத்தினராசா மதுசன் என்பவர் பொல்லால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளார். ஒக்டோபர் 25ம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடையொன்றில் இருந்து வெளியே வந்த போதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் மனைவி மற்றும் குழந்தைகளை விட்டு தந்தையின் மரணச் சடங்கிற்கு சென்ற இளைஞரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

♦ திருகோணமலை - துறைமுக கிறீன் வீதியில் பரிசு கொடுக்க வந்துள்ளதாக கூறி வீட்டுக்குள் வந்த வாலிபர் ஒருவர் வீட்டில் இருந்த முதாட்டியிடம் இருந்து ஐந்து பவுண் தங்க சங்கிலியை அபகரித்து சென்றுள்ளார். இலக்கத்தகடு இல்லாத இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு இளைஞர்களால் மேற்படி கொள்ளை இடம்பெற்றதாக கூறப்பட்டுள்ளது.

♦ பாடசாலைக்கு ஒழுங்காக வரவில்லை என மாணவியை கண்டித்த ஆசிரியர் மீது மாணவியின் தந்தை உள்ளிட்ட இருவர் தாக்குதல் நடாத்தியுள்ளனர். யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதியில் பாடசாலைக்கு ஒழுங்கான வரவில்லை எனும் காரணத்தால் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மாணவியை கண்டித்ததால், அந்த பாடசாலை நிர்வாகத்துடன் முரண்பட்டு அந்த பாடசாலையில் இருந்து விலகி, பருத்தித்துறை பகுதியில் உள்ள பிறிதொரு பாடசாலையில் இணைந்து கற்றல் நடவடிக்கையை ஆரம்பித்தார். புதிதாக சேர்ந்த பாடசாலைக்கும் மாணவி ஒழுங்காக சமூகமளிக்கவில்லை. அதனால் பாடசாலை ஆசிரியர் ஒருவர் மாணவியை கண்டித்துள்ளார். இந்நிலையில், பாடசாலைக்கு சென்ற மாணவியின் தந்தையும், பிறிதொருவருமாக பாடசாலை வாசலில் காத்திருந்து, பாடசாலைக்கு வெளியே ஆசிரியர் வந்தபோது, ஆசிரியர் மீது சரமாரியாக தாக்கியுள்ளனர். அதனால் காயமடைந்த ஆசிரியர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். ஆசிரியரை தாக்கிய மாணவியின் தந்தை உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டனர்.

♦ மன்னார் முருங்கன் பள்ளக்கமம் பகுதியில் அம்புலன்ஸ் வண்டியில் ஐஸ் போதைப்பொருள் கடத்தப்பட்ட சம்பவத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அம்புலன்ஸ் சாரதி தப்பியோடி உள்ளார். முருங்கன் ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் வங்காலையைச் சேர்ந்த சாரதி ஒருவரும், வவுனியா வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியரும் 179 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இரவு முருங்கன் பாடசாலைக்கு பின்புற மைதானத்திற்கு அம்புலன்ஸில் சென்றிருந்த நிலையில் சிறீலங்காக் காவல்துறையினருக்கு கிடைத்த தகவலையடுத்து தடுத்து நிறுத்தி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில், குறித்த இரு நபர்களும் காவல்துறையினரை கடித்து தாக்கிய நிலையில், பிரதான சந்தேக நபரான அம்புலன்ஸ் வண்டி சாரதி தப்பி ஓடியுள்ளார். மற்றைய நபரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர். அத்தோடு, அம்புலன்ஸ் வண்டி மற்றும் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த அம்புலன்ஸ் வண்டி சாரதியான பிரதான சந்தேக நபர் முன்னதாக பல்வேறு கடத்தல் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாகவும், அம்புலன்ஸ் வண்டி பல தடவைகள் கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, அம்புலன்ஸ் சாரதி உடனடியாக பதவி நீக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.





♦ யாழ். தாவடி பகுதியில், 10 வயதுச் சிறுவனுக்கு மதுபானத்தை அருந்த

கொடுத்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேகநபர் முச்சக்கர வண்டியினுள் வைத்து குறித்த சிறுவனுக்கு மதுபானத்தை அருந்தக் கொடுத்துள்ளார். இது குறித்து சிறுவனின் தாயார் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். இந்நிலையில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். சிறுவனின் தந்தை வேலை நிமித்தமாக வெளிநாட்டில் வசித்து வருகிறார்.

♦ யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை கரையோரப் பகுதியில் 41 மில்லியன்



பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். வட்டுக்கோட்டை கடற்கரையினை அண்மித்த வீதியொன்றில் பயணித்-துக்கொண்டிருந்த முச்சக்கரவண்டியொன்றை சோதனைக்குட்படுத்திய போது அதிலிருந்த 104 கிலோ கேரள கஞ்சாவை கைப்பற்றியுள்ளனர். 3 சாக்கு மூடைகளில் இருந்து 50 பொதிகள் கொண்ட கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் இருவர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 25 மற்றும் 40 வயதுடைய மாதகல் மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

♦ யாழ்ப்பாணத்தில் வெள்ளை வானில் வந்தவர்கள் வீடு புகுந்து பணம் மற்றும் நகை என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர். வடமராட்சி கிழக்கு, வத்திராயன் பகுதியில் உள்ள வீடொன்றினுள் வெள்ளை நிற வானில் சென்ற கும்பல் ஒன்றும் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து, வீட்டில் இருந்தவர்களின் அடையாள அட்டையை காண்பியுங்கள் என மிரட்டி அவர்களின் அடையாள அட்டைகளை பரிசோதித்துள்ளனர். பின்னர் வீடு புகுந்து சோதனையிட்ட கும்பல், வீட்டின் உரிமையாளர் காணி ஒன்றினை கொள்வனவு செய்வதற்காக வைத்திருந்த 5 இலட்சம் ரூபாய் பணத்தினையும், அதனுடன் இருந்த அரை பவுண் சங்கிலியையும் எடுத்து சென்றுள்ளனர்.

♦ கிளிநொச்சி கல்மடுநகர் இராமநாதபுரம் பகுதியில் வீடு ஒன்றின் மீது இரவு நேரத்தில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வீட்டுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி கல்மடு நகர் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 30 ஏக்கர் சந்திப்பதில் உள்ள வீடு ஒன்றின் மீது குறித்த சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டு குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து குறித்த வீட்டின் மீது தீமூட்டப்பட்டுள்ளதாக விசாரணைகளின் மூலம் அறியவந்துள்ளது. இதேவேளை, கிளிநொச்சி அக்கரான் குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உந்துருளி ஒன்றும் எரியூட்டப்பட்டுள்ளது.

♦ மட்டக்களப்பில் 15 வயது சிறுமியை கர்ப்பமாக்கிய 18 வயதுடைய காதலனை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் உத்தரவிட்டார். 15 வயதும் 9 மாதம் கொண்ட சிறுமிக்கு ஏற்பட்ட வயிற்றுவலி காரணமாக அவரை அவரது பெற்றோர் வைத்தியசாலையில் அனுமதித்தனர். இதன்போது ஆரம்ப பரிசோதனை செய்த வைத்தியர்கள் அவர் கர்ப்பம் தரித்துள்ளதாக கண்டறிந்தனர். குறித்த சிறுமி அதேபிரதேசத்தைச் சேர்ந்த வாகனத் திருத்தகம் ஒன்றில் வேலை செய்துவரும் 18 வயதுடைய காதலனுடன் ஏற்பட்ட உறவு காரணமாக கர்ப்பமாகியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனை தொடர்ந்து குறித்த இளைஞனை கைது செய்தனர்.

♦ முல்லைத்தீவில் ஐஸ் போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட குறித்த நபர் முள்ளியவளை பகுதியை சேர்ந்த 20 வயதுடையவர் எனவும், இவரிடம் இருந்து 486 கொக்கேன் போதை மாத்திரைகளும், 34 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

♦ யாழ்ப்பாணம் செல்வபுரம் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அப்பகுதியில் நடமாடிய இளைஞர்களை சோதனையிட்ட போது, 24 வயதுடைய இளைஞன் ஒருவரின் உடைமையில் இருந்து 250 மில்லி கிராம் ஹெரோயினும், 22 வயதுடைய மற்றுமொரு இளைஞனின் உடைமையில் இருந்து 150 மில்லி கிராம் ஹெரோயினும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

♦ கிளிநொச்சியில் 47 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. இதன்போது 44 வயதுடைய ஒருவரை கைது செய்துள்ளனர்.

♦ யாழ்ப்பாணம் கடற்பரப்பில் 54 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான கேரளா கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ். எழுவைதீவுக்கு அண்மித்த கடல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது 137 கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சாவை ஏற்றிச்சென்ற டிங்கி படகு ஒன்றுடன் இந்த சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் 3 நபர்களையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர். 56 பொதிகளில் பொதி செய்யப்பட்டு 3 மூடைகளில் போடப்பட்டிருந்த நிலையில் குறித்த கேரள கஞ்சா மீட்கப்பட்டிருந்தாகவும் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் பெறுமதி 54 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் எனவும் கைது செய்யப்பட்டவர்கள் 20 முதல் 44 வயதுடைய பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.



வேலை செய்பவர்கள்
pole emploi ஊடாக
வாகன சாரதி
அனுமதி பத்திரத்தை
இலவசமாக
பெற்றுக்கொள்ளலாம்
grâce au CPF*
AUTO ECOLE
DU TRAMWAY
குறைந்த கட்டணத்தில்
வாகனம் ஓட்டக்கற்றுத்
தரப்படும்
121 avenue Jean Jaurés - 93120 LA COURNEUVE
Tél: 01 48 35 32 14 / Tél: 09 73 20 00 41




itsmytag
Digital Business Card
www.itsmytag.com
Digital வணிக அட்டை:
எப்போதும் உங்களுடன் இருக்கும்.
சுற்றுச்சூழலை பாதுகாக்கிறது.
பொருளாதாரத்தை மிதப்படுத்துகிறது!
Code QR குறியீடு
ஊடாக உங்கள் வணிக
அட்டையை பரிமாறிக்கொள்ளலாம்.
Port : 07 69 84 60 62




லாச்சப்பலில் புதியதோர் உதயம்!
MP RAJA
JEWELLERY
அதி உயர் நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்
கனிவான சேவை
4 rue Perdonnet - 75010 Paris. Tél : 09 51 02 30 67 / 07 67 88 03 30 / 07 67 38 13 54
Email - mprajajewellery@gmail.com Metro: La chapelle / Gare du Nord




தளவமைப்பு நிபுணர்
(Spécialiste de Agencement)
BOULANGERIE, BAR, BRASSERIE, RESTAURANT,
TOUT AUTRE COMMERCES
ÉLECTRICITÉ
PLOMBERIE
MENUISERIE
PLACO
FAÇADE
STORE
MAÇONNERIE
PEINTURE
CARRELAGE
STRUCTURE MÉTALLIQUE
RIDEAUX MÉTALLIQUE
நிபுணத்துவம்
நம்பகத்தன்மை
குறித்த நேரம்
ABD ELEC
design & agencement
தொடர்புகளுக்கு
Mr Dinesh : 06 58 39 02 02




Lovely Ocean
LOVELY OCEAN
LOVELY OCEAN
இலங்கை, இந்திய
கடல் உணவு வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
13, Rue Perdonnet - 75010 Paris
Tél.: 09 53 33 25 34




**கேள்வி:– ஒரு வீட்டில் எப்போதும் மகிழ்ச்சி நிலவ என்ன செய்யவேண்டும் அரிச்சந்திரன் அவர்களே?**

எஸ்.பிரியாதேவி பிரான்ஸ்

ஒரு வீட்டில் செல்வமும் செழிப்பும் இருந்தால் மகிழ்ச்சி தானாவே வந்துவிடும். ஆனால் இந்த செல்வத்தையும் செழிப்பையும் வீட்டிற்குள் கொண்டுவருவதுதான் எப்படியென்று பலருக்கும் தெரிவதில்லை. இந்த இரண்டையும் வீட்டிற்குள் கொண்டுவருவதற்கு முன்பாக இன்னொருவரை வீட்டிற்குள் கொண்டுவரவேண்டும். அவர் வீட்டிற்குள் வந்தால் இவர்கள் இருவரும் தானாகவே வீட்டிற்குள் வந்துவிடுவார்கள். அவர் இல்லையென்றால் இவர்களும் வீட்டிற்குள் நீண்டகாலம் நிலைத்திருக்க மாட்டார்கள். இதற்கு அருமையான ஒரு ஞானியின் குட்டிக் கதை ஒன்று உள்ளது.

ஒரு குடும்பப் பெண் தன் வீட்டின் முன் சென்ற மூன்று துறவிகளைக் கண்டார். அவர்களுக்கு உணவு வழங்குவதற்கு விரும்பிய அப்பெண் அவர்கள் மூவரையும் வீட்டிற்குள்ளே வருமாறு அழைத்தாள். அவர்களில் ஒரு துறவி கூறினார்



'நாங்கள் அனைவரும் ஒன்றாக யார் வீட்டிற்குள்ளும் செல்ல மாட்டோம். எங்களில் ஒருவரைத்தான் நீங்கள் வீட்டிற்கு அழைக்கவேண்டும். அது யார் என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என்று கூறிவிட்டு தன் பெயர் செல்வம் என்று அறிமுகப்படுத்திக்கொண்டு, ஏனைய இருவரில் ஒருவர் பெயர் செழிப்பு என்றும் மற்றையவர் பெயர் அன்பு' என்றும் அறிமுகப்படுத்தினார்.

நீங்கள் அழைப்பவர் உங்கள் வீட்டிற்குள் வந்தால் எங்களின் பெயர்களைப் போலவே வீட்டிற்குள்ளும் செல்வமாக இருந்தால் செல்வம் அதிகரிக்கும், செழிப்பாக இருந்தால் செழிப்பு அதிகரிக்கும் என விளக்கமும் கொடுத்துவிட்டு, எங்களில் ஒருவர் மட்டுமே உங்கள் வீட்டுற்குள் வர முடியும். நீங்கள் உள்ளே சென்று உங்கள் குடும்பத்துடன் கலந்துரையாடி, எந்தத் துறவியை அழைக்க விரும்புகிறீர்கள் என்பதை முடிவு செய்யுங்கள் என்றும் கூறினார்.

பெண் உள்ளே சென்று இதையெல்லாம் தன் கணவரிடம் சொன்னாள். அவளுடைய கணவன் மிகவும் உற்சாகமடைந்தான். 'நாம் செல்வத்தை அழைக்கலாம்! எங்கள் வீடு செல்வத்தால் நிரப்பப்படும்' என்றான்.

மனைவி - 'நாம் செழிப்பை அழைக்க வேண்டும். அப்போதுதான் வீடு செழிப்படையும்' என்றாள். அவர்களின் பிள்ளைகள் 'நாம் அன்பை அழைக்க வேண்டும். அன்பைத் தவிர வேறு எதுவும் முக்கியமில்லை' என்றனர். அப்பெண்ணின் பெற்றோர்களும் அன்பை அழைக்கவேண்டும். வீட்டிற்குள் எப்போதும் அதுதான் நிரம்பியிருக்கவேண்டும் என்றனர்.

இறுதியில் அன்பை அழைக்கவேண்டும் என்பது பெரும்பான்மையாக இருந்ததால் அவர்கள் அன்பை அழைப்பது என்ற முடிவுக்கு வந்தனர்.

பெண் வெளியே சென்று அன்பை உள்ளே வருமாறு அழைத்தார். அன்பு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தது. மற்ற இரண்டு துறவிகளும் அன்பைப் பின் தொடர்ந்து வந்தனர். ஆச்சரியப்பட்ட பெண் துறவிகளிடம் கேட்டார் - 'நான் அன்பை மட்டுமே அழைத்தேன், பிறகு எப்படி நீங்கள் அனைவரும் வீட்டிற்குள் வருகிறீர்கள்?' என்று. அதற்கு துறவி ஒருவர் பதிலளித்தார் - 'நீங்கள் செழிப்பு அல்லது செல்வத்தை அழைத்திருந்தால், அந்த குறிப்பிட்ட துறவி மட்டுமே உங்கள் வீட்டிற்குள் நுழைந்திருப்பார். ஆனால் நீங்கள் அன்பை அழைத்தீர்கள். அன்பு ஒருபோதும் தனியாக இருப்பதில்லை. அன்பு இருக்கும் இடத்தில் எப்போதும் செழிப்பும், செல்வமும் சேர்ந்தே இருக்கும்' என்றார்.

எனவே, மகிழ்ச்சி நிலவ முதலில் வீட்டிற்குள் அன்பை நுழைய விடுங்கள். செல்வமும் செழிப்பும் நிரம்பி மகிழ்ச்சி தானாகவே வந்துவிடும்.

**கேள்வி:– புலிகளின் தங்கம் இருப்பதாகக் கூறி தமிழர் தாயகம் எங்கும் தோண்டிக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் தமிழர்களின் நிலங்கள் பாதிக்கப்படாதா...?**

ம.மயில்வாகனம் கீர்த்தல் பிரான்ஸ்

தங்கங்களை எடுப்பதற்காகத் தோண்டப்போய் கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக தமிழர்களைக் கொன்று புதைத்த எலும்புகள் வந்துவிடக்கூடாதே என்ற பேரச்சம் சிறீலங்காவிற்கு கட்டாயம் இருக்கும். ஆனாலும் தகவல் கிடைக்கும் இடங்களிலும் எல்லாம் அவர்கள் தோண்டிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். அவர்கள் தோண்டிய எந்தவொரு இடத்திலும் இதுவரை ஒரு மூக்குத்திக் கல் கூட கிடைக்கவில்லை என்றாலும் அவர்கள் நம்பிக்கை தளரவில்லை. பல இலட்சங்களைச் செலவழித்து இந்தத் தோண்டும் பணி தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது.

இந்தத் தோண்டும் பணியினால் தமிழர்களுக்கு சில நன்மைகளும் இருக்கும் என்பது இந்தக் கதையைப் படித்தபிறகுதான் எனக்கும் புரிந்தது.

ஒரு குற்றவாளி சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். சிறைக்குள் இவர் தள்ளப்பட்டதால் அவரது குடும்பம் வருமானம் இன்றிக் கடினப்பட்டது. அப்போது அவர் மனைவியிடம் இருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அதில், வருமானத்திற்கு பெரும் கடினப்படுவதாவதாகவும் ஏதாவது வழியிருந்தால் கூறுமாறும் கேட்டு மனைவி எழுதியிருந்தார். அதற்கு சிறையில் இருந்த அந்தக் கணவன் வீட்டிற்கு

பின் பக்கம் உள்ள நிலத்தில் தோட்டம் செய்து பிழைத்துக் கொள்ளுமாறு பதில் எழுதி அனுப்பியிருந்தார்.

மனைவியிடம் இருந்து அதற்குப் பதில் வந்தது. அந்தப் பின் நிலம் பற்றைகள் வளர்ந்து காடுமண்டிப் போயிருப்பதால் தன்னால் அதனைப் பதப்படுத்தி தோட்டம் செய்யமுடியாது எனக் குறிப்பிட்டிருந்தார். அதற்கு பதில் எழுதி அனுப்பிய கணவன், வீட்டின் பின் உள்ள வளவிற்குள் தான் நகைகளைப் புதைத்து வைத்திருப்பதாகவும் அவற்றைத் தோண்டி எடுத்து விற்றுப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் குறிப்பிட்டிருந்தார்.

சில நாட்களின் பின் மனைவியிடம் இருந்து பதில் வந்தது.



நீங்கள் அனுப்பிய கடிதம் நீண்ட நாட்களின் பின்பே எனக்கு வந்து கிடைத்தது. ஆனால் உங்கள் கடிதம் வருவதற்கு முன்பாக, காவல்துறையினரும் சிறை அதிகாரிகளும் எங்கள் வீட்டிற்கு வந்து பின் வளவு முழுவதையும் தோண்டி உழுதுதள்ளிவிட்டார்கள். அங்கிருந்த நகைகளையும் அவர்கள் எடுத்திருக்கக் கூடும் என்று எழுதியிருந்தார்.

அதற்கு பதில் எழுதிய கணவன், இப்போது எங்கள் நிலம் நன்றாக உழுது பதப்பட்டுள்ளது. எனவே, தோட்டம் செய்வதற்கு இப்போது வசதியாக உள்ளது. தோட்டம் செய்து வருமானத்தை ஈட்டிக்கொள் என்று குறிப்பிட்டிருந்தார்.

சிறைக்கு வரும் கடிதங்களையும் சிறையில் இருந்து போகும் கடிதங்களையும் சிறை அதிகாரிகள் பிரித்துப் படிப்பார்கள் என்பதைத் தெரிந்துகொண்டே அச்சிறைக்கைதி அதனைச் சாதகமாக்கி அவர்களை வைத்தே தன் நிலத்தை உழுது பண்படுத்திவிட்டார் என்பது இந்தக் கதையைப் படிப்பவர்களுக்குப் புரிந்திருக்கும். இப்படித்தான் அங்கே புலிகளின் தங்கம் இருப்பதாகவும், இங்கே புலிகளின் தங்கம் இருப்பதாகவும் புரளியைக் கிளப்பிவிட்டு, தங்கள் நிலங்களையும் உழவைத்துப் பதப்படுத்துகின்றார்களோ யார் கண்டது?

**கேள்வி:– *நேர்மையான மனிதர்களை இப்போது காண்பது அரிதாகிவிட்டதே. நேர்மையான மனிதர்களை அரிச்சந்திரன் காண்கின்றாரா?***

பொன்.மனோகரன் பாரிஸ் பிரான்ஸ்

நேர்மையான மனிதர்கள் உங்களை, எங்களைச் சுற்றி இன்னும் நிறையவே இருக்கின்றார்கள். பலரின் பார்வைக்குத் தான் அவர்கள் புலப்படுவதில்லை. சந்தர்ப்பம் கிடைக்காத வரைக்கும் எல்லோரும் நல்லவர்கள்தான். ஆனால், சந்தர்ப்பம் கிடைத்தும் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அதனைப் பயன்படுத்தாத நல்ல மனிதர்களும் நிறைய உண்டு. அப்படிப்பட்ட ஒருவர்தான் இந்த வீரரும். மிகப்பெரும் வெற்றி வாய்ப்பு ஒன்று கைகளுக்கு வரும் நிலையிலும், தனக்கும் தன் நாட்டிற்கும் அதனால் பெருமையும் கௌரவமும் கிடைக்கும் வாய்ப்பு இருந்தும், அந்த வாய்ப்பை கைவிட்டு நேர்மைக்கு முன்னுரிமை கொடுத்த இந்த வீரரைப் பார்த்து நான் எப்போதும் வியப்பதுண்டு.

ஐவன் பெர்னான்டஸ் (Ivan Fernandez), ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஓட்டப்பந்தய வீரர். ஓட்டங்களில் இவர் பெயர் பெற்றவர். ஒருமுறை ஒரு மரதன் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றிய இவருக்கு இரண்டாவது இடமே கிடைக்கும் என்பது உறுதியாகத் தெரிந்தது. காரணம் முன்னிலையில் கென்யாவின் வீரர் ஆபேல் முதாய் (abel Mutai) ஓடிக்கொண்டிருந்தார். அவரை வெல்வது சாத்தியமில்லை என்பது தெரிந்தது. ஆனால், இப்போது அவருக்கு ஒரு நல்வாய்ப்புச் சந்தர்ப்பம் தானாக அமைந்தது.

எல்லைக் கோட்டை அடைவதற்கு சில மீற்றர்கள் முன்பாக கென்ய வீரர் எல்லைக் கோட்டை அடைந்துவிட்டதாக கருதி தனது வேகத்தைக் குறைத்து நிற்கின்ற நிலைக்கு வந்துவிட்டார். எல்லைக்கோடு குறித்து அந்தக் கென்ய வீரர் தவறாகப் புரிந்து கொண்டிருந்ததால் ஏற்பட்ட குழப்பநிலை இது. இந்தத் தவறை அவருக்கு சற்றுப் பின்னால் வந்துகொண்டிருந்த ஸ்பெயின் வீரர் புரிந்துகொண்டார். இது எல்லைக்கோடு இல்லை இன்னும் சில மீற்றர் ஓடவேண்டும் என தனது நாட்டு ஸ்பானிய மொழியில் அவருக்கு சத்தமிட்டுக் கூறினார். ஸ்பானிய மொழி தெரியாததால் கென்ய வீரர் புரியாமல் மெதுவாக ஓட, ஐவன் பெர்னான்டெசோ அவரை பின்னாலிருந்து தள்ளிக்கொண்டு சென்று எல்லையைக் கடக்க வைத்து அவருக்கு முதலிடம்




கிடைக்கச் செய்கின்றார். பார்வையாளர்கள் அனைவரும் கைதட்டி ஆர்ப்பரிக்கின்றனர்.

பின்னர் ஊடகவியலாளர்கள் ஐவன் பெர்னான்டெசிடம், நீங்க ஏன் இப்படிச் செய்தீர்கள்? நீங்கள் முதலிடத்திற்கு வந்து இருக்கலாமே? என்று கேள்வி எழுப்ப, அது ஒரு வெற்றி ஆகாது, உண்மையான வெற்றியாளன் ஆபேல் மட்டுமே. எல்லை கோட்டின் குழப்பத்திலேயே ஆபேல் நின்று விட்டார்.

அவரை முந்தி நான் வெற்றி பெற்றிருந்தேன் என்றால் எனது தாய் கூட அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார் என்று கூறினார். அங்கே போட்டியில் இரண்டாவது இடத்தை வந்தபோதும், நேர்மையில் முதலிடத்தைப் பிடித்தார் ஐவன் பெர்னான்டெஸ்.

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

*இலத்திரனியல் முகவரி :* eelamurazu@gmail.com *குறுந்தகவலாக* (கைபேசி SMS) *: 00 33 7 81 80 81 16*



அகரன்

# இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தத்திற்கு எப்போது முடிவு?

இஸ்ரேல் தோற்றம் பெற்றது முதல் அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கு இடையே பல யுத்தங்கள் நடந்துள்ளன. அவைகளில் '6 நாள் யுத்தம்' மற்றும் 'யம் கிப்பூர்' யுத்தம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

இதில் 1973ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6ம் திகதி ஆரம்பித்து 24ம் திகதி வரை நீடித்த யம் கிப்பூர் யுத்தத்தின் 50 வருட நினைவில் அதே யம் கிப்பூர் விடுமுறை காலத்தில் இஸ்ரேல் எதிர்பார்த்திராத ஒரு தாக்குதல் ஹமாஸ் அமைப்பினரால் நடத்தப்பட்டது.

உலகமே திரும்பிப்பார்த்த இந்தத் தாக்குதலை மிகுந்த இரகசியமான ஒத்திகைகளுடன் கடல், தரை, வான் வழிகளால் அவ்வமைப்பு நடத்தியிருந்தது. இஸ்ரேலிய சிறைகளில் உள்ள பாலஸ்தீனியர்களை மீட்பதற்காக ஆக்கிரமிப்பு பகுதிகளில் வசிக்கும் இஸ்ரேலியர்களை கடத்துவதற்கான தாக்குதல்கள் இது என ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

பல பில்லியன் டொலர்களை இஸ்ரேலின் பாதுகாப்பு பலப்படுத்தலுக்காக வருடந்தோறும் ஐக்கிய அமெரிக்கா வழங்கி வருகிறது. அத்துடன் அதி நவீன கண்காணிப்பு சாதனங்களை இஸ்ரேல் தனது எல்லைகளில் கொண்டுள்ளது. அதேவேளை காசா பகுதிக்குள் பலமான உளவுப் பிரிவும் செயற்படுகின்றது.

இவ்வளவிருந்தும் பாலஸ்தீனின் ஹமாஸ் அமைப்பினர் இந்த துணிகரமான பாரிய அழிவுகளை ஏற்படுத்திய தாக்குதல்களை எப்படி மேற்கொண்



டனர் என்பதை மேற்கின் இராணுவ ஆய்வாளர்கள் இன்னமும் தேடிவருகின்றனர்.

இந்த தாக்குதல்களின் நோக்கம் நிறைவேறியுள்ளதாக கூறியுள்ள ஹமாஸ் அமைப்பு கைதிகள் பரிமாற்றம் செய்வதற்கு தேவையான இஸ்ரேலியர்களை தாம் கடத்தியுள்ளதாயும் கூறுகின்றனர்.

முதலாவது யம் கிப்பூர் தாக்குதலின் 50வது நினைவு நாட்களில் மிகப்பெரும் தாக்குதல்களை நடத்திய இந்த ஹமாஸ் அமைப்பு எப்படி தோற்றம் பெற்றது. இதன் வளர்ச்சி யாரால் எற்படுத்தப்பட்டது. இதனை அறிவதானால் சில வருடங்கள் பின் நோக்கி செல்லவேண்டும்.

இந்த விடயத்தைப்பற்றி ஆராய முற்பட்டால் மிக ஆழமாக செல்ல வேண்டிவரும். அவை எமக்கு சில பாதகமான நிலைமையை தோற்றுவிக்கலாம் என்பதால் மேலோட்டமாக இதனை நோக்கலாம்.

இஸ்ரேல் மீதான கடந்த மாத தாக்குதல்களின் பின் அந்நாட்டின் அதிபர் பென்யமின் நெத்தன்யாகு உலகிற்கு கூறுகையில் 'நாகரீகமான எல்லா சக்திகளும் ஹமாசினை தோற்கடிப்பதில் இஸ்ரேலுக்கு உதவ வேண்டும். இப்போது நாம் எமது மக்களுக்

காக மட்டும் போரிடவில்லை மாற்றாக உலகின் எந்த மூலையிலும் உள்ள காட்டுமிராண்டிகளையும் அழிப்பதற்காகவும் போரிடுகிறது' என்றார்.

இதே நெத்தன்யாகு 'பாலஸ்தீனிய அரசை நிறுவுவதைத் தடுக்க விரும்பும் எவரும் ஹமாசை வலுப்படுத்தவும் ஹமாசுக்கு பணத்தை மாற்றவும் ஆதரவளிக்கவும் வேண்டும்' என்று லிகுட் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களிடம் கூறினார். அவ்வாறு செய்வது, மேற்குக் கரையை அடிப்படையாகக் கொண்ட பாலஸ்தீனிய ஆணையம் (PA) காசாவை ஆளுவதைத் தடுக்க உதவும் என்றும் பாலஸ்தீனியர்களுக்கான பேச்சுவார்த்தை மேசையில் ஒப்பீட்டளவில் மிதவாத தன்மை கொண்ட ஒன்றுபட்ட குரல் எழுப்பப்படும் ஒரு சூழ்நிலையை தோற்றுவிக்கும். அத்துடன் காசாவில் உள்ள பாலஸ்தீனியர்களை மேற்குக் கரையில் உள்ள பாலஸ்தீனியர்களிடமிருந்து தனிமைப்படுத்துவது. இதனைத் தான் எமது மூலோபாயமாகும் என்றார்.

ஹமாஸ் அமைப்பினை இஸ்ரேல் தனது தேவைகளுக்காக பயன்படுத்திய காலம் என்பது மிகவும் நீண்டதாகும். இதன் ஆரம்பம் 70களில் எனக் கணிக்கலாம். 67இன் பாலஸ்தீன யுத்தத்தின் பின்னர் பல அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. பாலஸ்தீன அகதிகளுக்கான மீள் குடியேற்றம், கல்வி, கலாச்சாரம் போன்றவைகளின் மீட்சிக்காக இவ்வமைப்புக்கள் செயற்பட்டன என்கின்ற போதிலும், முழுமையான விடுதலையின் அவசியமும் அப்போது உணரப்பட்டது. பாலஸ்தீன விடுதலைக்கான ஓர் அமைப்பாக தோற்றம் பெற்ற இடதுசாரி மற்றும் மதசார்பற்ற பாலஸ்தீன விடுதலை அமைப்பு என்கின்ற கூட்டமைப்பில் 'பாத்தா' பிரிவிற்கு யாசர் அரபாத் தலைமை தாங்கினார். இதற்கிடையே இஸ்லாமிய சகோதரத்துவத்தின் ஒரு வெளிப்பாடாக ஹமாஸ் அமைப்பு 1978ம் ஆண்டு தோற்றம் பெற்றது. அக்காலத்தில் பெரிதான எந்தவொரு வளர்ச்சியையும் அவ்வமைப்பு கண்டிருக்கவில்லை.

இஸ்ரேலின் இரகசியமான மறைமுக உதவிகளின் விளைவாகவே மிக வேகமாக அவ்வமைப்பு வளர்ச்சியடைந்தது எனலாம். ஒற்றைக் கண்ணுடன் காணப்பட்ட க்ஷேக் அகமத் யாசீன் எனும் மதத்தலைவரின் தலைமையைக் கொண்டிருந்த ஹமாஸ் அமைப்பானது காசாப் பகுதி முழுதிலும் சிகிச்சை நிலையங்களையும் கல்வி நிலையங்களையும் அமைத்தது. இஸ்ரேலின் நிதிப் பின்னணியைக் கொண்டே இவைகளை ஹமாஸ் நிறுவியது. அத்துடன் இஸ்லாமிய பல்கலைக்கழகம் அமைவதற்கான ஒப்புதலும் வழங்கப்பட்டது.

அச்சமயம் காசாவின் ஆளுனராக இருந்த இஸ்ரேலிய இராணுவ பிரிகேடியர் ஹமாசின் ஷேக் யாசீனுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்த போதிலும் ஹமாசின் அடிப்படைவாத இஸ்லாமிய கொள்கைகள் தமக்கு எப்போதும் ஆபத்தானவை என்பதை உணர்ந்திருந்தார். ஆனால் பலம்மிக்க பாலஸ்தீன விடுதலை அமைப்பை பிளவு படுத்தும் திட்டங்களுக்காக ஹமாஸ் அமைப்பை வளர்தெடுப்பதன் அவசியமும் இருந்ததை மறுக்கமுடியாதிருந்தார்.

ஈரானின் 1979 புரட்சியானது அந்நாட்டை இஸ்லாமிய குடியரசாக மாற்றியது. இதனைத் தொடர்ந்து ஹமாஸ் மற்றும் பிற இஸ்லாமிய அமைப்புக்கள் மிகவும் வேகமான வளர்ச்சியைக் கண்டன.

ஆனாலும் இஸ்ரேலின் உதவி மட்டும் நின்று போகவில்லை. இதன் பின்னணியில் ஹமாசின் மூலமான உளவுத் தகவல் பரிமாற்றம் பிரதானமான நிகழச்சி நிரலாக இருந்தது. அதே சமயம் ஹமாசின் முக்கிய தலைவர்களும் அடையாளம் காணப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டனர்.

இஸ்ரேலின் இந்நகர்வுகளின் மூலம் பாலஸ்தீனத்தில் இரு தேச (காசா, மேற்குக்கரை) தீர்வு என்ற நிலைப்பாடு இருந்தது. அதே சமயம் தொடர்ச்சியான குடியேற்றங்களை அமைக்கும் செயற்பாடுகளும் தொடர்ந்தன.

இஸ்ரேலின் கொள்கையின்படி ஹமாஸ் அமைப்பின் செயற்பாடுகளின் ஆபத்தை விட அமைதிப் பேச்சுக்களின் ஊடாக காசாவில் அமையக்கூடிய சுதந்திர பாலஸ்தீனம் என்பதே மிகப்



பெரும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும் என்பதே.

அதேபோல் இன்று இஸ்ரேல் எதிர் பார்த்தது போல் மேற்குக்கரை நிர்வாகம் மாத்திரமே பாலஸ்தீன விடுதலை அமைப்பின் கீழும், காசாவின் நிர்வாகம் ஹமாஸ் கைகளிலும் உள்ளன. அதே சமயம் இஸ்ரேலின் கணிப்புக்களை பொய்யாக்கி ஹமாஸ் அமைப்பானது புதிய தலைமையின் கீழ் ஒரு சமயம் வளர்த்த (சுய இலாபத்துடன்) எஜ மானர்களுக்கு பெரும் அதிர்ச்சியையும் அதே சமயம் அச்சத்தையும் கூட ஏற் படுத்தி வருகின்றது என்பது மறுக்க முடியாததாகியுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் நடத்தப்பட்ட தாக்குதலை மடுத்து இஸ்ரேல் முழு அளவிலான யுத்தமொன்றை காசாவின் மேல் நடத்தி வருகின்றது. பல நூறு டாங்கிளுடன் அப்பகுதியை சுற்றிவளைத்துள்ள இஸ் ரேல், இடைவிடாத குண்டு வீச்சுக்களை யும் நடத்துகிறது. இவை தவிர கடல் வழியாகவும் நடத்தப்படும் தாக்குதல் களில் காசா மீனவர்களின் ஏராளமான படகுகள் எரியூட்டப்பட்டுள்ளன. இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகள் நேரடி ஆயுத உதவிகளை செய்துள்ள துடன் தனது கடற்படைக் கப்பல்களை யும் அப்பிராந்தியத்துக்கு நகர்த்தியுள் ளன. இவை தவிர இஸ்ரேலுக்காக யுத்தம் செய்ய ஸ்பெயினிலிருந்தும் ஒரு தொகை கூலிப்படையினர் அனுப்பப் பட்டுள்ளனர் என்ற செய்திகளும் வெளி யாகியுள்ளது.

இஸ்ரேலின் காசாவுடனான எல் லைகளில் உள்ள குடியேற்ற வாசிக ளுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டு சுய பாதுகாப்பு நடவடிக்கையும் செயல்ப் படுத்தப்படுகின்றது. இஸ்ரேலின் பக்க மாக தொடர்ந்தும் ஹமாஸ் அமைப் பினர் எறிகணைத் தாக்குதல்களை நடத்திவரும் அதேவேளை, ஊடுருவ முயலும் இஸ்ரேலிய இராணுவ அணி களுக்கு எதிராகவும் பலமான தாக்கு தல்களை நடத்துகின்றனர். தொடரும் இந்த யுத்தத்தில் மேற்குக்கரையில் நிலை கொண்டுள்ள ஹிஸ்புல்லா அமைப் பினரும் இணைந்து கொண்டுள்ளனர். காசாவில் இயங்கும் வேறு சில அமைப் புக்களும் குறிப்பாக இஸ்லாமிக் ஜிகாத் அமைப்பினரும் இஸ்ரேலிய இராணு வத்திற்கெதிராக போரிடுவதாக செய் திகள் தெரிவிக்கின்றன. இதில் நேரடி யாக சுற்றியுள்ள இஸ்லாமிய நாடுகள் தலையிடாவிட்டாலும் அங்கிருந்து சில தாக்குதல்தல்கள் நடத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. செச்சினிய குடியரசின் அதிபர், தேவை யேற்படும் பட்சத்தில் தமது படைகளை பாலஸ்தீனத்திற்காக அனுப்பத் தயாராக உள்ளதாக கூறி யுள்ளார். யேமன் மாத்திரம் இஸ்ரே லுக்கு எதிரான போரில் நேரடியாக தலையிட்டுள்ளது. அங்கிருந்து பல ஏவுகணைகள் இஸ்ரேலை நோக்கி ஏவப்பட்டன. இவற்றில் சிலவற்றை அப்பகுதியில் நிலை கொண்டுள்ள அமெரிக்க கப்பல்கள் இடைமறித்து தாக்கி அழித்ததாக அறிவித்துள்ளன. மேலும் சிரியா, ஈராக், எதியோப்பியா போன்ற நாடுகளில் நிலை கொண்டுள்ள அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய படைத் தளங்கள் அடிக்கடி தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றன. இஸ்ரேலின் கடந்த ஒருமாத கால தாக்குதல்களில் காசாவின் அநேகமான பகுதிகள் பாரிய அளவில் அழிவடைந்துள்ளன. உயிரிழப் புக்கள் 10 ஆயிரத்தை தாண்டியுள்ள தாயும் செய்திகள் கூறுகின்றன.

காசாவின் அழிவுகள் அறியக்கூடிய தாய் உள்போதும் இஸ்ரேல் தரப்பிலும் தினசரி இழப்புக்கள் ஏற்பட்டு வரு கின்ற போதிலும் வெளியுலகிற்கு அவை மறைக்கப்படுகின்றன. நடந்துவரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் வகையிலான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு, யுத்த நிறுத்தம் ஏற் படுத்தப்பட வேண்டும் என்று ஐ.நா. வாக்கெடுப்பின் மூலம் கேட்டுக்கொள் ளப்பட்டதை இஸ்ரேல் நிராகரித்து விட்டது என்பதுவும் பாலஸ்தீன கைதி களை விடுவிக்கும் செயற்பாடுகளுக் கான முன்னேற்பாடுகள் ஏற்படும் வரை இஸ்ரேலிய கைதிகளை தாம் விடப் போவதில்லை என்கின்ற ஹமாசின் நிலைப்பாடும் மாறும் வரை தற்போ தைய யுத்தத்திற்கு ஒரு முடிவு வராது என்றே தோன்றுகின்றது.





Mohan
Jewellery Mart
3/4 Fois sans Frais
(Piéce d'identité + Rib + C.B)
Mo: La Chapelle
ou Gare du Nord
201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82





மக்கள் கடை
M.K CASH & CARRY
உங்கள் தேவைகளே
எங்கள் சேவை
61, rue Louis Blanc,75010 Paris.
Tel: 01 42 05 13 67 Fax: 01 42 05 99 02




ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
Y.P.Thas JEWELLERY
சுப ஆரம்பங்களின்
ஆரம்பம்!
9, Rue Perdonnet - 75010 Paris
Tél.: 09 81 62 12 81 Port.: 06 42 17 32 69




VICHNESH SHOP
அனைத்து வகையான மளிகைப் பொருட்கள்
மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலை
பேசி அட்டைகள் மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்
8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60

Baby Baloon
பேபி பலூன் டெக்கரேஷன்
Port : 06 13 06 20 29
Tél : 01 39 80 85 23




S.P.Raju Jewellery
பழைய நகைகளுக்கு
புதிய நகைகள் வழங்குகிறோம்!!!
M La Chapelle ou Gare du Nord
199 Rue de Fbg St.Denis,
75010 Paris
Tél: 01 58 20 17 33
13 Rue Cail,
75010 Paris
Tél: 01 46 07 43 42




மாங்கல்யம்
நகை மாடம்
தரம் - நேரம் - விலை - டிசைன் - உத்தரவாதம்
பழைய நகைகளைக் கொடுத்து
அதற்கு பெறுமதியான
புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!
ஓடர் நகைகள் எதுவாயினும்
ஒரு கிழமைத் தவணையில்
உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!
122 Av Paul Vaillant Couturier - 93120 La Courneuve
Tél & Fax: 01 48 36 40 75
email: mangalyam93120@gmail.com
www.mangalyam-jewels.com




# இஸ்ரேலுக்கு உளவுபார்த்த இந்தியக் கடற்படை!

## மரண தண்டனையை எதிர்நோக்கி 8 பேர்

**தீபிகா**

இந்திய முன்னாள் கடற்படை அதிகாரிகள் எட்டு பேர், கட்டார் நாட்டு நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்திய முன்னாள் கடற்படை அதிகாரிகளாக இவர்கள் இருந்தபோதும், இவர்கள் உளவு பார்த்தது இஸ்ரேல் நாட்டிற்காக என்பதுதான் இந்தியாவை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாத இக்கட்டான நிலைக்கு இந்த விவகாரம் தள்ளியது.

மத்திய கிழக்கு நாடான கட்டாரில் உள்ள 'அல்-தாஹ்ரா (Al Dahra) குளோபல் டெக்கனோலஜிஸ் ரூ கொன்சல்டன்ஸி சேர்வீசஸ்' என்ற தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தவர்கள்தான் இவர்கள். இந்த நிறுவனம் ரோயல் ஓமான் விமானப் படையில் ஸ்குவாட்ரன்ஸ் பொறுப்பில் இருந்து ஓய்வுபெற்ற ஓமான் நாட்டைச் சேர்ந்த கமிஸ் அல்-அஜ்மி என்பவரால் நடத்தப்பட்ட அந்த நிறுவனம், கட்டார் நாட்டுக் கடற்படைக்கு பயிற்சி, பராமரிப்பு சேவைகளை வழங்கி வந்தது.

இந்நிலையில் இங்கு பணியாற்றி இந்திய முன்னாள் கடற்படையைச் சார்த்தவர்கள் எனக் கூறப்படும் கப்டன் நவ்ஜீத் சிங் கில், கப்டன் வீரேந்திர குமார் வர்மா, கப்டன் சொரவ் வசிஷ்ட், கொமாண்டர் அமித் நாக்பால், கொமாண்டர் பூர்ணேந்து திவாரி, கொமாண்டர் சுகுநாகர் பகலா, கொமாண்டர் சஞ்சீவ் குப்தா, கடற்படை சிப்பாய் ராகேஷ் கோபகுமார் ஆகிய எட்டு பேரும் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக அந்நிறுவனத்தில் பணியாற்றிவந்த நிலையில், இவர்கள் இஸ்ரேலுக்காக புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டு கடந்த 2022ம் ஆண்டு ஓகஷ்ட் மாதம் கைது செய்யப்பட்டனர். இவர்கள் எவ்வாறான புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்பது தெரியவராதபோதும் ஊடகங்கள் இவ்வாறான காரணமாக இருக்கும் எனக் குறிப்பிட்டு சில தகவல்களை வெளியிட்டுள்ளன.



கட்டார் கடற்படையில் இத்தாலிய நீர்மூழ்கிக் கப்பல்களை இணைக்கும் இரகசியத் திட்டத்தை அல்-தாஹ்ரா குளோபல் நிறுவனம் மேற்பார்வை செய்து வந்தது. அந்த அதிநவீன நீர்மூழ்கி கப்பல்களின் தொழில்நுட்ப அம்சங்கள் குறித்த விவரங்களைத் தெரிந்து கொள்ள பிற நாடுகள் ஆர்வம் காட்டுவது இயல்பு என்பதால் இவ் விவரங்களை இஸ்ரேல் புலனாய்வுத்துறையினருக்கு இந்த இந்திய முன்னாள் கடற்படையினர் சேகரித்து வழங்கியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட எட்டு இந்தியர்களுடன், அந்த நிறுவனத்தை நடத்தி வந்த கமிஸ் அல்-அஜ்மியும் கைது செய்யப்பட்டார். இவர்களது பிணை மனுக் கோரிக்கைகள் பலமுறை நிராகரிக்கப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்தனர். எனினும், கடந்த நவம்பர் மாதம் அந்த நிறுவனத்தை நடத்தி வந்த கமிஸ் அல்-அஜ்மி விடுதலை செய்யப்பட்டார். அவரது விடுதலைக்கான காரணங்களும் வெளிவரவில்லை. இந்த நிலையில், கட்டார் நீதிமன்றம் எட்டு முன்னாள் இந்தியக் கடற்படையினருக்கும் மரண தண்டனைத் தீர்ப்பை கடந்த ஒக்டோபர் இறுதியில் வழங்கியுள்ளது.

உளவுக் குற்றச்சாட்டு என்பதால் இந்த வழக்கின் விவரங்கள் எதுவும் முழுமையாக வெளிவரவில்லை. இதே




வேளை, இந்தியத் தரப்பிலும் இவர்கள் கடற்படையைச் சார்ந்தவர்கள் என்றோ அல்லது இவர்களின் பெயர் விபரங் களையோ இதுவரை வெளிப்படுத்தப் படவில்லை. எனினும், தீர்ப்பு வெளி யான நிலையில் இது குறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் கருத்து வெளி யிட்டுள்ளது. அதில், இந்தத் தீர்ப்பு குறித்து கேள்விப்பட்டதும் நாங்கள் அதிர்ச்சி அடைந்தோம். மிகவும் முக்கிய மான இந்த வழக்கின் தீர்ப்பினை முழு மையாக எதிர்பார்த்து காத்திருக்கிறோம். குற்றம் சுமத்தப்பட்டவர்களின் குடும் பத்துடனும் சட்ட குழுவுடன் பேசிக் கொண்டிருக்கிறோம். சட்ட ரீதியில் உள்ள வாய்ப்புகளை ஆராய்ந்து வரு கிறோம். இந்த வழக்கில் அதிக கவனம் செலுத்த உள்ளோம். சட்ட மற்றும் தூதரக உதவிகளைத் தொடர்ந்து அளித்து வருகிறோம். கட்டார் அதிகாரிகளுட னும் இது குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம் எனத் தெரிவித்துள்ளது.

இந்தியப் புலனாய்வாளர்கள் இந் தியாவிற்கு அருகிலுள்ள எல்லைப் புற நாடுகளான பாகிஸ்தான், சீனா, இலங்கை, வங்களாதேஷ், மாலைதீவு போன்ற நாடுகளில் புலனாய்வு நடவடிக்கைக ளில் அதிகளவில் ஈடுபடுவதாக குற்றச் சாட்டுக்கள் வந்தாலும், மத்திய கிழக்கு நாடுகளில் புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபட்டதாக ஒருபோதும் தகவல்கள் வெளியானதில்லை. பாகிஸ்தானில் உளவு பார்த்ததாக குற்றம்சாட்டப் பட்டு இந்தியாவைச் சேர்ந்த குல்பூசன் யாதவ் என்பவர் கைதாகி மரண தண் டனை விதிக்கப்பட்டுள்ளார். இவர் இந்தியாவிற்காக உளவு பார்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்டே இந்தத் தண் டனையை எதிர்நோக்கியுள்ளார். இவரை மீட்பதற்கு இந்தியா நேரடியாக பல் வேறு வழிகளிலும் தொடர்ந்து முயற்சி களை மேற்கொண்டுள்ளது. சர்வதேச நீதிமன்றத்திலும் குல்பூசன் யாதவ்வை விடுவிப்பதற்காக வழக்குப் பதிவு செய் துள்ளது.

ஆனால், கட்டாரில் மரண தண் டனையை எதிர்நோக்கியுள்ள இந்திய முன்னாள் கடற்படையின் அதிகாரிகள் இந்தியாவிற்காக அல்லாமல் வேறொரு நாட்டிற்காக உளவு பார்த்த குற்றச்சாட் டில் கைதாகி தண்டனையை எதிர்நோக்கி யுள்ளார்கள். இவர்களை எவ்வாறு மீட்பதென்பதுதான் இந்தியாவிற்கு இப்போதுள்ள சிக்கல்.

எனினும், இவர்களை மரண தண் டனையில் இருந்து காப்பாற்றும் முதற் கட்ட நடவடிக்கையை இந்தியா விரைந்து மேற்கொள்ளும் என்றே கருதப்படுகின் றது.

சிறை வைக்கப்பட்டுள்ள 8 இந்தியர் களையும் விடுதலை செய்ய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் உறுதியளித்துள் ளார். மரண தண்டனை விதிக்கப்பட்ட 8 முன்னாள் இந்திய கடற்படையின ரின் குடும்பத்தினரை மத்திய வெளியுற வுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் சந் தித்தபோது இந்த உறுதியை வழங்கி யுள்ளார். இதுகுறித்து எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், கட்டாரில் சிறை வைக்கப்பட்டுள்ள இந்தியர்க ளின் குடும்பத்தினரை சந்தித்தேன். இந்த வழக்குக்கு மத்திய அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது என உறுதியளித்தேன். அந்தக் குடும்பங்க ளின் கவலை மற்றும் வலிகளை முழு மையாகப் பகிர்ந்து கொண்டேன். இந் தியர்களை விடுதலை செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் ஜெய் சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

கட்டார் உச்ச நீதிமன்றத்தில் அந்த எட்டு பேரும் மேல்முறையீடு செய் வதற்கான முன்னெடுப்புக்களை இந் தியா செய்யும் அதேவேளை, கட்டார் அரசை இராஜிய ரீதியில் அணுகி, இவர் களின் விடுதலைக்கு சுமுகமாகத் தீர்வு காண்பதற்கு முயற்சிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.





# இஸ்ரேலின் புதிய வழி ஊடுருவல்

## இணையப் பாவனையாளர்களே


எதையும் பதிவிறக்கம் செய்யாமல், எந்த இணைப்பையும் அழுத்தாமல், இணைய விளம்பரம் மூலமாக மட்டுமே உங்கள் கணினி, செல்பேசிகளை உளவு பார்க்கும் மென்பொருளை (ஸ்பைவேர்) இஸ்ரேலிய நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளது. உளவு மென்பொருள்களுக்கு பெயர் போன நாடு இஸ்ரேல். இந்நாட்டின் பெகாசஸ் உளவு மென்பொருள் ஓரிரு ஆண்டுகளுக்கு முன் உலகின் பல நாடுகளின் அரசியலில் பெரும் அதிர்வலையை




ஏற்படுத்தியது. ஆளுங்கட்சிகள் இந்த உளவு மென்பொருள் மூலமாக எதிர்க்கட்சி தலைவர்களை வேவு பார்ப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்த உளவு மென்பொருள், அதிக பாதுகாப்பு நிறைந்த அப்பிள் செல்பேசிகளிலும் ஊடுருவும் திறன் கொண்டது.

இந்நிலையில், அடுத்த தயாரிப்பாக இன்சாநெட் எனப்படும் இஸ்ரேலிய தொழில்நுட்ப நிறுவனம் சேர்லாக் (Sherlock) எனும் புதிய உளவு மென்பொருளை உருவாக்கி இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. பொதுவாக இதுபோன்ற தீங்கிழைக்கும் மென்பொருட்கள் ஏதாவது தொடர்பை (லிங்) அழுத்தினாலோ அல்லது ஏதாவது ஒரு மென்பொருளை பதிவிறக்கம் செய்தாலோ அதன் மூலம் செல்பேசிக்குள் ஊடுருவும். ஆனால் சேர்லாக், இணைய விளம்பரம் மூலமாக நமது கணினி அல்லது செல்பேசியில் ஊடுரும் திறன் கொண்டது.

இப்போது நீங்கள் ஏதாவது ஒரு பொருளை வாங்க இணையத்தில் தேடினால் அதன் பிறகு எந்த இணையத் தளத்தைத் திறந்தாலும், நீங்கள் தேடிய பொருள் தொடர்பான விளம்பரங்கள் உங்களை துரத்திக் கொண்டே இருக்கும். இதற்காக அதிநவீன விளம்பர இணையத் தொடர்புகள் உள்ளன. இந்த இணைய விளம்பரம் மூலமாகத்தான் சேர்லாக் செல்பேசியில் ஊடுருவும். இந்த மென்பொருள் புகுந்து விட்டால், அது உடனடியாக தகவல்களை சேகரித்து, மென்பொருளை அனுப்பியவருக்கு தகவல்களை கடத்திவிடும்.




இதன் மூலம் செல்பேசி வைத்திருப்பவரின் முழு நடமாட்டத்தையும் கண்காணிக்க முடியும்.

இந்த மென்பொருளை விற்பனை செய்ய இஸ்ரேலிய அரசு அனுமதி வழங்கியுள்ளதன் மூலம், இணைய உலகில் மற்றொரு அச்சுறுத்தலான மென்பொருளாக இது மாறி உள்ளது. ஆனாலும் தற்போதைக்கு நிம்மதி தரக்கூடிய விடயமாக இந்த மென்பொருளின் விலைதான் உள்ளது. இதனைச் சாதாரணமானவர்கள் வாங்கி முடியாத அளவிற்கு இந்த மென்பொருளின் விலை மில்லியன் டொலர்களில் இருக்கின்றது.

# உலக சந்தையில் பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கும்
## உலக வங்கி எச்சரிக்கை !

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமையினால் உலக சந்தையில் பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கலாம் என உலக வங்கி தனது புதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலக வங்கியின் மதிப்பீடுகளின் அடிப்படையில், இந்த ஆண்டின் இறுதி காலாண்டில் உலக சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் 90 அமெரிக்க டொலர் வரை அதிகரிக்கக் கூடும். உலக வங்கியின் வர்த்தக பொருட்கள் மற்றும் சந்தைகளின் புதிய அறிக்கையின் பிரகாரம், இஸ்ரேலுக்கும் ஹமாஸக்கும் இடையே மோதல்கள்



ஆரம்பித்த தினம் முதல் இதுவரை மசகு எண்ணெயின் விலை 6 வீதத்தால் அதிகரித்துள்ளது.

மசகு எண்ணெயின் விலை மேலும் கடுமையாக பாதிக்கப்படுமாயின், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் உணவுக்கான பணவீக்கம் அதிகரிக்கும் என உலக வங்கியின் பிரதி தலைமை ஆய்வாளரை மேற்கோள் காட்டி குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்கிணங்க, வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பணவீக்கம் அதிகரிப்பதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என உலக வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, உணவு மற்றும் உர ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ள சில நாடுகள் அதன் கட்டுப்பாடுகளை நிறுத்தாவிடின், உலகளாவிய ரீதியில் உணவு பாதுகாப்பின்மை அதிகரித்து மற்றொரு நெருக்கடி ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# பின்லாந்தில் உலகின் முதல் இலத்திரனியல் கடவுச்சீட்டு

உலகில் முதன் முதலாக இலத்திரனியல் (டிஜிட்டல்) கடவுச்சீட்டை பின்லாந்து அறிமுகம் செய்துள்ளது. பின்எர், பின்னிஸ் காவல்துறை மற்றும் பின்ஏவியா விமான நிலைய செயற்பாட்டு அதிகாரிகளுடன் இணைந்து கடந்த ஓகஸ்ட் 28ம் திகதி இலத்திரனியல் கடவுசீட்டுக்கான திட்டத்தை பின்லாந்து அரசு தொடங்கியது.

பயண தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்த இலத்திரனியல் கடவுசீட்டுகளை சோதிப்பதற்கான ஒரு மிகப்பெரிய ஐரோப்பிய ஒன்றியத்தின் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த திட்டம் அமைந்துள்ளது.

முதலில் இந்தத் திட்டம் ஹெல்சின்கியில் இருந்து இங்கிலாந்து திரும்பும் சில விமான பயணிகளிடம் மட்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்டிசிசி எனும் விமானி செயலியை பதிவிறக்கம் செய்து பயணிகள் தங்கள் முக அங்கீகாரம் மற்றும் தரவுகளை சரிபார்க்க வேண்டும். பின்னர், பின்னிஸ் எல்லை காவல் துறையினருக்கு செயலி மூலம் இந்த தகவல்களை அவர்கள் அனுப்ப வேண்டும்.

இலத்திரனியல் கடவுசீட்டு என்பது செல்பேசி செயலியை அடிப்படையாக கொண்டது. இது, பயணிகள் தங்கள் கடவுசீட்டு தகவல்களை செல்பேசியில் சேமித்து வைத்து, தேவையான இடங்களில் உடனடியாக பயன்படுத்திக்கொள்ள உதவுகிறது. தனியாக கடவுச்சீட்டு புத்தகங்களை உடன் எடுத்துச் செல்ல தேவையில்லை.

எளிது, வேகம், பாதுகாப்பு ஆகிய மூன்று முக்கிய அம்சங்களை அடிப்படையாக கொண்ட இலத்திரனியல் கடவுசீட்டு திட்டம் சோதனை அடிப்படையில் பெப்ரவரி 2024 வரை செயல்படுத்தப்பட உள்ளது. அதன் பிறகு, இத்திட்டத்தில் உள்ள நிறை குறைகளை ஆராய்ந்து, நாடு முழுவதும் செயல்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்று பின்லாந்து தெரிவித்துள்ளது.

செல்பேசி பயன்பாடு அனைவருக்கும் அவசியமானதாக மாறியுள்ளதால் எதிர்காலத்தில் இலத்திரனியல் கடவுச்சீட்டு எல்லா நாடுகளிலும் பிரபலமாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த செயற்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் உலகம் முழுவதுமே விமான நிலையங்களில் பயணிகள் நீண்ட நேரம் காத்திருப்பது தவிர்க்கப்படும் என்று கூறப்படுகின்றது.

# ரஷ்யாவின் மனித உரிமை முயற்சி மீண்டும் தோல்வி

உக்ரைன் உடனான ரஷ்யா போர் தொடங்கியதில் இருந்தே பல்வேறு சர்வதேச அங்கீகாரங்கள் ரஷ்யாவிற்கு பறிக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் அமைப்பில் இருந்தும் வெளியேற்றப்பட்டது. இதில் தன்னை மீண்டும் இணைத்துக்கொள்ள ரஷ்யா போராடி வந்தாலும் அதில் தோல்வியையே சந்தித்தது.

இந்தநிலையில் மனித உரிமைகள் அமைப்பின் 2024-2026 ஆண்டிற்கான உறுப்பினர்கள் தேர்தல் ஐ.நா. சபையில் நடந்தது. கிழக்கு ஐரோப்பா பிராந்தியத்துக்காக ஒதுக்கப்பட்ட 2 இடங்களுக்கு ரஷ்யா, பல்கேரியா, அல்பேனியா ஆகியவை போட்டியிட்டன. ஐ.நா பொதுச்சபையை சேர்ந்த உறுப்பினர் நாடுகளை முன்னிறுத்தும் வகையில் 193 பிரதிநிதிகள் இரகசிய வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர்.

இதில் பல்கேரியாவுக்கு ஆதரவாக 160 வாக்குகளும், அல்பேனியாவுக்கு ஆதரவாக 123 வாக்குகளும் கிடைத்தன. ரஷ்யாவுக்கு ஆதரவாக 83 வாக்குகளே கிடைத்தன. இதனால் ஐ.நா. சபையின் மனித உரிமை அமைப்பில் இடம்பெறும் ரஷ்யாவின் முயற்சி மீண்டும் தோல்வி அடைந்தது.

# ஈரானில் 7 மாதங்களில் 419 பேருக்கு மரண தண்டனை!

ஈரானில் கடந்த 7 மாதங்களில் 419 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றி இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஈரான் அபாயகரமான விகிதத்தில் மரண தண்டனைகளை நிறைவேற்றுவதாக குற்றம் சாட்டியுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் அன்டோனியா குட்டெரெஸ், இந்த ஆண்டின் முதல் 7 மாதங்களில் மட்டும் 419 பேரை அந்த நாடு தூக்கிலிட்டு கொன்றுள்ளதாக அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

2022ம் ஆண்டு இதே காலகட்டத்தை ஒப்பிடுகையில் இது 30 வீதம் அதிகம் என்று அதில் கூறப்பட்டுள்ளது. 2022 செப்டம்பரில் முறைப்படி ஹிஸாப் அணியவில்லை என்று கூறி அறநெறி




காவலர்களால் கைது செய்யப்பட்ட 22 வயது மஹ்ஸா அமினி கொலையை தொடர்ந்து ஏற்பட்ட போராட்டம் தொடர்பாக ஈரானில் இதுவரை 7 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளதாக குட்டெரெஸ் கூறியுள்ளார். இந்த 7 வழக்குகளிலும் நீதித்துறையின் நடவடிக்கைகள் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் நியாயமாக நடைபெறவில்லை என்றும் குட்டெரெஸ் தெரிவித்துள்ளார்.

## மீனைச் சைவமாக்க கோரிக்கை!

நாம் உண்ணும் மீனில் ‘ஒமேகா 3’ சத்து நிறைந்திருக்கிறது. எனவே மீன் உணவை சைவ உணவில் சேர்ப்பதன் மூலம் அதனை அதிகமான மக்கள் சாப்பிட முடியும் என்று தெலங்கானா, புதுச்சேரி ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் கூறியுள்ளார். காரைக்கால் மீன்பிடி துறைமுக வளாகத்தில் நடைபெற்ற




நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில், மீன்

நாம் உண்ணும் மீனில் ‘ஒமேகா 3’ சத்து நிறைந்திருக்கிறது. எனவே, மீன் அதிகமாக சாப்பிடுபவர்களுக்கு பெரும்பாலும் மாரடைப்பு வராது. மீன் உணவை சைவ உணவில் சேர்ப்பதன் மூலம் அதனை அதிகமான மக்கள் சாப்பிட முடியும். எப்படி முட்டையில் அதிகமான புரோட்டின் இருந்ததால் அதை அசைவத்தில் இருந்து சைவமாக மாற்றி இருந்தார்களோ, அதைப்போல மீனையும் மாற்ற வேண்டும். இதனை ஆளுநராக இல்லாமல் மருத்துவராகவும் கூறுகிறேன். மீனை சாப்பிட ஆரம்பித்தால் எளிதில் அதனை விட்டுவிட முடியாது என்றார்.

## திரைப்படமாகும் டைட்டன் நீர்மூழ்கி விபத்து!

ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்த கப்பல் விபத்துடன், காதல் கதையை இணைத்து ஹொலிவுட் இயக்குநர் ஜேம்ஸ் கமரூன் எடுத்த டைட்டானிக் படம் உலகம் முழுவதும் பெரும்




வெற்றி பெற்றது. 1912 ஆம் ஆண்டு கடலுக்குள் மூழ்கிய டைட்டானிக் கப்பலை பார்வையிடுவதற்காக 2023 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட டைட்டன் நீர்மூழ்கி கப்பலும் கடந்த யூன் மாதம் விபத்தில் கடலுக்குள் மூழ்கியது.

அதையடுத்து டைட்டானிக் போலவே, டைட்டன் விபத்தை வைத்தும் ஜேம்ஸ் கமரூன் படமெடுக்க உள்ளார் என்ற தகவல் வெளியானது. இதனை ஜேம்ஸ் கமரூன் மறுத்தார். இந்நிலையில், மைண்ட் ரியாட் எண்டெர்டெயின்மெண்ட் என்ற நிறுவனம் டைட்டன் நீர்மூழ்கி விபத்து சம்பவத்தை வைத்து படமெடுக்கப் போவதாக அறிவித்துள்ளது. சால்வேஜ் எனப் பெயரிடப்பட்ட இப்படத்தின் முன் தயாரிப்பு பணிகள் தொடங்கி விட்டதாகவும் கூறப்படுகிறது.

டைட்டானிக் கப்பல், அமெரிக்காவின் நியூஃபௌண்ட்லாண்ட் தீவுக்கு 740 கி.மீ. தொலைவில் கடலடியில் உடைந்து கிடப்பது 1985ம் ஆண்டில் கண்டறியப்பட்டது. இந்த நிலையில், டைட்டானிக் கப்பலை பார்வையிடுவதற்கு சுற்றுலா பயணிகளை அழைத்துச் செல்வதற்காக ஓசன்கேட் எக்ஸ்பெடிசன்ஸ் என்ற அமெரிக்க தனியார் நிறுவனம் நீர்மூழ்கி ஒன்றை வடிமைத்



தது. பிரித்தானியாவின் தொழிலதிபர் ஹமீஷ் ஹார்டிங், ஓ’ன்கேட் நிறுவனத்தின் நிறுவனர் ஸ்டாக்டன் ரஷ், நீர்மூழ்கி மாலுமியும் பிரான்ஸ் கடற்படையின் முன்னாள் கொமாண்டோவுமான பொல்-ஹென்றி நார்கியோலே, பாகிஸ்தான் தொழிலதிபர் சேஸ்தா தாவூத், அவரது மகன் சுலைமான் தாவூத் ஆகிய 5 பேருடன் டைட்டன் நீர்மூழ்கி கப்பல் கடலில் இறங்கியது.

சுமார் 4 கி.மீ. ஆழத்தை நோக்கி சென்று கொண்டிருந்த அந்த டைட்டன் நீர்மூழ்கி அட்லாண்டிக் பெருங்கடலின் மிக அதிகமான அழுத்தத்தால் கடலுக்குள்ளேயே வெடித்து, அதில் பயணம் செய்த 5 பேரும் உயிரிழந்தனர்.

## அண்டார்டிகாவில் சீன ஆய்வு தளம் !

அண்டார்டிகாவில் புதிய ஆராய்ச்சி மையம் ஒன்றை கட்டியெழுப்ப சீனா திட்டமிட்டுள்ளது. ராஸ் கடலின் கடலோர பகுதியில் 5வது ஆராய்ச்சி மையத்திற்கான கட்டுமான பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்த பணியை 2024ம் ஆண்டு பெப்ரவரிக்குள் நிறைவு செய்வது என சீனா திட்டமிட்டுள்ளது. இதற்காக 80 சீன மையங்களை சேர்ந்த 460 ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கட்டுமானப் பொருட்கள் அடங்கிய சரக்கு கப்பல் ஒன்றும் செல்ல இருக்கிறது. இந்த கட்டுமான பணியுடன் கூட, அண்டார்டிகாவின் சுற்றுச்சூழலில் பருவநிலை மாற்றத்தினால் ஏற்பட கூடிய பாதிப்பு பற்றி ஆராய்ச்சிக்குழு ஆய்வு மேற்கொள்ளும். இதேபோன்று, உலகளாவிய பருவநிலை மாற்றத்தில் இந்தப் பகுதியின் பங்கு பற்றியும் ஆய்வு நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு அண்டார்டிகாவில் அமையவுள்ள புதிய தளத்துடன், செயற்கைக்கோள் நிலையம் ஒன்றும் மற்றும் கண்காணிப்பகமும் அமைக்கப்படும் என்று கூறப்படுகின்றது.



# உலக நாடுகளே

## மீண்டும் அணு ஆ

## ரஷ்ய நாடாளும

உலகம் முழுவதும் அணு ஆயுத சோதனைகள் மற்றும் அணு ஆயுதங்கள் பயன்படுத்துவதை தடை செய்யும் வகையில் 1996ம் ஆண்டு விரிவான அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டது. ரஷ்யா - அமெரிக்கா இடையே பனிப்போர் மூண்டிருந்த காலத்தில் அது அணு ஆயுதப் போரை தோற்றுவிக்கலாம் என்ற அச்சம் காரணமா ஐ.நா. பொதுச் சபையால் இந்த ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டது.

உலக அணுசக்தி சோதனை தடை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு உலகநாடுகள் கடைபிடிக்கவும் வலியுறுத்தப்பட்டது. இந்த



ஒப்பந்தத்தின்படி உலகநாடுகள் அணு ஆயுத சோதனையில் ஈடுபடகூடாது என கூறப்பட்டு வந்தது. அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட 178 நாடுகள் இந்த சர்வதேச அணு ஆயுதப் பரிசோதனைத் தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன.

அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் இந்த ஒப்பந்தத்தின்படி நடந்து வருவதாக கூறப்பட்டாலும் சீனா, இந்தியா, பாகிஸ்தான், வடகொரியா உள்ளிட்ட நாடுகள் இந்த ஒப்பந்தத்தை ஏற்கவில்லை. ஐ.நா. பொது சபையால் கொண்டுவரப்பட்ட இந்த ஒப்பந்தத்தை, முக்கிய 8 நாடுகள் அங்கீகரிக்காததால் ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை.

இந்நிலையில் விரிவான அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தத்தில் இருந்து விலக ரஷ்யா முடிவு செய்தது. இதுதொடர்பாக ரஷ்ய நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்யப்பட்டு விவாதிக்கப்பட்டது. அப்போது, உலகளாவிய பாதுகாப்பு விடயத்தில் அமெரிக்காவின் பொறுப்பற்ற அணுகுமுறை காரணமாக விரிவான அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தத்திற்கு அளித்த அங்கீகாரத்தை ரஷ்யா திரும்பப் பெறுவதாக சபாநாயகர் தெரிவித்தார். மசோதாவை ஆதரித்து உறுப்பினர்கள் பேசினர்.

விவாதத்திற்கு பிறகு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்த கருத்துடன் மசோதாவை ஆதரித்து வாக்களித்தனர். இதனால் மசோதா நிறைவேற்றப்பட்டது. இனி

### தங்களது பொறிக்குள்ளேயே

## சீன நீர்மூழ்கி சிக்கிக்கொண்டதா?

அமெரிக்க கப்பல்களுக்கு எதிராக சீனா வைத்திருந்த கடலடிப் பொறியில் சிக்கி, அந்த நாட்டுக்குச் சொந்தமான நீர்மூழ்கிக் கப்பலே சேதமடைந்து 55 சீன மாலுமிகள் மரணமடைந்தனர் என பிரித்தானிய உளவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது குறித்து உளவுத்துறை அறிக்கையை மேற்கோள் காட்டி ஊடகங்கள் கூறியுள்ளதாவது, அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகளின் கப்பல்களை சேதப்படுத்துவதற்காக மஞ்சள் கடல் பகுதியில் சீனா கடலடி பொறியை அமைத்துள்ளது.

அந்த வழியாக சென்று கொண்டிருந்த சீன கடற்படைக்குச் சொந்தமான 093-417 வரிசை எண் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல்,



ஒகஸ்ட் 21ம் திகதி அந்தக் கடலடிப் பொறியில் சிக்கியது. இதில் அது சேதமடைந்து, நீர்மூழ்கிக் கப்பலுக்குள் இருந்தவர்களுக்கு பிராணவாயு செல்வது நின்றுபோனது.

இதனல் அதிலிருந்த 55 மாலுமிகள் மூச்சுத் திணறி உயிரிழந்தனர். அவர்களில் கப்பல் கப்டன் உட்பட 21 அதிகாரிகளும் அடங்குவர். இந்த சம்பவத்தை சீன அரசு இரகசியமாக வைத்துள்ளது. எனினும், 093-417 நீர்மூழ்கிக் கப்பல் காணாமல் போனது குறித்து அப்போதே சந்தேகம் எழுப்பப்பட்டது. தற்போது இந்தத் தகவலை பிரித்தானிய உளவுத்துறை வெளியிட்டுள்ளது. மிகவும் இரகசியமாகப் பாதுகாக்கப்பட்ட இந்த விவகாரம் கசிந்துள்ளதற்குக் காரணமானவர்களைக் கண்டறிய சீன அரசு விசாரணை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று ஊடகங்கள் தெரிவித்துள்ளன. ஆனால் இவ்வாறான ஒரு சம்பவம் நடந்த தகவலை சீனா முற்றிலும் மறுத்துள்ளது.

# க பாதுகாப்புக

## யுத சோதனைகள்

## மன்றம் ஒப்புதல்

மேல் சபையின் (பெடரல் சபை) ஒப்புதலை பெற வேண்டும். மேல் சபை உறுப்பினர்கள் ஆதரவு அளிப்பதாக ஏற்கனவே கூறியுள்ளதால் மேல்சபையிலும் மசோதா எளிதாக நிறைவேறும்.

உக்ரைனுக்கு மேற்கத்திய நாடுகள் இராணுவ ஆதரவை வழங்கியதால் அதிருப்தி அடைந்த ரஷ்யா, அணு ஆயுத சோதனைகளை மீண்டும் தொடங்கலாம் என்ற கவலைகள் ஏற்கனவே எழுந்திருந்தன. அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் படையெடுத்தது. இந்தப் போரில் அமெரிக்காவும், அதன் மேற்கத்திய கூட்டணி நாடுகளும் நேரடியாகத் தலையிட்டால் அவை வரலாற்றில் சந்தித்திராத மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று ஆரம்பம் முதலே ரஷ்ய அதிபர் விளாடுமீர் புட்டின் எச்சரித்து வருகிறார்.



உக்ரைனோடு ஒப்பிடுகையில் ரஷ்யா பன்மடங்கு பலம் வாய்ந்ததாக இருந்தாலும், நேட்டோ கூட்டணி நாடுகளுடன் பாரம்பரிய முறையில் போரிடுவது (அணு ஆயுதப் பயன்பாடு இல்லாத போர்) ரஷ்யாவுக்கு சாதகமாக அமையாது. இதன் காரணமாகவே, அந்த நாடுகள் மீது அணு ஆயுதத் தாக்குதல் நடத்தப்படும் என்று ரஷ்யா மிரட்டல் விடுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

தற்போதைய நிலையில், உலகிலேயே ரஷ்யாவிடம்தான் எண்ணிக்கையிலும், சக்தியிலும் அதிக அணு ஆயுதங்கள் உள்ளன. இந்தப் போரில் அமெரிக்காவும், பிற மேற்கத்திய நாடுகளும் உக்ரைனுக்கு கோடிக் கணக்கான டொலர் மதிப்பு கொண்ட ஆயுதங்களை வழங்கி உதவினாலும், அதில் நேரடியாகப் பங்கேற்பதைத் தவிர்த்து வருகின்றன. இதற்கு, ரஷ்யாவின் அணு ஆயுத பலம் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அணுசக்தியால் இயங்கும், அணு ஆயுதம் ஏந்தி உலகில் எந்த மூலைக்கும் சென்று தாக்குதல் நடத்தக்கூடிய புதிய தலைமுறை ஏவுகணையான புரேவெஸ்ட்னிக்கை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளதாக புட்டின் கடந்த ஒக்டோபர் 5ம் திகதி அறிவித்திருந்தார்.

அப்போது அவர், ‘அணு ஆயுத சோதனைகள் தடை ஒப்பந்தத்தில் ரஷ்யா கையொப்பமும் இட்டு, அதற்கு சட்ட அங்கீகாரமும் வழங்கியுள்ளது. ஆனால் அந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ள அமெரிக்கா, இதுவரை அதற்கு சட்ட அங்கீகாரம் அளிக்கவில்லை. எனவே, ரஷ்யா வழங்கியுள்ள சட்ட அங்கீகாரத்தை இரத்து செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன’ என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது அணு ஆயுத சோதனைகள் தடை ஒப்பந்தத்துக்கான சட்ட அங்கீகாரத்தை ரஷ்யா இரத்து செய்துள்ளது. இது உலக அளவில் அணு ஆயுதப் போருக்கான வாய்ப்புக்கள் குறித்த அச்சத்தை அதிகரித்துள்ளது.




தொகுப்பு
விதுரன்

## தென்கொரியாவின் இராணுவக் கண்காட்சியில்

### 55 நாடுகளின் 200ற்கு மேற்பட்ட நிறுவனங்கள்

தென்கொரியாவின் சியோங்னம் படைத்தளத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பாதுகாப்பு தளவாடங்களின் கண்காட்சி கடந்த ஒக்டோபர் மாதம் ‘ஏ.டி.எக்ஸ்-2023’ என்ற பெயரில் சியோங்னாம் அருகே உள்ள விமான தளத்தில் இடம்பெற்றது. இக்கண்காட்சியில் இம்முறை 55 நாடுகளின் 200ற்கும் மேற்பட்ட நிறுவனங்களும் பங்கேற்றிருந்தன. அத்துடன், இந்த கண்காட்சியில், அமெரிக்கா, கனடா, பிரேசில் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட நாடுகளின் இராணுவ உயர் அதிகாரிகளும் கலந்துக் கொண்டிருந்தனர்.


தென்கொரிய அதிபர் யூன் சுக் இயோல் இக் கண்காட்சியைத் தொடங்கிவைத்திருந்தார். தொடக்க விழாவில் தென் கொரிய பாராசூட் படை பிரிவினருடன் பன்னாட்டு வீரர்கள் விமானத்தில் இருந்து குதித்து நடத்திய சாகசங்கள், தென்கொரியாவின் பல்வகை இராணுவ விமானங்களின் அணிவகுப்பு, சாகசங்கள் என்பன பிரமாண்டமாக இடம்பெற்றிருந்தன.




இந்த கண்காட்சியில், இராணுவ போர் வாகனங்கள் (டாங்கிகள், கவசவாகனங்கள்...) மற்றும் ஏவுகணைகள், போர் விமானங்கள், ராடார்கள், ஏவுகணை தடுப்பு அமைப்புகள் உள்ளிட்ட தளவாடங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

கொரிய தீப கர்ப்பத்தில் வடகொரியாவின் தொடர் ஏவுகணை சோதனைகளால் பதற்றம் நிலவி வரும் நிலையில், பாதுகாப்பு கருதி தென்கொரியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா நாடுகளுடன் தென்கொரியா போர் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில் தங்களது இராணுவ வலிமையை பறைசாற்றும் விதமாக மிகப்பெரிய அளவில் பாதுகாப்பு தளவாடங்களின் கண்காட்சியை தென்கொரியா நடத்தி வருகிறது.

அத்துடன், 2027ம் ஆண்டுக்குள் இராணுவ தளவாட ஏற்றுமதியில் உலகின் 4வது பெரிய நாடாக மாறுவதை தென்கொரியா நோக்கமாக கொண்டு செயல்படுகிறது. அதன் ஒருபகுதியாக 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை பெரிய அளவிலான இராணுவக் கண்காட்சியை தென்கொரியா நடாத்தி வருகிறது.


NATHIYA
JEWELLERY
நீங்கள் விரும்பும் டிசைன்களில்
தங்க நகைகளைச்
செய்து பெற்றுக் கொள்வதற்கு...
இன்றே நாடுங்கள்!
நதியா
6, rue Perdonnet, 75010 Paris
Tel: 09 84 30 65 44 / Port: 06 58 07 03 26


மொத்த
விற்பனையாளர்கள்
APPA
CASH & CARRY
52 Av. Jean Jaurès,
93120 La Courneuve
Tél: 09 71 55 94 11
Port: 07 69 19 98 65
appa.cc.lc@gmail.com


Seine-et-Marne (77) வாழ் மக்களின் வசதிக்காக
தமிழ்க்கடை – பல்பொருள் வாணிபம்
EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள்
மற்றும் கடலுணவு வகைகள்
Ria
MoneyGram
money transfer
WESTERN UNION
MONEY TRANSFER
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000


COPIE COURNEUVE
Photocopie & Impression
N & B et Couleur
Relliur Metallique et plastique
Plastification
Cartes de Visite
Flyer et Affiche
Fax & Email
Tampon
Vierges & Duplication
CD / DVD / Bluray / VHS
Création Jaquette
அறிவித்தல்கள்
விளம்பரங்கள்
வியாபரஅட்டைகள்
மற்றும் சகல
அச்சுப்பதிப்பு வேலைகளும்
மலிவு விலையில் விரைவாக
செய்து தரப்படும்.
Ria
92 Bis Av.Paul Vaillant Couturier
93120 La Courneuve
Tel : 01 48 51 68 14
E-Mail : copie93120@gmail.com


காப்பீட்டு நிறுவனம்
வீட்டுக் காப்பீடு, வாகனக் காப்பீடு,
ஆயுள் காப்பீடு, மருத்துவக் காப்பீடு,
மோட்டார் சைக்கிள் காப்பீடு,
வர்த்தகக் காப்பீடு என அனைத்தும்
நீங்கள் தமிழில் உரையாடி
நியாயமாக பெற்றிட...
SMART-ASSU
TÉL.:
01 48 09 48 67
130 rue du Fbg Saint Denis - 75010 Paris
39 Rue Jean Jaurès - 93200 Saint Denis
contact@smart-assu.fr
www.smart-assu.fr


ACTIF
ASSURANCE
Tél.: 09 83 06 14 13
165 Av. de la République
93140 BONDY
வாகனக் காப்புறுதி!
இலங்கை சாரதிப் பத்திரத்திற்கு
காப்புறுதி செய்து தரப்படும்
வீட்டுக் காப்புறுதி,
மருத்துவக் காப்புறுதி மற்றும் அனைத்தும்...
AUTO
www.actif-assurance.com




# வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

## நொக்கியா நிறுவனத்தில் 14 ஆயிரம் பேருக்கு வேலையிழப்பு!

நொக்கியா நிறுவனத்தில் 14 ஆயிரம் பேர் வேலையிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வருவாய் பற்றாக்குறை மற்றும் செலவுகளைக் குறைக்கும் நோக்கத்தில் பணியாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதாக நொக்கியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

பின்லாந்தை தலைமையிடமாகக் கொண்ட நொக்கியா நிறுவனம், செல்பேசி உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறது.2007ம் ஆண்டின் இறுதி வரை உலக அளவிலான செல்பேசி விற்பனையில் பாதி அளவுக்கு நொக்கியா செல்பேசியாக இருந்தது. அப்பிள், சாம்சுங் செல்பேசிகளின் வரவினால் 2010ம் ஆண்டுக்குப் பிறகு விற்பனையில் சரிவை சந்தித்தது. எனினும் முன்னணி நிறுவன தயாரிப்புகளுக்கு இணையாக புதிய வகைச் செல்பேசிகளை அறிமுகம் செய்து உலக சந்தையில் போட்டியில் தொடர்ந்து நின்றது. தற்போது மற்ற நிறுவனங்களுக்கு இணையாக 5ஜி இணைய சேவை கொண்ட செல்பேசிகள் உற்பத்தியிலும் நொக்கியா களமிறங்கியுள்ளது.





எனினும் நடப்பாண்டின் 3வது காலாண்டில் 5ஜி உற்பத்தி செல்பேசிகள் விற்பனை 20 வீதம் வரை குறைந்துள்ளது. மொத்த வருவாய் 40 வீதம் குறைந்துள்ளது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் விற்பனை பெருமளவு குறைந்துள்ளது. இவைகளின் காரணமாக நிறுவனத்தில் பணிபுரியும் 86,000 ஊழியர்களின் எண்ணிக்கையில் 16 வீதம் நொக்கியா நிறுவனம் குறைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இதனால், ஆட்குறைப்பிற்குப் பின்னர் நிறுவனத்திலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 72,000 முதல் 77,000 ஆக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

## வசூல் சாதனையில் திரும்பிப் பார்க்க வைத்த படம்

திரைப்படங்கள்தான் வசூலில் சாதனை படைக்கும். ஆனால் ஒரு நிகழ்சித் தொகுப்பு அந்தச் சாதனைகளை எல்லாம் முறியடித்துச் சாதனை படைத்துள்ளது. அமெரிக்காவின் புகழ்பெற்ற பாடகியான டெய்லர் ஸ்விஃப்ட் நடத்திய இசை நிகழ்ச்சிகளின் தொகுப்பு The Eras Tour என்கிற பெயரில் திரைப் படமாக வெளிவந்துள்ளது. படம் வெளியான வார இறுதியில் மட்டும் உலகம் முழுவதும் கிட்டதட்ட 123.5 மில்லியன் அமெரிக்க டொலர் வருவாயை ஈட்டியுள்ளது. ஹொலிவுட்டின் நட்டச்சத்திரப் படங்களுக்கு இணையான வரவேற்பைப் பெற்றுள்ள இந்தத் திரைப்படம், ஒக்டோபரில் வெளியான ஹொலிவுட் படங்களை விட அதிக வருவாய் ஈட்டியுள்ளது. 2019ல் வெளியான ஜோக்கர் 96.2 மில்லியன் அமெரிக்க டொலர் வருவாய் ஈட்டியதுதான் அதிகபட்ச சாதனையாக முன்பு இருந்தது.

கலிபோர்னியாவில் நடந்த இசை நிகழ்ச்சிகளின் தொகுப்பாக உருவாக்கப்பட்டுள்ள இத்திரைப்படம் வெளியாவதாக இருந்த தினத்துக்கான நுழைவுச்சீட்டுக்கள் விற்ற வேகத்திற்கு அத்தனை காட்சிகளை திரையிட இயலாது என்பதால் ஒரு நாள் முன்னதாக திரைப்படம் வெளியானது. உலகம் முழுவதும் டெய்லர் ஸ்விஃப்ட்டுக்கு



ஏராளமான இரசிகர்கள் உள்ளனர். அவர் நடத்துகிற இசைநிகழ்ச்சிகள் ஒரு மாகாணத்தின் பொருளாதாரத்தையே உயர்த்துவதாக அமைகின்றன. டெய்லர் ஸ்விஃப்ட்டே தயாரித்துள்ள இந்தப் படம், ஹாலிவுட் ஸ்டார் படங்களுக்கு ஈடாக தனது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

## எக்ஸின் புதிய கட்டணத் திட்டம்!

முன்னர் ட்விட்டர் என்கிற பெயரால் அறியப்பட்ட எக்ஸ், சமூக வலைத்தளம் தனது பயனர்களுக்கு புதிய சந்தாத்தாரர் திட்டம் ஒன்றைச் சோதனை முயற்சியாக வெளியிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இந்தத் திட்டத்தில் சந்தாத்தொகை செலுத்தாத பயனர்கள், இனிமேல் எக்ஸ் தளத்தில் பதிவிடவோ தாங்கள் காண்கிற ட்விட்டுகளுக்கு விருப்பக் குறியோ, பின்னூட்டமோ உள்ளிட முடியாது. இதில் இணைய ஒரு ஆண்டுக்கான சந்தாத்தொகை, ஒரு அமெரிக்க டொலராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு நாட்டுக்கும் அந்த நாட்டின் பணமதிப் பேற்கேற்ப மாறும்.

இந்தத் திட்டத்திற்கு 'நொட் ஏ பாட் (செயற்கை பயனர் அல்ல)' எனப் பெயர் வைத்திருக்கிறார்கள். ஆரம்பகட்டமாக இது பிலிப்பைன்ஸ் மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



பிரிமீயம் இல்லாத பயனர்களுக்கு இந்தத் திட்டம் பொருந்தும். ஏற்கெனவே, பயனர்களாக இருப்பவர்களுக்கு இதனால் பாதிப்பு ஏற்படாது எனவும் தெரிவித்துள்ளது எக்ஸ். போலி பதிவுகள் (ஸ்பேம்), செயற்கையான கணக்குகள் (பாட்), பாரபட்சமான கையாளுகை ஆகியவற்றை முடக்கும் எங்களின் வெற்றிகரமான செயலுக்கு வலுவூட்டும் விதத்தில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கென மிகக் குறைவான கட்டணமே வசூலிக்கிறோம். இந்தத் திட்டம் நிச்சயமாக இலாபத்தை உயர்த்தும் நோக்கில் செயல்படுத்தவில்லை எனக் கூறியுள்ளது எக்ஸ் தளம். எலான் மஸ்க் ட்விட்டர் தளத்தை வாங்கியது முதல் அதன் பயனர்களுக்கு பல அதிர்ச்சிக்குரிய அறிவிப்புகள் வந்த வண்ணம் உள்ளன. சமீபத்தில் பயனர்கள் குறிப்பிட்டளவுக்கு மேல் பதிவுகளைக் காண இயலாது என்கிற அப்டேட் வெளியானது.

## 13 சீன நிறுவனங்களுக்கு அமெரிக்கா தடை

சீனா, ரஷ்யா மீது ஏராளமான பொருளாதார தடைகளை அமெரிக்கா விதித்துள்ளது. இந்த நிலையில் 13 சீன நிறுவனங்களுக்கு ஏற்றுமதி தடைகளை விதித்து அமெரிக்க வர்த்தகத்துறை உத்தரவிட்டுள்ளது. அமெரிக்காவின் தேசிய நலன் மற்றும் வெளியுறவு கொள்கைக்கு எதிரான செயல்பாடுகளை கொண்டிருப்பதாக கூறி இந்த நிறுவனங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. கணினி மற்றும் மின்னணு கருவிகளுக்கான சிப் தயாரிப்பு நிறுவனமான மூர் திரெட் இன்டெலிஜென்ட் டெக்னாலஜி நிறுவனம் மற்றும் அதன் துணை அமைப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பாகிஸ்தானுக்கு உதவிய 3 சீன நிறுவனங்களுக்கும் அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்துள்ளது. பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வரும் பாகிஸ்தானுக்கு அதன் நட்பு நாடான சீனா பல்வேறு உதவிகளை செய்துள்ளது. இந்தநிலையில் நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துவதாக கூறி பாலிஸ்டிக் ஏவுகணைகள், டிரோன்கள் உள்ளிட்ட நவீன ஆயுதங்களை பாகிஸ்தான் தயாரித்து வருகிறது. இதற்கு தேவையான பொருட்களை பாகிஸ்தானுக்கு சீனாவில் உள்ள நிறுவனங்கள் வழங்கியதாக அமெரிக்கா குற்றம்சாட்டியது. இதனையடுத்து ஜெனரல் டெக்னொலஜி லிமிடெட், லுவோ லுவோ தொழில்நுட்ப வளர்ச்சி கழகம் மற்றும் சாங்சோ உடெக் கம்போசிட் ஆகிய 3 சீன நிறுவனங்களுக்கு அமெரிக்கா கடும் பொருளாதார தடைகளை விதித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் மேத்யூ மில்லர் கூறும்போது, பேரழிவு ஏற்படுத்தும் அணு ஆயுத தயாரிப்பு அல்லது கொள்முதல் ஆகியவற்றில் ஈடுபட எந்த நாட்டையும் அமெரிக்கா அனுமதிக்காது என்று தெரிவித்துள்ளார்.

## சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் டிவிட்டருக்கு அவுஸ்திரேலியா அபராதம்

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிக்காததால் எக்ஸ் (டிவிட்டர்) நிறுவனத்துக்கு அவுஸ்திரேலியா இ பாதுகாப்பு ஆணையம் அபராதம் விதித்துள்ளது. அவுஸ்திரேலியாவின் இ பாதுகாப்பு ஆணையமானது, சிறார் பாலியல் சுரண்டல், மிரட்டி பணம் பறித்தல் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகத்தின் நேரடி ஒளிபரப்பு ஆகியவற்றை எவ்வாறு கையாள்கிறீர்கள் என டிவிட்டர் மற்றும் கூகுள் நிறுவனங்களிடம் விளக்கம் கேட்டது. ஆனால் 2 நிறுவனங்களும் விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிக்கவில்லை. இந்நிலையில் இ பாதுகாப்பு ஆணையம், டிவிட்டர் நிறுவனத்துக்கு 385,000 டொலர் அபராதம் விதித்து உத்தரவிட்டுள்ளது. இதனை எதிர்த்து எக்ஸ் நிறுவனம், அவுஸ்திரேலியாவின் உச்ச நீதிமன்றில் மேல்முறையீடு செய்யும் என கூறப்படுகிறது.



இதேவேளை, கூகுள் பிராந்திய இயக்குனர் லூசிண்டா கூறுகையில், கூகுள் நிறுவனம் பாலியல் துஷ்பிரயோக உள்ளடக்கங்களை முன் கூட்டியே கண்டறிந்து அகற்றுவதற்கும், புகாரளிப்பதற்கும் பல தொழில்நுட்பங்களை உருவாக்கியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## கிரிப்டோ நாணயங்களை ஏற்க பெராரி நிறுவனம் திட்டம்

இத்தாலி நாட்டின் பிரபல கார் தயாரிப்பு நிறுவனமான பெராரி, அமெரிக்காவில் பெராரி கார்களை விற்க கிரிப்டோ நாணயங்கள் என்னும் இலத்திரனியல் பணத்தை பெறும் முறையை நடைமுறைப் படுத்தியுள்ளது. பிட்கொயின், டோகிகொய்ன் போன்ற இலத்திரனியல் பணங்களின் நிலையில்லா தன்மை காரணமாக பெரும்பலான நாடுகள் அதனை அங்கீகரிக்க மறுத்து வருகின்றன. இருப்பினும் ஈக்குவடோர் போன்ற சில நாடுகளில் இந்த இலத்திரனியல் பணங்களை அரசு வங்கிகளே அறிமுகம் செய்துவைத்து ஏற்றுக்கொள்ள தொடங்கியுள்ளன.

இதுகுறித்து பெராரி நிறுவனத்தின் தலைமை சந்தைப்படுத்தல் மற்றும் வணிக அதிகாரி என்ரிகோ கல்லிரா கூறியதாவது, கிரிப்டோ நாணயங்கள் போன்ற இலத்திரனியல் பணங்களை பயன்படுத்துவதன் மூலம் பூமி மாசுப்பாடு குறைந்து கரிம அடித்தடம் (கார்பன் புட்பிரிண்ட்) குறையும் என்றார். முதற்கட்டமாக அமெரிக்காவில் இந்தமுறையை அறிமுகம் செய்துள்ள அந்தநிறுவனம், கூடியவிரைவில் ஐரோப்பாவில் தொடங்கும் என கூறப்படுகிறது. ஏற்கனவே எலான் மஸ்க் தனது டெஸ்லா நிறுவன கார்களை வாங்க கிரிப்டோ நாணயங்களை செலுத்தலாம் என கூறியது நினைவுக் கூரத்தக்கது.


கபறினா இறைச்சிக்கடை
தினமும் உடன் இறைச்சி
வகைகளையும்,
விசேடமாக
ஆட்டிறைச்சிப் பங்கையும்
பெற்றுக்கொள்ள...
BOUCHERIE GABARINA
62, Rue Louis Blanc
75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76
207, rue fbg st Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30


பாரிஸ் லா சப்பலில்
பல் பொருள் அங்காடி
AMBAAL
STORE
192, rue du Fbg.st.Denis
75010 Paris
Tél: 01 42 05 41 85


Rapid
Emballages
உங்கள் உணவகம், இல்லம்
மற்றும் மண்டப நிகழ்வுகளுக்கான
உபயோகப் பொருட்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள...
1 Bis rue du chemin vert,
93800 Epinay sur Seine
Tel : 0158340422 / 0616812200


மாலா
மளிகை
மலிவிற்கு மறுபெயர்
MALA
அனைத்து
மளிகைப் பொருட்களும்
ஒரே இடத்தில் - உயர் தரத்தில்
60 Rue Louis Blanc, 75010 Paris
Tél : 01 40 34 42 49
M°: La Chapelle ou Gare du Nord


THE TRAVEL COMPANY
PARIS
Lourdes
Espagne
Portugal
Partout en Europe
சொகுசுப் பேருந்து சேவை
LOCATION D'AUTOCARS
15 முதல் 93 இருக்கைகள்
15 À 93 PLACES
தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு
SETRA
20-24 Rue Gay Lussac
95500 GONESSE
Tél.: 01.34.29.08.51 | 06.58.75.05.09
contact@thetravelcompanyparis.fr


AGP
IMMOBILLIER
A VENDRE
வீடு வாங்குவதற்கும், விற்பதற்கும்
கடன் தேவைகளிற்குமான
ஆலோசனைகளுக்கு நம்பிக்கையுடன் நாடுங்கள்
AGENCE GRAND PARIS
01 82 30 22 60
ACHAT · VENTE · LOCATION · GESTION
திரு.சிவா:
104, Avenue de la Division Leclerc, 93350 Le Bourget
0182302260 - 0665660305
: agplebourget@gmail.com




“ஒரு விடுதலை வீரனின் சாவு, ஒரு சாதாரண மரண நிகழ்வல்ல அந்தச் சாவு ஒரு சரித்திர நிகழ்வு, ஓர் உன்னத இலட்சியம் உயிர்பெறும் அற்புதமான நிகழ்வு. உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை, அவனது உயிராக இயங்கி வந்த இலட்சிய நெருப்பு என்றுமே அணைந்து விடுவதில்லை.”

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்

# தமிழீழத்தேசிய மாவீரர்நாள்

# JOURNÉE DES HÉROS 2023

La mort d'un combattant de la liberté n'est pas une mort ordinaire mais un événement historique. Un événement merveilleux où un ambition prend vie. En réalité, un combattant de la liberté ne meurt jamais. L'ambitiin de sa vie ne s'éteindra jamais

- Le Leader National du Tamil Eelam MR. V. PRABAKARAN -

**LE GRAND DÔME, 3 RUE DU GRAND DÔME, 91140 VILLEBON-SUR-YVETTE**

**திங்கட்கிழமை 12:00 மணி**

( Massy Palaiseau தொடருந்து நிலையத்திலிருந்து மண்டபத்துக்கான சிறப்பு வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன )

( மண்டப வளாகத்தில் 800 வாகனங்களுக்கான தரிப்பிட வசதிகள் உள்ளன )

( MASSY-PALAISEAU ) RER B RER C ( தொடர்பு இல : 06 95 94 69 68 )

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - பிரான்சு ( 01 48 22 01 75 )